எ : 95

உ

திருத்தணிகேசன் துணை

# தணிகை நாயகன் மாலை

மறைமலையடிகள் நூல் நிலையம்
MARAIMALAI ADIGAL LIBRARY
MADRAS-1

தணிகைமணி

ராவ்பஹதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை எம். ஏ.

இயற்றியது

(918)

August 1943

*All Rights Reserved*

292, லிங்கசெட்டித் தெரு, சென்னை

[விலை **0—4—0**

M. I. P. PROJECT
Microfilmed.

உ

பாரத்வாஜி
முகவைக் கண்ண முருகனர்
அருளியது

திருத்தணிகை நாயகன் சேவடிக்கே காதற்
கருத்துணவு செய்த களிப்பான்—மருத்தணியா
தோங்குமண மாலை யுவந்தணிந்தா னுண்டியளித்
தாங்குசெங் கல்வரா யன்.

40327

# முகவுரை

திருத்தணிகேசன் திருவருளாற் சென்ற சுபானு வருஷம் ஆவணி 1உ (15—8—1883) பூராட நாளிற் பிறந்த அடியேனுக்கு இப்பொழுது அறுபது ஆண்டு நிறைவாகின்ற நலங் கருதித் திருத்தணிகேசனது திருவருளைப் பாராட்டிப் போற்றி 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' அவன் அளித்த சொன்மலர்களைக் கொண்டு அவன் திருவடிகளிலே சமர்ப்பித்த மாலையாகும் இந் நூல்.

தணிகை நாயகனே! தேவர் கோன் மகளை ஏற்ற உனது திருவருள் வேடர் மகளையும் ஏற்றதல்லவா? அது போலப், பெருமானே! நக்கீரர், அருணகிரி நாதர் ஆதிய பெருந் தமிழ்ப் புலவர்கள் பாடிய திருப்பாடலை ஏற்றருளிய நீ

"அடியேன் உரைத்த புன் சொல்
அது மீது நித்தமுந் தண்
அருளே தழைத்துகந்து—வரவேணும்"

சுபாநு ஹூ
15—8—1943 } வ. சு. செங்கல்வராய பிள்ளை.

உ

திருத்தணிகேசன் துணை

# சிறப்புப் பாயிரம்

பஞ்சலக்ஷண சரபம் இராசப்ப நாவலர் பௌத்திரரும்
பூவிருந்தவல்லி போர்டு உயர்தரப்பாடசாலைத் தமிழாசிரியருமாகிய

## திருவாளர் ஜ. ராஜு முதலியார் அவர்கள்

இயற்றியது

1. அணிகைநா டோறுங் குவித்தடி யவர்கள்
அடிமலர் வணங்கி வாழ்த் தோதுந்
தணிகைநா தன்பாற் சமைந்தபே ரன்பாற்
றகைபெறப் புனைந்தணி வித்தான்
'தணிகைமா மணி'யென் றறிஞர்க ளிசைத்த
தகைபெறு செங்கல்வ ராயன்
மணிகளிற் சிறந்த மணிகளாய்த் தேர்ந்தோர்
மாலையை மாண்புற மாதோ.

2. வம்மினோ வுலகீர்! தணிகைநா யகன்றன்
மலரடிக் கிசைந்தமா லையிதைக்
கைம்மலர் கூப்பித் தணிகைநா யகன்றன்
கழலிணை யணிந்துள மலரைப்
பெய்ம்மினோ வீடு பெறுமினோ என்று
பேசுவ தன்றிநன் காய்ந்தால்
எம்மனோ ரெங்ங னினியநன் மாலை
யிதன்பெருஞ் சிறுரைப் பதுவே?

3. உள்ளவு மினிக்கும் உரைக்கவு மினிக்கு
முன்னியே யேட்டினி லெழுதிக்
கொள்ளவு மினிக்குங் கேட்கவு மினிக்குங்
குமரநா யகன்றிரு வடிக்கே
பள்ளநோக் கியநல் வெள்ளநீ ரென்னப்
பத்திமை யளித்திடு மின்ப
வள்ளலாந் தணிகை நாயகன் மாலை
மணிநெடுங் கடலுல கினிலே.

# பொருள் அடக்கம்

[ எண் - பாட்டின் எண் ]


| | |
|---|---|
| காப்பு ... ... ... | க |
| தோத்திரம் ... ... ... | 1, 2 |
| ஆறு படைவீடு ... ... ... | 3, 4 |
| முருகர் பெருமை ... ... ... | 5 - 7 |
| முருகர் வீரம் ... ... ... | 8 |
| முருகர் சகல கலா வல்லப மூர்த்தி ... | 9 |
| முருகர் நாம விசேடம் ... ... | 10, 11 |
| பிரமனெடும் நக்கீரரொடும் லீலை ... | 12 |
| இடும்பனெடு லீலை ... ... ... | 13 |
| ஔவையொடு லீலை ... ... | 14 |
| மாடு மேய்ப்போனய் வந்த லீலை ... | 15 |
| திருப்புகழ் வெளியிடத் தந்தையார்க் கருளியது | 16 |
| துணை நீயே என்பது ... ... | 17 |
| கிளி விடு தூது ... ... | 18 |
| வண்டு விடு தூது ... ... ... | 19 |
| தன் குறைகூறித் தண்ணருள் வேண்டுதல் ... | 20-63 |
| முருகரை வைதல் ... ... ... | 64 |
| இறைவனெடு மன்ருடுதல் ... ... | 65-85 |
| நன்றி பாராட்டல் ... ... | 86-96 |
| வேல், மயில், சேவல் சிறப்பு ... ... | 97-100 |
| தணிகைச் சிறப்பு முதலிய ... ... | 101-107 |
| பிரார்த்தனை ... ... ... | 108 |
| ஓலம், அபயம், சரணம், அடைக்கலம், போற்றி, நமோ நம, மங்களம், ஜேஜெய, வாழ்த்து ... ... ... | I to IX |

# முக்கிய விஷய அகராதி

[எண் - பாட்டின் எண்]


அகத்தியர், 13, 52,69 [64. 97.
அருணகிரிநாதர், 16, 18, 54, 55.
ஆட்டு வாகனம், 73, 74.
ஆபத்சகாய விநாயகர் - காப்பு
ஆறெழுத்து மந்திரம், 30, 51.
இடும்பன், 13. [61.
இந்திரஞாலத்தேர், 78.
உக்கிரபாண்டியன், 32.
உருத்திர சன்மர், 2.
எழுகிரி, 61.
ஔவையார், 14.
கச்சியப்பர், 80. [78.
கந்தபுராண விஷயங்கள், 76-
குமரகுருபர சுவாமிகள், 82.
குற்றால வரலாறு, 69.
குன்றுதோருடல், 4, 73.
கூன் பாண்டியன், 66.
சம்பந்தர், 1, 2, 17, 65-68,
சாக்கிய நாயனர், 72. [70, 87.
சிங்கமுகாசுரன், 8.
சிவன் அன்னம் இரந்தது, 63.
சுந்தரமூர்த்தி சுவாமிகள், 63.
சூரன், 8, 38, 61, 75.
சேவல், 45, 99, 100, II, IX.
தணிகேசர் அழகு, 105.
தணிகை - ஆலயங்கள், 103.
,, தலச்சிறப்பு, 101, 106, 107.
,, தலநாமங்கள, 102
,, தீர்த்தங்கள்,88 104
,, புராணங்கள் 47.
'தணிகைமணிப்'பட்டம், 90.
தணிகையிற் பூசித்தோர், 37, 52,
தந்தைக்கு அருளியது,16. [105.
தாரகன், 8.
திருச்செந்தூர், 3, 95.
திருப்பரங்குன்றம், 3, 95.
திருப்புகழ், 18, 22, 27, 33, 54, 55, 56, 87, 101, 106, 107.
திருமால் - மண் இரந்தது, 63.
திருவாவினன்குடி 3, 95.
திருவேரகம், 3, 8, 95.
தேவசேனை, 3, 5, 42, II, IX.
தேவாரம், 87.
நக்கீரர், 7, 11, 12, 42, 71.
பழநி, 3. 13, 95.
பழமுதிர்சோலை, 4.
பானுகோபன், 77.
பெருங்கதை வரலாறு, 83.
பொய்யாமொழிப் புலவர்,7,81.
மயில், 13, 45, 98. 100, II, IX.
முருகம்மையார், 11. [தது, 94.
முருகர் கந்தரந்தாதியைப்புகழ்ந்
,, சகல கலாவல்லவர், 9.
,, செட்டி, 6. [60, II.
,, சிவகுரு, 35, 51, 57, 59,
,, பிரமனைக் கண்டித்தது, 12. [தது, 6, 15.
,, மாடுமேய்ப்போனய் வந்
,, வண்டுரு எடுத்தது,6,19.
,, வராகம் அட்டது, 85.
,, வேங்கைமரமானது, 6.
,, வேடன் உரு, 6.
மூவாயிரவர் வதை. 76.
வள்ளி சன்மார்க்கம், 62.
வள்ளியம்மை, 5-7, 20, 42, 59, 91, 100, II, IX.
விஜயன் (பூதகணத்தலைவன்)76.
வேல், 8, 29, 38, 40, 44, 45 61, 77, 91, 97, 98, 100, II, IX.

உ

திருத்தணிகேசன் துணை

# தணிகை நாயகன் மாலை

## காப்பு

### ஆபத் சகாய விநாயகர் துதி

திருவளர் தணிகை நாயகன் கழற்கே
    செவ்விய சொல்லொடு பொருள்சேர்
மருவளர் மாலை புனைய,அம் மாலை
    மகிதலத் திலகிடப் பணிவேன்
செருவளர் வேடர் மகளைமற் றன்னான்
    திருமணஞ் செயவுத வியநல்
லுருவளர் பவள மேனியர் ஆபத்
    சகாயரெம் உத்தமர் கழலே.

---

## நூல்

### தோத்திரம்

1. வேதநா டரிய விழுப்பெரும் பொருளே!
    வேதியா! வேதனுக் கன்று
போதனை புரிந்த புண்ணிய மூர்த்தீ!
    புகலியிற் கவுணிய னாகி

மாதுமை தந்த பாலமு துண்டு
மண்டலம் விண்டலம் வியப்பக்
கோதிலாத் தமிழை இசையொடும் விரித்த
குமரனே! தணிகை நாயகனே!

2. சங்கத்துப் புலவர் வணங்கவே அன்று
சாரதா பீடத்தி லமர்ந்தே
அங்கர்த்தம் அவர்கள் அகப்பொருட் குரைப்ப
அரும்பொருள் ஈதெனக் குறித்த
துங்கப்பொன் மணியே! ஆருயிர்த் துணையே!
தூயநற் சோதியுட் சோதீ!
அங்கத்தைப் பெண்ணு ஆக்கிய அரசே!
அற்புதா! தணிகை நாயகனே!

ஆறு படைவீடு

3. திருப்பரங் குன்றத் தலத்திடை ஒருபால்
தெய்வநா யகியுற அமர்ந்து
கருப்பவ மகற்றுஞ் செந்திலிற் சேனைக்
கணங்களின் தலைவனென் றிலங்கிப்
பொருப்பினிற் சிறந்த பழநியங் கிரியிற்
புதுப்புதுக் கோலங்கள் காட்டிக்
குருப்புகழ் பெற்ருய் ஏரகத் தலத்திற்
குரவனே! தணிகை நாயகனே!

4. குன்றுதோ ருடுங் குமரனே! சோலைக்
குன்றது மறைந்ததிக் காலம்
என்றுநான் ஏங்கா வண்ணம்நீ அருள்கூர்ந்
திடங்கொள் என் நெஞ்செனும் கல்லில்;

மன்றுதோ றாடும் வள்ளலின் மகனே!
வரத! நல் மாணிக்க மணியே!
உன்றிரு வடியை உன்னுவார்க் கருளும்
ஒள்ளியாய்! தணிகை நாயகனே!

முருகர் பெருமை - அன்பே அவர்க்கு வேண்டியது

5. கணக்கிலை குலமே கணக்கிலை பிறப்பே
கணக்கெனக் கன்புதான் என்னுங்
கணக்கினைக் காட்டக் குலம்பிறப் புயர்ந்த
கன்னிகை தெய்வநா யகியோ
டிணக்கம தாகக் குறவர்கூட் டத்தாள்
எயினச்சி வள்ளியை மணந்தாய்
குணக்கொடு நான்கு திசையடி யார்கள்
கும்பிடுந் தணிகை நாயகனே!

முருகன் பெருமை - அறிதற்கரிய தன்மை

6. வண்டின துருவை எடுத்துநீ யன்று
மறைப்பொருள் ரகசியம் கேட்டாய்
பண்டொரு வேங்கை உருவதை எடுத்தே
பாவையவ் வள்ளிபால் நின்றாய்
மிண்டுறு வேடன் செட்டிநன் மாடு
மேய்ப்பவன் எனப்பல வேடம்
கொண்டவுன் தன்மை அறிபவர் யாரே?
கோதிலாத் தணிகை நாயகனே!

7. வாணுதற் குறவி வள்ளியை யன்று
மணந்தனை களவியல் வழியில்;
பேணுதற் கறியா முரடனோர் கவியைப்
பேதுற வைத்தனை சுரத்தில்;

நாணுறச் செய்தாய் கீரனை வெருட்டி ;
நாத ! உன் தன்மையா ரறிவார் ?
காணுதற் கரிதுன் மாயங்க ளெல்லாம் ;
கள்வன்நீ தணிகை நாயகனே !

முருகர் வீரம்

8. சூரகம் நடுங்கச் சத்திவேல் விடுத்தாய் ;
சூர்ப்பினோன் சிங்க முகப்பேர்க்
கோரகம் நூற்றுப் பத்துடை யோனைக்
கொன்றனை குலிசமாப் படையால் ;
தாரகன் எனப்பேர் இருவரைச் சமரிற்
சாய்த்தனை ; போரினில் நின்போல்
ஏரக அரசே ! யாவரே வல்லார் ?
ஏத்தருந் தணிகை நாயகனே !

முருகர் சகலகலாவல்லப மூர்த்தி

9. கோனென யாரைக் கூறலாம் சகல
கூறுடைக் கலைகளுக் கெல்லாம்
வானினில் மண்ணில் எனமுனம் எழுந்த
வழக்கது தேவிபாற் செல்லக்
கானெனுங் குழலாள் குமரனே உன்னைக்
காட்டிடக் கலையெலாம் வல்லோன்
நானென மார்பைத் தட்டிய பெருமை
நலஞ்செறி தணிகை நாயகனே !

முருக நாம விசேடம்

10. ஐயனே எனது கண்ணெனும் வண்டுன்
அழகிய அடிமலர் நாடும்
செய்யநீ என்னுள் அறிவெனத் திகழ்ந்து
தீயன விலக்குதி யதனால்

மெய்யவுன் நாமம் முருக என் பதையே
மெய்த்துணை யாநிதம் பகர்வேன்
செய்யெலாஞ் செந்நெற் கதிர்பொலிந் திலங்கு
செம்மைசேர் தணிகை நாயகனே!

11. முருகஎன் றந்நாள் முறையிடு நங்கை
முறிந்தகை நலமுறப் பெற்றாள்
முருக என் றன்றாற் றுப்படை பாடி
முனிவனக் கீரனும் உய்ந்தான்
முருகஎன் கின்ற நாம விசேடம்
முற்றுநான் இங்ஙனம் அறிந்தும்
முருகஎன் றோதேன் ஈதென்ன பாவம்!
முத்தனே! தணிகை நாயகனே!

முருகர் லீலைகள் : பிரமனோடு நக்கீரனோடு லீலைகள் .

12. பாவலன் கீரன் வணங்கிலன் என்னும்
பான்மையைக் கண்டுநீ வெகுண்டு
பாவினிற் சிறந்த திருமுரு காற்றுப்
படையவன் பாடவுஞ் செய்தாய்!
பூவினன் நின்மாட் டடைந்ததண் டனையால்
பொருளுணர்ந் துணர்வினைப் பெற்றான்!
தேவ!நின் கோபம் நன்மையே பயக்குந்
திறத்தது தணிகை நாயகனே!

## இடும்பனோடு லீலை

13. அகத்திய ரேவல் அதுசெயக் கருதி
அன்புடன் சிகரங்கள் இரண்டை
மகத்துவம் அறிந்து தோளினில் தாங்கி
வந்தவன் இடும்பனை மடக்கிச்

சகத்துளோர் போற்றும் பழநியி லாண்ட
சண்முகா! பருப்பதப் பிரியா!
சகத்தினிற் சிறந்த மயில்பரி கொடியாங்
கருணையாய்! தணிகை நாயகனே!

### ஔவையோடு லீலை

14. கொடுபழம் என்று கேட்டநல் லவ்வை
குலைந்திட வேண்டிய பழந்தான்
சுடுபழந் தானே சுடாப்பழந் தானே
சொல்லுதி யென்னமற் றவளுஞ்
சுடுபழம் என்ன விடுபழம் மணலிற்
றோய்ந்ததை எடுத்தவ ளூத
கடபட என்ன நகைத்தங்கொ ராடல்
காட்டிய தணிகை நாயகனே!

### மாடு மேய்ப்பவனாய் வந்த லீலை

15. ஏனந்த நாகம் படமெடுத் தாட
இல்லையென் றொருகவி தொடங்கித்
தானந்தக் கவியை முடித்திட அறியான்
தவித்த அப் புலவனுள் நாண
மானந்து முளத்தன் அடியனுக் காக
"மயிற் கொத்துக் கஞ்சி"யென் றுரைத்தே
ஆனந்த மாக அக்கவி முடித்த
ஆண்டவா! தணிகை நாயகனே!

### திருப்புகழ் வெளியிட அருளியது

16. கடன்மடை திறந்த வெள்ளமே என்னக்
கவிபொழி அருண கிரிப்பேர்
அடன்மலி அண்ணல் வாழ்வுக்கு நானூற்
றைம்பது வருடங்கள் பின்னர்த்

திடமலி பத்தி எந்தையைக் கொண்டு
திருப்புகழ் வெளிவரச் செய்தாய்
மடமலி யடியேன் தனக்குமோர் பணியை
வைத்தருள் தணிகை நாயகனே!

துணை நீயே

17. ஏழிசை நீயே, இசைப்பயன் நீயே,
இனியநல் லமுதமு நீயே,
காழியில் உதித்த கவுணியன் நீயே,
கசிந்துள முருகுநல் லடியார்
தோழனும் நீயே, துணைவனும் நீயே,
சுந்தரச் சோதியே! என்றிவ்
வேழைநா யடியேன் உனைத்துணை கொண்டேன்
இன்பமே! தணிகை நாயகனே!

கிளிவிடு தூது

18. எங்கள்நா யகனே! உன்னிடந் தூதாய்
எதை அனுப் புவதென அறிந்தேன்
மங்கலப் பாவாம் திருப்புகழ் சொன்ன
வாசகக் கிளியதே உன்பால்
தங்கிநீ உகக்கச் செந்தமிழ்ச் சொல்லால்
தனியனேன் துயரெலாம் உரைக்கும்
அங்கதன் சொல்லுக் கிரங்கிநீ என்பால்
அருளுவை தணிகை நாயகனே!

வண்டுவிடு தூது

19. உள்ளதே உரைப்பேன் முன்புநீ வண்டின்
உருவதை எடுத்தகா ரணத்தால்
வள்ளலே! பண்செய் வண்டுமிங் குனக்கு
மகிழ்ச்சியைத் தருவதோர் தூதாம்;

துள்ளுமா ணவத்தன் அனுப்பின திந்தத்
தூதென விலக்குதல் செய்யா
தெள்ளுத லின்றி ஏழையிவ் வடியேற்
கிரங்குதி தணிகைநா யகனே!

தன்குறை கூறித் தண்ணருள் வேண்டுதல்

20. எத்துணைப் பிழைகள் யானியற் றிடினும்
எந்தையே! நீபொறுத் ததனால்
பித்தனைப் போலப் பற்பல பொல்லாப்
பிழையெலாஞ் செய்தனன் பேதை
முத்தனை யானே! மணியனை யானே!
மூர்க்கனேற் குய்யுநா ளுளதோ?
தத்தைபோல் மொழியாள் வள்ளிகைப் பிடித்த
சாமியே! தணிகை நாயகனே!

21. மட்டலா மலர்கொண் டடியிணை வணங்கும்
மதியிலான் கதியிலான் வம்பன்
சட்டவோர் நிமிட நேரமு நினையாச்
சழக்கனிங் கிவனென என்னைச்
சிட்ட! நீ துறக்கிற் சேர்கதி யுளதோ
சிறிய இப் பேதையேன் தனக்கு;
வட்டவார் சடையெம் வள்ளலுக் குகந்த
மைந்தனே! தணிகை நாயகனே!

22. உனைத்தினந் தொழுதே உன்னியல் பனைத்தும்
உரைத்திலேன் நெஞ்சநெக் குருகித்
தினத்தினம் உனது திருப்புக ழோதேன்
சேர்ந்திடேன் உனதடி யவரை

மனத்தினில் உனது மலர்ப்பதம் நினைந்தே
வலம்வரேன் உன்திரு மலையை
எனைத்தொடர் வினைகள் எங்ஙனே தொலையும்?
ஈசனே! தணிகை நாயகனே!

23. நன்கவி பாடிப் பேரருள் பெற்ற
நாவலர் தமதுசொற் பாவைப்
புன்கவி யென்றே அடக்கமுற் றுரைத்தால்
பொருளொடும் இலக்கணம் அறியா
என்கவி கவியாஞ் சத்தமும் பெறுதற்
கிடம்பெறா தென்பதை யுணர்ந்தேன்
வன்கவி பறவோ டுழிதருஞ் சாரல்
மலைதிகழ் தணிகை நாயகனே!

24. அரவொலி கேட்டுங் கசிந்திடேன் உள்ளம்,
அறுமுக! குருபர! குமர!
சரவண! முருக! எனச்சொலித் தாழேன்
தாழ்பவர் குழுவினுஞ் சாரேன்
புரைமிக உடையேன் எனினுநீ என்னைப்
புறக்கணி யாதிவன் ஏழை
இரவல னென்றே கடைக்கணித் தருள்வாய்,
இறைவனே! தணிகை நாயகனே!

25. வணக்கமோ டுன்னை வாழ்த்துமா றறியேன்,
வணங்கியே வாழ்த்துநின் னடியார்
இணக்கமோ இல்லேன், இணங்குவோ ருறையும்
இடத்தையும் அணுகிலேன், அந்தோ!
கணக்கிலாக் காலம் வீணினிற் கழித்தேன்,
கடையனேன் கதிபெறல் எங்ஙன்?
குணக்கெழு வோனை வலக்கணுக் கொண்ட
கோலனே! தணிகை நாயகனே!

26. அடியனேன் செய்த பாவங்கள் பலவும்
அடிக்கடி நெஞ்சுறுத் துவதால்
படியிலே பெரியோர் சந்நிதி தன்னிற்
பாவியேன் செல்லவுந் துணியேன்
விடிவதெஞ் ஞான்றென் வினையிருட் சூழல்!
வீட்டின்பம் கிட்டுவ தெங்ஙன்?
செடியனேன் உய்யும் நாளும்ஒன் றுண்டோ?
தெய்வமே! தணிகை நாயகனே!

27. செப்பிடேன் உனது திருப்புக ழதனைச்
சேர்ந்திடேன் உனதடி யவரோ
டப்படி யிருந்தால் எப்படிக் கதிநான்
அடைவனோ அறிந்திலேன் அந்தோ
இப்படி தனிலே வீணிலே பிறந்திங்
கிறப்பதோ என்தலை யெழுத்து
மைப்படி கண்ணி வள்ளிதோள் மணந்த
மகிபனே! தணிகை நாயகனே!

28. கருவினிற் கிடந்த நாள்முதல் துணையாய்க்
கனிவுகொள் தாயினுஞ் சால
மருவிநீ பரிந்தென் உடலிடங் கொண்டாய்!
வள்ளலுன் கருணையை நினைந்தே
அருவிபோல் மேன்மேற் கண்ணினீர் சொரியேன்
ஆனந்தங் கொண்டுகூத் தாடேன்
இருவினை தொலைப்ப தெங்ஙனம் அறியேன்!
என்பொனே! தணிகை நாயகனே!

29. ஆய்ந்தவோர் ஞானம் இலாமையால் அந்தோ
அறிவிலி பாவங்கள் செய்தேன்
வாய்ந்ததீ வினைகள் இவ்வுல கிடையே
வரவரப் பெருகுவ தல்லால்

ஓய்ந்தபா டறியேன் ஓய்வதற் குற்ற
உபாயமுந் தேடிலேன், சூரைப்
பாய்ந்தவே லதனைப் பாடிநான் உய்யப்
பண்ணுதி தணிகை நாயகனே!

30. ஈசனே! பாச நாசனே! இமையோர்
ஏத்திடு சிவகுக! பரனே!
தேசனே! உன்னைப் பூசனை புரியேன்
செபித்திடேன் உனதுமந் திரத்தை
நேசநே ரொழுக்கஞ் சற்றுமில் கள்வன்
நீள்பவம் பெருக்குமோர் மூடன்
நீசனே யிவனென் றெனைப்புறந் தள்ளேல்
நீதனே! தணிகை நாயகனே!

31. தினத்தினம் எனது பொழுதுவீண் பொழுதாச்
சிதைவதைக் கண்டுளே நொந்தும்
மனத்தொடு வாக்குக் காயமிம் மூன்றும்
மயிலவ உன்றனக் காக்கேன்!
எனைத்தொடர் வினைகள் எங்ஙனம் ஒழியும்
என்றுநான் சுகம்பெறு வேனோ?
சினத்தைநீந் தனைசெய் முனிவரர் போற்றுஞ்
சீலனே! தணிகை நாயகனே!

32. தேனிஃ தெனவும் அமுதிஃ தெனவும்
தித்திக்குமத் தமிழ்ச்சுவை பருக
மீனவ னாகி மதுரைமா நகரில்
வேந்தனாய் வீற்றிருந் தவனே!
வானவர் விருந்தே! வழித்துணை மருந்தே!
வருந்துவேன் பலதுயர்க் கிடையே
ஏனெனக் கேளா திருப்பது மழகோ?
எந்தையே! தணிகை நாயகனே!

33. தூண்டிடா விளக்கே! சுடர்மணித் திரளே!
சுந்தர மந்தரச் சோதி!
வேண்டுவார் வேண்டும் வரமெலாம் அளிக்கும்
வேலவா! சூழுமிப் பிறவி
தாண்டுவார் ஓதும் திருப்புகழ்ப் பாவைச்
சாற்றவும் போற்றவும் நியமம்
பூண்டுவாழ் வாழ்க்கை அடியனுக் கருளாய்,
புண்ணியா! தணிகை நாயகனே!

34. பணியுமா றறியேன் பணிந்துநிற் பரவிப்
பராபர குருபர எனநீ
றணியுமா றறியேன் நன்னெறி மறைத்தே
ஆட்சிசெய் ஐம்புலச் சேட்டை
தணியுமா றறியேன் தயாபர! உனது
சார்பலாற் சார்பிலை யென்றே
துணியுமா றறியேன் நற்கதி காணத்
துணைபுரி தணிகை நாயகனே!

35. எங்களா ருயிரே! இமையவர்க் கரசே!
இன்பமே பெருகுறும் ஊற்றே!
சங்கநான் மறையோர் முறைமுறை பழிச்சும்
சண்முகா! சரவணோற் பவனே!
துங்கவார் சடையார்க் கருமறை விரித்த
தூயவா! பிறவியென் கின்ற
பங்கமே இல்லா வகையெனக் கருள்வாய்
பண்ணவா! தணிகை நாயகனே!

36. என்னவே லையில்நான் ஈடுபட் டிடினும்
ஈச,உன் கழல்கள் என் மனத்தில்
மன்னுதல் வேண்டும், மாசிலா மணியே!
வரமிதைத் தந்தருள் புரிதி

அன்னைமா ரிருவர் நீங்கிடாக் கருணை
அண்ணலே! அறுமுகத் தரசே!
உன்னுவா ருன்னும் வரமெலாம் அருளும்
உத்தமா! தணிகை நாயகனே!

37. என்னதான் நல்ல மதியது புகட்டி
இருத்திநல் வழியிலென் றாலும்
சொன்னசொற் கேளா மனக்குரங் கிதன்றன்
துடுக்கினை ஒடுக்கிநீ ஆள்வாய்,
பின்னுவார் சடையான் பின்னையங் கேள்வன்
பிரமனும் பணிந்து பூசிக்க
அன்னவர் வேண்டும் வரமெலாம் அளித்த
ஆதியே! தணிகை நாயகனே!

38. ஐயகோ நல்ல வழியிலே இருத்தி
ஆண்டவன் திருவருள் கிடைக்கும்
மையலே கொண்டு பலபல நினையேல்
வாழியென் நெஞ்சநீ என்று
பையவே சொல்லிப் பழக்கினும் படியாப்
பகையிதை வெல்லுமா றுளதோ?
ஐயனே! சூரைத் துணித்தடக் கியவே
லத்தனே! தணிகை நாயகனே!

39. பின்வரு நிகழ்ச்சி யின்னதென் றறியாப்
பேதைமை யுடைய இவ் வாழ்வில்
முன்வரு மார்க்கம் இஃதென அறியும்
முயற்சிகள் செய்திடேன், நன்மை
என்வரு மென்று கருதிநான் உள்ளேன்
எங்ஙனம் உய்வனோ அறியேன்!
பொன்வரு மேனிப் பூரணா! ஞானம்
புணர்த்துதி, தணிகை நாயகனே!

40. கடலலை போலத் தொடருறும் எண்ணம்
கணக்கில என்மனத் தெழுந்தே
அடல்கொளு மதனல் உளைவினை முயற்சி
அயர்வுறும் சோர்விதைத் தொலைக்க
உடலிடங் கொள்வாய் உத்தமோத் தமனே!
உமையருள் பாலனே! அசுரர்
குடலெனு மாலை சூடுவேற் கரத்துக்
கொற்றவா! தணிகை நாயகனே!

41. சங்கரன் புதல்வா! சரவண! முருகா!
தாரகற் செற்ற எம் சாமீ!
ஐங்கரன் துணைவா! ஆறுமா முகவா!
அத்தனே! பக்தவத் சலனே!
க்ங்கைதன் மகனே! கந்தனே! குமரா!
கவுரிகான் முளை! யென நாளும்
பொங்குள மகிழ்ச்சி என்றெனக் கருள்வாய்
புலவனே! தணிகை நாயகனே!

42. அன்றுநீ "உலகம் உவப்ப" என் றெடுத்தே
அருளினை வாக்குநக் கீரற்
கென்றுநான் கண்டே எனக்கருள் வாக்கென்
றிரங்குவேன் பன்முறை பணிந்தே;
சென்றுநீ மண்ந்தாய் வேட்டுவ மகளைத்
தேவர்கோன் திருமகள் இருப்பக்,
குன்றமே வில்லாக் குனித்தவர் புதல்வா!
குழகனே! தணிகை நாயகனே!

43. பிறர்மனை வாயில் காத்துநான் தயவு
பெற்றிட விரும்புதல் அழகோ?
அறவழி நின்றே அறுமுக குமர
ஆண்டவ எனவுனைத் துதிக்குந்

துறவுகொள் மனத்துத் தூயர்வா ழிடத்திற்
சோர்விலா திணங்கிடும் அந்தப்
பெறவரி தாகும் பேற்றினைத் தருவாய்
பிஞ்ஞகா! தணிகை நாயகனே!

44. காத்திருந் தாலுன் சந்நிதி வாயில்
காத்திடும் பாக்கியம் வேண்டும்,
பார்த்திருந் தாலுன் திருவுரு அழகே
பார்த்துநான் மகிழ்ந்திடல் வேண்டும்,
யாத்திருந் தாலுன் புகழ்சொலும் பாக்கள்
யாத்துநான் களிப்புறல் வேண்டும்,
ஏத்தருந் திறல்சேர் வேற்படை யரசே!
ஏகனே! தணிகை நாயகனே!

45. சத்திவே லேந்துஞ் சண்முகா! உனது
தாண்மலர் நெஞ்சினி லிருத்திப்
பத்தியாற் பாடிப் பணியுமா றறியேன்
பவத்தொழில் பற்பல புரிவேன்
எத்தன்நான் எனினும் வேல்மயில் சேவல்
என்னுமிம் மூன்றையும் ஓதி
நித்தமே பணியும் நினைவதைத் தருவாய்,
நிமலனே! தணிகை நாயகனே!

46. தணிகை நாயகனே! தணிகை நாயகனே!
தணிகையில் எங்கள் நாயகனே!
தணிகை நாயகனே! தணிகை நாயகனே!
தணிகையில் எங்கள் நாயகனே!
தணிகை நாயகனே! தணிகையாய்! என்றே
சதாவுனைப் பாடுமப் பணியே
பணியதா இந்தப் படிறனுக் கருள்வாய்
பைம்பொனே! தணிகை நாயகனே!

47. திரைகுலாங் கங்கைச் சுத! குக! உனது
திருவடிக் கன்புபூண் டவராய்
வரைகுலாந் தணிகைப் புராணமன் றுரைத்த
வண்டமிழ்ப் புலவரோ ரிருவர்
உரைகுலாம் பாக்கள் ஓதியிங் குணர்ந்தே
உய்யுநாள் எளியனுக் குளதோ?
அரைகுலாஞ் சதங்கை நாததத் துவஞ்சொல்
அழகனே! தணிகை நாயகனே!

48. தாயினு நல்ல தலைவுவோ என்றும்
சண்முக குமரனே என்றும்
வாயிலு மனத்தும் உன்னையே வழுத்தும்
வரமிதைத் தந்தருள் செய்து
நோயினு நலிசெய் துயரினும் படாத
நுண்ணிய திறத்தையுந் தருதி
காய்நிலை யறியாச் செழுங்கனி யென்னக்
கவின்பெறு தணிகை நாயகனே!

49. பிறந்தநாள் உன்னைப் பேசுநாள் என்றே
பெரியவர் குறித்ததை உணர்ந்தும்
சிறந்தநாள் வழியைத் தேடிலேன் வீணே
சிதறினேன் எனதுகா லத்தை
மறந்திடா துன்னை வழுத்தியே உய்யும்
வகைதனைக் கண்டிலேன், உனைநான்
இறந்துபோம் அன்று மறக்கினும் குறிக்கொள்
என்னைநீ தணிகை நாயகனே!

50. நினைவில னெனினும் நினைந்துனை யேத்தி
நித்தமுந் தொழுமவ ரிடத்தை
வினைவில னெனினும் என்னையோர் பொருளா
விரும்பிநீ என்னிடை வந்து

நனவினி லருளும் பாக்கிய மதனை
நாதனே! விழைந்தனன் எனக்குக்
கனவினி லேனும் உய்யுமா றொருசொல்
கழறுதி தணிகை நாயகனே!

51. ஏறுவா கனமாக் கொண்டவ ருவக்க
ஈறிலா மொழியதை யவர்தாம்
தேறுமா றுரைத்த தேசிகோத் தமனே!
சீறியே ஏமனென் னுயிரைக்
கூறுசெய் போதுன் நாமம்ஓ திடவும்
"குமரனே நம" எனும் எழுத்தோ
ராறுமெ னெஞ்சிற் றோன்றவும் அருளாய்
ஐயனே! தணிகை நாயகனே!

52. ஆணவ மோடத் துவிதம தானேன்
அவ்வகை யேநிறை பொருளாம்
தாணுநின் னோடத் துவிதம தாகச்
சாருநாள் எளியனுக் குண்டோ?
வேணவா வுடனே அகத்தியன் பிரமன்
விண்டுபு ரந்தரன் ஈசன்
பூணதாம் நாகம் வழிபட அருள்செய்
புராணனே! தணிகை நாயகனே!

53. தோளின்மேல் வைத்த ஆட்டினைத் தேடிச்
சோர்வுறும் இடையனே போல
நாளுமே என்னுள் நாதநீ யிருந்தும்
நாயினேன் கண்டிலேன் உன்னைக்
கோளுமோர் நாளும் தீயன எனினும்
குறிக்கொள்நீ என்னையு மிரங்கி
ஆளியோ டரிகள் திரிதரு கயிலை
யனையநற் றணிகை நாயகனே!

54. திருவண்ணா மலையிற் றோற்றிய பெருமான்
திருப்புகழ் பாடிய பெருமான்
கருவண்ணா வண்ணம் உலகினா ருய்யுங்
கதிவழி காட்டிய பெருமான்
குருவண்ணா என்றுன் குரைகழல் பணியக்
கோதிலாச் சந்தமும் பொருளும்
தருவண்ணா என்றே உனைத்தொழ அருள்வாய்
சண்முகா! தணிகை நாயகனே!

55. ஆரமு தன்ன வாக்கினன் எங்கள்
அருண கிரிப்பெயர் வள்ளல்
ஈரம தோடிவ் வுலகினா ரெல்லாம்
இடரொழிந் தின்புற வேத
சாரம தாகப் பாடிய ஞானத்
தமிழ்மறைத் திருப்புகழ்ப் பாவை
வாரம தாக உருஎணி ஓதும்
வகையருள் தணிகை நாயகனே!

56. அண்டரோ டிருக்கும் அரும்பதம் வேண்டேன்
அயன்திரு மாலவர் பதமும்
கொண்டுநான் சுகிக்க விரும்பிலேன், குமர
குருபர எனநிதம் உருகிப்
பண்டவ ரு஡துன் திருப்புகழ் பாடிப்
பரவியே பணிசெயும் உண்மைத்
தொண்டரோ டிணங்கும் பேறதே வேண்டும்
சுவாமியே! தணிகை நாயகனே!

57. பன்னகா பரணர்க் கோம்பொருள் உரைத்த
பராபர குருபர மூர்த்தி!
என்னவே கத்தில் உலகியல் ஆசை
இயற்கையில் என்மனத் துளதோ

அன்னவே கத்தில் உன்றன்மே லாசை
அமைந்துநான் உய்ந்திடல் வேண்டும்
முன்னவா! இந்த என்னவா தன்னை
முடித்துவை தணிகை நாயகனே!

58. அற்புதன் உனது தந்தைமுன் னொருநாள்
அருச்சனை பாட்டெனக் குறித்த
சொற்பொருள் அறிந்த நாள்முதற் றூய
சொன்மல ரதுகொடுன் னடிக்கே
நற்பத மாலை எண்ணில சூட்ட
நாயினேன் விழைந்தனன் எனக்குக்
கற்பனை சிறந்த வாக்கினை நீயே
கனிந்தருள் தணிகை நாயகனே!

59. ஆலந்தான் அமுதா உண்டவர் நீசொல்
அருமறைப் பொருளினை என்ன
மூலந்தான் இதுவென் றரும்பொருள் விரித்த
முன்னவ! என்னுயிர்த் தலைவ!
ஏலந்தான் கமழும் குழலினள் வள்ளி
யின்புறு நாயக! எனது
காலந்தான் வீணாக் கழிவுறு வண்ணம்
காத்தருள் தணிகை நாயகனே!

60. எத்துணை யிடர்கள் எனைநலிந் தாலும்
எள்ளள வேனும்நின் னடிக்கண்
பத்திமை குறையா மனநிலை வேண்டும்
பணிசெயுந் தொண்டதே வேண்டும்
அத்தகைத் தொண்டு முடக்குறு வண்ணம்
ஐயனே! நோயிலா வாழ்வும்
சுத்தம் நல் லகத்தும் புறத்தினும் வேண்டும்
தூயனே! தணிகை நாயகனே!

61. சூரனுக் கரணுத் தொடர்ந்தெங்கும் போந்த
தொல்கிரி எழுகிரி சாய்த்த
வீரநின் கைவே லதைவிடுத் தென்னை
விடாதெழு வினைக்கிரி தொலைப்பாய்,
சாரநின் கழற்கே ஆறெழுத் தோதிச்
சண்முக சண்முக என்றே
ஈரநெஞ் சினனாய்ச் செபித்திடும் பேற்றை
யீந்தருள் தணிகை நாயகனே!

62. உன்னையே ஒழிய ஒருவரை அறியா
உண்மையன் புள அடி யார்கள்
பின்னையே நின்று காப்பதுன் பெருமைப்
பெற்றி; மற் றங்கதன் மெய்ம்மை
தன்னையே விளக்கும் வள்ளிசன் மார்க்க
தருமம்; அத் தருமநன் னெறியை
நின்னையே நம்பிப் பற்றுதற் கருளாய்,
நிருமலா! தணிகை நாயகனே!

63. மண்ணைமுன் இரந்த மாலவன் மருகன்
மறையவர் மனைதொறும் அன்பால்
நண்ணிமுன் அன்னம் அடியனுக் காக
நண்பகல் இரந்தவன் புதல்வன்
அண்ணல்நீ அதனால் உன்னிடம் அடியேன்
அருளன்பொ டறனிவை இரந்தால்
தண்ணளி யாலென் இரத்தலை வெறுக்கேல்
சாந்தனே! தணிகை நாயகனே!

## முருகரை வைதல்

64. முத்தமி ழாலே வைபவர் தமையும்
முனிவின்றி வாழவைப் பாயென்
றுத்தமப் புலவர் உரைத்தன ரதனால்
ஓடுடன் கோவணந் திருடும்
பித்தனார் புதல்வன், அலைகள வாணி
பேணுமோர் மருகன், ஓர் பெண்ணை
எத்தினால் மணந்த கள்வனென் றுன்னை
ஏசுவன் தணிகை நாயகனே!

## இறைவனோடு மன்றாடி வேண்டுதல்

65. கண்பிசைந் தழுநீ தரிக்கலாற் றாது
கடிதினில் தாயவள் விடைமேல்
விண்மிசை வந்தே ஞானபோ னகத்தை
வேண்டியே அளித்தனள் உனக்கு;
பண்பிசை வேலா வந்தரு ளென்றே
பாவியேன் அழுதழு தழைத்தும்
நண்பிசை அஞ்சேல் எனுஞ்சொலுங் கேளேன்
ஞாயமோ? தணிகை நாயகனே!

66. சிறப்பினை உணரான் நீற்றினைப் பேணான்
செழியன்மாட் டருளது வைத்தே
அறப்பெருங் கருணை யாலவன் இருகூன்
அப்படித் தொலைத்தவுன் றனக்குச்
சிறப்பினை உணர்ந்தே நீற்றினைப் போற்றும்
செயலுள எனக்குறு மிந்தப்
பிறப்பினின் முடங்கு கூனொன்றைத் தீர்த்தல்
பெரியதோ? தணிகை நாயகனே!

67. ஐயனே! உனது வாக்கினிற் பிறந்த
அருமையாற் பனையது சிவத்தைப்
பையவே கூடிற் றெனமிகப் பெரியார்
பகர்ந்தனர் ஆதலால் இந்த
மெய்யதே அறியா வன்பனை அழிவில்
வீடுறும் வகைக்குநீ அருளி
உய்யவே வைப்பாய் ஒப்புயர் வில்லா
ஒருவனே! தணிகை நாயகனே!

68. பாருளார் புகழ எலும்பினின் றுருபூம்
பாவையை எழுப்பிய உனக்குச்
சீருலாம் உயிரோ டுடலது கொண்டே
தியங்குமிவ் வேழையின் நாவில்
ஏருலாம் இனிய நல்லதேம் பாவை
எழுப்புதல் அரியதோ இயம்பாய்
காருலாங் குன்று தொறுமினி துலவுங்
கடவுளே! தணிகை நாயகனே!

69. தண்ணறுஞ் சோலை மருவுகுற் றாலத்
தலமதில் அகத்திய னார்க்குக்
கண்ணன் வாமனனை வாமனுஞ் சிவனாக்
கவினுறக் குறுகுதற் குற்ற
கண்ணிய மான தந்திர மதனைக்
காட்டினை எனக்கிந்தச் சீவன்
புண்ணியச் சிவனாக் குறுகுமோர் வழியைப்
புகன்றருள் தணிகை நாயகனே!

70. ஒன்றைமூன் றாகப் பெருக்கவும் வல்லை
ஓதிநீ கண்ணனை நோக்க
அன்றுமுக் கண்ணன் ஆயினன் அவனும்
அங்ஙனே கணக்கனு மென்னை

என்றுமுக் கணக்க ளுக்குவை அறியேன்
எளியனேற் கப்படி ஒருநாள்
துன்றுமோ? துன்றிச் சுகம் பெறுவேனோ?
சொல்லுதி தணிகை நாயகனே!

71. காணுதற் கரிய கயிலையைக் காணக்
கவலைகொள் கீரனு வக்க
நீணுதற் கண்ணர் உரைத்தமா கயிலை
நேர்தரும் காளத்தி யென்று
பேணுதற் குரிய சூழ்ச்சியை உரைத்தாய்
பேயனேற் கயிலையெ னுளத்திற்
பூணுதற் குற்ற சூழ்ச்சியிப் பொழுதே
புகலுதி தணிகை நாயகனே!

72. கல்லடி பெற்றுக் கதியளித் தனர்முக்
கண்ணர்நின் தந்தைமற் றொருநீ
நல்லடி கொடுத்தே னும்மெனக் கருள்வாய்
நாதனே எனவுனைப் பணிவேன்
சொல்லடி யழகு சிறிதுமில் கவிநான்
சொலினுமென் மீதுநீ மகிழ்வாய்
பல்லடி யார்கள் ஜனவரி முதல்நாள்
பரவிடு தணிகை நாயகனே!

73. அன்றொரு யாகத் தெழுந்தவல் லாட்டை
அடக்கிநீ யானமாக் கொண்டாய்
இன்றெனை துடல்வாழ் ஐவர்வல் லாட்டை
எந்தைநீ அடக்குதல் வேண்டும்
என்றுநான் உனது மலரடி தினமும்
இறைஞ்சுகின் றேனருள் புரிதி
குன்றுதோ றாடல் உவந்திடு குமர
குருபர! தணிகை நாயகனே!

74. ஏழகம் அடக்கி யானமாக் கொண்ட
இறைவனே! எனதுபோல் லாத
பாழகம் அடக்கி மோனமா நிலையைப்
பரிந்தளித் தருளுதி! புலராக்
காழகம் புலர உடுத்துக்கை கூப்பிக்
கண்மழை பொழியுநின் னடியார்
வாழகம் தேடி யேவிளை யாடும்
வள்ளலே! தணிகை நாயகனே!

75. பூவினைக் கொய்யேன் மலரடி போற்றேன்
பூதலத் தேபல மயக்கில்
மேவின னாகிச் செந்நெறி துறந்து
வினையதே பெருக்குவ னெனினும்
மாவினைத் தொலைத்த வீரனு முனக்கென்
மாவினை தொலைத்தல்தான் அரிதோ?
சேவினை யேறுஞ் செம்மலா ரளித்த
செல்வமே! தணிகை நாயகனே!

76. வரத்தினர் மூவா யிரவரை வெல்லும்
வழிதனை யறிந்திலேன் என்று
சிரத்தையோ டுன்னைத் தியானித்த விஜயன்
திகைப்பறத் தந்திரம் உரைத்தாய்
உரத்தினர் ஐவர் என்னிடை யிருந்தே
ஓரஒட் டார்உன்னை! அவரைத்
தரத்தினில் வெல்லும் தந்திரம் யாதோ
சாற்றுதி தணிகை நாயகனே!

77. தம்பியர் பானு கோபன்செய் மாயத்
தடையினிற் பட்டஅப் பொழுதே
வெம்பிநீ திருக்கை வேலதை விட்டு
மீட்டனை அவர்தமை; உன்னை

நம்பிய நானும் மாயையிற் பட்டே
நடுங்குகின் றேனதை யறிந்தும்
எம்பிரான்! ஏனோ திருவருள் புரியா
திருத்திநீ தணிகை நாயகனே!

78. இந்திர ஞாலத் தேரைநீ நோக்கி
இருத்தியென் னிடத்தில் நீ என்னத்
தந்திரம் ஒழிந்து மற்றந்தத் தேரும்
தங்கிய துன்வயின்; அதுபோல்
அந்தரக் கறங்கும் ஆடுபம் பரமும்
அனைய என் ஆட்டங்கள் ஒழிந்து
சுந்தர! நின்பால் நானுறற் குரிய
சொல்லருள் தணிகை நாயகனே!

79. சைவர்கள் விழுங்கும் ஆனந்தக் கனியே!
சார்ந்தவர்க் கெய்ப்பினில் வைப்பே!
மெய்வுரை போன்ற அசுரர்எண் ணிலர்கள்
வேதனை புரியமற் றவரை
நைவகை செய்த பெருந்திறற் குமர
நாயக! உன்றனக் கிந்த
ஐவர்செய் ஆசும் அறுத்தெனை யாளல்
அரியதோ? தணிகை நாயகனே!

80. உன்னிரு தாள்கள் அருச்சனை புரிந்த
ஒள்ளியர் கச்சியப் பருக்கு
முன்னிரு வினைதீர் கந்தபு ராணம்
முழுமையும் திருத்திநீ அளித்தாய்,
என்னிரு கண்ணே! கண்ணினுள் மணியே!
யான்சொலும் பாடலைத் திருத்த
உன்னருள் கூடும் பேற்றினை விழைந்தேன்
ஒப்பிலாத் தணிகை நாயகனே!

81. கவிசொலேன் என்று தருக்கிய முரட்டுக்
கவிஞன்மாட் டோர்கவி பெறவே
புவிதனிற் சுரத்தில் வெயிலினிற் சென்று
புரையுள பாடலைப் பெற்றாய்
தவிதவிப் புற்றே நலபல பாடல்
சாற்றிநான் சாமிவா எனினும்
செவிதனிற் கொள்ளாய் ஈதுனக் கழகோ?
செய்யனே! தணிகை நாயகனே!

82. ஊமனா யிருந்த பாலன் நா வினிலே
உனதுகை வேல்கொடு பொறித்துப்
பாமனா அவனைச் செய்த அக் கருணைப்
பான்மையைக் கண்டிங்கு நானும்
வாமனார் மருகா! நெஞ்சினிற் செஞ்சொல்
வாரிதி மடைதிறந் தாற்போல்
தாமனா எனக்கென் றுன்னடி பணிந்தேன்
தயைபுரி தணிகை நாயகனே!

83. ஆறுமா தத்திற் கலைகளெல் லாமோர்
அரையனங் கறிந்திட அவற்குத்
தேறுமா றுரைத்த மந்திரி மூலம்
செய்தனை இஃதுனக் கரிதோ?
வீறுமோ ரறிவும் அறிவினை அறியும்
விளக்கமும் வித்தைக ளனைத்தும்
ஊறுறு வண்ணம் ஒரிமைப் பொழுதில்
உணர்த்துவை தணிகை நாயகனே!

84. அற்புதஞ் செறிந்த சித்திர நிறைந்த
அருமைசேர் பாடல்கள் சொல்லும்
நற்பதம் உனக்கிங் கில்லையோ என்று
நாதநீ கூறுவை யாகில்

சொற்பதம் வேண்டாம் "சொல்லறச் சும்மா
சுகமுற இருத்தி"யென் றேனும்
அற்பனுக் கொருசொல் வழங்குதி கருணை
அண்ணலே! தணிகை நாயகனே!

85. பத்தவத் சலனே! ஆணவங் கொண்ட
பன்றியின் எயிற்றினைப் பறித்தங்
கத்தனுக் களித்த அடன்மிகு மரசே!
ஆணவ மென்னுமோர் ஏனம்
சுத்தசன் மார்க்க நெறிமறைத் தென்னைச்
சோகத்திற் படஇடர் செய்யும்
தத்ததை நீக்கிச் சத்திய ஞானந்
தந்தருள் தணிகை நாயகனே!

நன்றி பாராட்டல்

86. அன்னைநீ யேயென் அத்தனு நீயே
அன்பினுக் குரியசெல் வனுநீ
என்னையோர் பொருளாக் கருதிநீ யாண்ட
எளிமையை என்றுநான் மறக்கேன்
பொன்னைமா தரையும் மண்ணையும் நாடாப்
புனிதர்தம் நெஞ்சகம் பொலியும்
தன்னைநே ரில்லாச் சச்சிதா நந்த
தா.ணுவே! தணிகை நாயகனே!

87. அன்பொழு கடியா ரவரொடுங் கூடேன்
அண்ணனின் திருப்புகழ் பாடேன்
பொன்பொருள் கவலை பற்றிய அதனல்
போற்றிலேன் உன்னைநான் எனினும்

என்பொழு தெல்லாம் ஞாநசம் பந்தர்
இன்னிசைப் பாடலை ஆய்ந்தே
நன்பொழு தாக நயந்தருள் செய்தாய்
நல்லனீ! தணிகை நாயகனே!

88. தலமெலாஞ் செல்லேன், தீர்த்தங்கள் படியேன்
தாண்மலர் போற்றிலேன் எனது
மலமெலாம் போக்கும் மார்க்கத்தை உணரேன்
வகையிலேன் மூடனா னெனினும்
நலமிலா னிவனென் றெனையொதுக் காது
நாத! நீ யாண்டதும் வியப்பே!
சலமெலாம் போற்றுஞ் சரவணப் பொய்கைத்
தடங்குலாந் தணிகை நாயகனே!

89. என்னையோர் பொருளாக் கருதிநீ என்றன்
இளமைதொட் டெனையக லாமல்
அன்னையே போல அநுதினம் காக்கும்
அருமையை நினைதொறும் உள்ளம்
உன்னையே நாடி மகிழ்வுறும் உன்றன்
ஒப்பிலாக் கருணையை வியக்கும்
பொன்னையே நிகர்க்குந் திருவுரு அழகா!
பூரணா! தணிகை நாயகனே!

90. காயிலாக் கனியே! உனைநிலை யாகக்
கருதுறு ஏழைநா யடியேற்
கேயவே "தணிகை மணி" யெனும் பட்டம்
எண்ணவை முன்புகூ றியனார்
கோயிலா தீனத் தலைவர் மீனாக்ஷி
சுந்தர தேசிகக் கோமான்
வாயிலா அளித்த கருணையை மறவேன்
வரதனே! தணிகை நாயகனே!

91. வான்பெற வானோர் வேண்டிடச் சூரை
வதைத்தவே லாயுதத் தேவே!
யான்பெறத் தகாத பெருமைகள் பல இங்
கெனக்களித் தருளினை அதனால்
தேன்பெறு கடப்ப மாலையாய்! உனது
திருவருட் பெருமையே துலங்கும்!
மான்பெறு கன்னி வள்ளிதாள் பணியு
மணாளனே! தணிகை நாயகனே!

92. கத்தனே! கருணை வெள்ளமே! கண்ணைக்
கண்ணிமை காப்பது போலப்
பித்தனே னென்னைத் தீயவாம் வினைகள்
பீடியா வகைபுரக் கின்றாய்
இத்தனை கருணைக் கேழைநா யடியேன்
எவ்விதத் தகுதியை யுடையேன்
சித்தனே! சித்தர் நாடுறு திருவே!
செந்தனே! தணிகை நாயகனே!

93. தூவிநற் பீலி மாமயி லூருஞ்
சுப்பிர மணியனே! வானோர்
கூவியங் கழைத்தும் காணுதற் கரிய
கோலனாய் நிற்குநீ இந்தப்
பாவியின் ஆவி அதனிலே புகுந்த
பாக்கியம் செப்புறுந் தகைத்தோ!
காவியின் மலர்கள் நாடொறு மலருங்
கவின்பொலி தணிகை நாயகனே!

94. அந்தணச் சிறுவ னாகிநீ யிந்த
அடிமைதன் கனவினில் ஒருநாள்
வந்தெதிர் நின்று வழியதை மறித்து
மறந்தனை எலுமிச்சம் பழத்தைக்

கந்தரந் தாதி தன்னிலே என்று
கனிவுடன் மொழிந்துபின் மறைந்த
அந்தமாக் கருணைக் கென்னைகைம் மாறிங்
காற்றுவன் தணிகை நாயகனே!

95. காவடி மேளம் என்றும் ஓயாத
கண்ணியஞ் சேர்திருப் பழநி
ஆவினன் குடியைக் கண்டுநான் தொழுதே
ஆனந்தம் அடையநீ செய்தாய்!
தேவர்கள் தேவே! ஏரகத் தரசே!
செந்திலம் பதியமர் சேயே!
மூவரும் வணங்கும் பரங்குன்றம் அமர்ந்த
முதல்வனே! தணிகை நாயகனே!

96. விரிபொழில் வீழி மிழலையைக் காண
விரும்பின அடியனுள் ளுவக்க
அரிபணி வீழி மிழலையுங் காட்டி
அன்பொடு மப்பய ணத்தில்
உரியணி சட்டை நாதர்வாழ் காழி
உத்தமத் தலத்தையுங் காட்டித்
திருவருள் புரிந்த கருணையை மறவேன்
செம்மலே! தணிகை நாயகனே!

## வேலின் சிறப்பு

97. வேலதே சிவமஞ் செழுத்தெனச் சொற்றார்
விரிபுகழ்ப் பாவல ரதனுல்
வேலதே நினைக்க, வேலதே ஓத,
வேலதே யான்தொழ என்றன்

பாலதே சிவனார் அஞ்செழுத் தோதும்
பயனெலாம் என உணர்ந் தேன்யான்
தோலதே உடையாக் கொண்டவர்க் கோர்சொல்
சொல்லிய தணிகை நாயகனே !

மயிலின் சிறப்பு

98. காண்டகு மயிலுக் கொருபெயர் நீல
கண்டமென் பாரத னாலே
ஆண்டவன் நீல கண்டத்தைத் துதிக்க
அதில்வரு பயனெலாம் மயிலை
வேண்டியான் துதிக்க எளிதினிற் கூடும் ;
வேல் மயில் இரண்டையும் நினைக்க
ஈண்டிடு பலன்கள் இவையெனக் கூற
இயலுமோ ? தணிகை நாயகனே !

சேவலின் சிறப்பு

99. சேவலுக் கியான் செய் தக்கைம் மாறு
செகத்தினில் இல்லை ; என் உயிரின்
காவலுக் கதைப்போல் துணைபிறி தில்லை ;
காலையில் நாடொறுங் கூவி,
மாவலைப் போக்கும் ஞானசூ ரியனும்
வள்ளலே உனைநினைப் பிக்கும் ;
ஆவலோ டதனை யானினைந் தேத்த
அருளுதி தணிகை நாயகனே !

வேல், மயில், சேவல் தியானப் பலன்

100. ஐயனே உனது வாகன மாகும்
ஆடுமாப் பரிதனைப் போற்ற
மெய்யதா யெனதா ணவமது தொலையும் ;
வீறுசே வற்கொடி தன்னைத்

தூய்யமா நிலையில் தியானிக்க ஞானம்
துலங்கும்; நின் வேற்செபம் கதியை
உய்யுமா றருளும்; உண்மையீ துண்மை
உண்மையே தணிகை நாயகனே!

## தணிகைச் சிறப்பு

101. சகந்தனில் ஞானம் வேண்டிடில் உள்ளத்
தவிப்பதை அடக்குக, மற்றச்
சகந்தனில் அடக்கம் வேண்டிடில் தணிகை
அடைக, என் றுரர ரொர்தாம்!
சுகந்தமே குன்றுத் திருப்புகழ்ப் பாக்கள்
சொல்லிய வே சொல்லி யேத்த
உகந்திடு வானே! உயர்மறைப் பொருளே!
ஒளிவளர் தணிகை நாயகனே!

## தணிகையின் பிறபெயர்கள்

102. உற்பல கிரிமூ லாத்திரி கணிகா
சலமுயர் இந்திர நகரி
கற்பகித் கந்த பர்வதம் சீபூ
ரணகிரி நாரதப் பிரியம்
நற்பிரண வார்த்த நகரம் அகோர
கைவல்யப் பிரதமென் றின்ன
பற்பல பெயர்கொள் சீருறு செல்வப்
பதியதாந் தணிகை நாயகனே!

## தணிகை ஆலயங்கள்

103. நந்தியாற் றுதக்கில் வீராட்ட காச
நாதனு ராலயம், தெற்கில்
எந்தைநீ சாமி நாதனு யமரும்
ஈச்சுரம், அங்கதன் அருகே

வெந்தநீ றணிந்து தவத்தினி லிருந்த
விஜயரா கவர்தளி, தென்பால்
சந்தமார் சத்த கன்னியர் கோயில்
தழைத்திடுந் தணிகை நாயகனே!

### தணிகைத் தீர்த்தங்கள்

104. இந்திர தீர்த்தம் நாரத தீர்த்தம்
எழிலகத் தியமுனி தீர்த்தம்
செந்திரு கணவன் விட்டுணு தீர்த்தம்
சேடதீர்த் தம்மிவை மலைமேல்,
நந்தியாற் றுடனே சரவணப் பொய்கை
நாடுமேழ் சுனைமலைக் கீழ்பால்,
அந்தணன் பிரம தீர்த்தமு நடுவண்
அமைந்துள தணிகை நாயகனே!

### தணிகேசர் அழகு

105. விண்டு நான் முகன்செய் பூசனை யுகந்த
மேலவா! நின் தணி மலையைப்
பண்டுநான் செய்த புண்ணிய வசத்தாற்
பணிந்திடும் பாக்கியம் பெற்றேன்
அண்டர்நா யகனே! அரிதிரு மருகா!
அழகிய நின்திருக் கோலம்
கண்ட என் கண்கள் பிறபொருள் கண்டு
களிக்குமோ? தணிகை நாயகனே!

### தணிகைக் காட்சிகள்

106. ஒப்பிலி உனது திருவடி அழகை
உளக்கிழி வரைபவர் ஒருபால்,
திப்பிய இசைசேர் திருப்புகழ்ப் பாக்கள்
செவியுற மகிழுநர் ஒருபால்,

மைப்படி கண்ணி வள்ளிதாள் பணிந்து
மகிழ்ந்துள நெகிழ்பவர் ஒருபால்,
இப்படிப் பலவே றடியவர் கூடும்
எழிலுறு தணிகை நாயகனே!

107. கிருத்திகை தோறும் பலதிசை யடியார்
கெழுமுமத் திருக்குளக் காட்சி
அருத்தியோ டன்பர் ஆறறு பதுவாம்
அழகிய மலைப்படி யேறித்
திருத்தியோ டுனது திருப்புகழ் பாடிச்
செல்லுமக் காட்சிமற் றெனது
வருத்தமே தீர்க்கும் பல்வகைக் காட்சி
மறப்பனோ? தணிகை நாயகனே!

பிரார்த்தனை

108. நன்கவிப் புலவர் தணிகையின் பெருமை
நலபல பாடலாற் பாடி
உன்கரு ணைக்குப் பாத்திர மானார்;
ஒருவகை ஞானமு மில்லா
என்கவி எவ்வா றுனையுகப் பிக்கும்?
என்பொனே! எளியனே னிட்ட
புன்கவி மாலை தனையுமேற் றருள்வாய்!
புநிதனே! தணிகை நாயகனே!

I. முருகனே ஓலம்! முதல்வனே ஓலம்!
மூவர்கள் தம்பிரான் ஓலம்!
அருகணைப் பத்தர்க் கருளுவாய் ஓலம்!
அரவணைத் துயிலுறு மாயன்

மருகனே ஓலம்! மயிலனே ஓலம்!
வள்ளிம ணாளனே ஓலம்!
உருகுவா ருள்ளத் துறைபவ ஓலம்!
ஓலமெந் தணிகை நாயகனே!

II. வேலினுக் கபயம், மயிலினுக் கபயம்,
வீறுசே வற்கொடிக் கபயம்!
சேலினுக் கிணையாம் கண்ணினள் தேவ
சேனையின் திருவடிக் கபயம்!
பாலினுக் கிணைமென் மொழியினள் வள்ளி
பாததா மரைகளுக் கபயம்!
ஆலனுக் குணர்த்துங் குரவநின் கழற்கே
அபயநான் தணிகை நாயகனே!

III. சரணமெ மரசே! சரணமெ மறிவே!
சரணநீ பவளமே னியனே!
சரணமெ முயிரே! சரணமெ முணர்வே!
சரணநீ பரமதே சிகனே!
சரணமெந் திருவே! சரணமெங் குருவே!
சரணநீ குருவிலா தவனே!
சரணமெங் கதியே! சரணமெம் விதியே!
சரணநீ தணிகை நாயகனே!

IV. அடைக்கலம் வேந்தா! அடைக்கலம் சேந்தா!
அடைக்கலம் அடைக்கலம் பரனே!
அடைக்கலம் குமரா! அடைக்கலம் குழகா!
அடைக்கலம் அடைக்கலம் குகனே!
அடைக்கலம் மயிலா! அடைக்கலம் அயிலா!
அடைக்கலம் அடைக்கலம் பெருமான்!
அடைக்கலம் முருகா! அடைக்கலம் முதல்வா!
அடைக்கலம் தணிகை நாயகனே!

V. அத்தனே போற்றி! ஆதியே போற்றி!
அறுமுக குருபர போற்றி!
சுத்தனே போற்றி! சோதியே போற்றி!
சுடர்மணித் தீபமே போற்றி!
முத்தனே போற்றி! முருகனே போற்றி!
முதல்நடு இறுதியே போற்றி!
புத்தனே போற்றி! பழையனே போற்றி!
போற்றியெந் தணிகை நாயகனே!

VI. நமோநம தேவே! நமோநம கோவே!
நமோநம புவன நாயகனே!
நமோநம சேயே! நமோநம வேளே!
நமோநம கருணை நாயகனே!
நமோநம வீரா! நமோநம தீரா!
நமோநம குமர நாயகனே!
நமோநம வேலா! நமோநம சீலா!
நமோநம தணிகை நாயகனே!

VII. மங்களம் மயில! மங்களம் வரத!
மங்களம் சரவண பவனே!
மங்களம் முருக! மங்களம் குமர!
மங்களம் சிவகுரு பரனே!
மங்களம் குழக! மங்களம் அழக!
மங்களம் அறுமுக குகனே!
மங்களம் பவனே! மங்களம் சிவனே!
மங்களம் தணிகை நாயகனே!

VIII. ஜேஜெய வேலா! ஜேஜெய மயிலா!
ஜேஜெய குறமின் நாயகனே!
ஜேஜெய குகனே! ஜேஜெய பரனே!
ஜேஜெயு குலிசை நாயகனே!
ஜேஜெய அழகா! ஜேஜெய குழகா!
ஜேஜெய அகில நாயகனே!
ஜேஜெய குமரா! ஜேஜெய முருகா!
ஜேஜெய தணிகை நாயகனே!

வாழ்த்து

IX. வாழிநின் தடந்தோள், வாழிநின் முகங்கள்,
வாழிநின் திருக்கையில் நெடுவேல்,
வாழிநின் சேவல், வாழிநின் ஊர்தி,
வாழிநின் திருவடி மலர்கள்,
வாழியெம் உயிராம் தாய்வள்ளி யம்மை,
வாழிநல் வாரண மங்கை,
வாழிநின் அடியார், வாழிநின் புகழ்நூல்,
வாழிநீ தணிகை நாயகனே.

வேலு மயிலுந் துணை

# குறிப்புரை

[ எண்கள் - பாட்டின் எண்கள் ]

1. "வேதநாடரிய விழுப்பெரும் பொருளே"...பேரூர்ப் புராணம் - பள்ளுப்படலம் (32); "நாளும் இன்னிசையாற் றமிழ்பரப்பும் ஞான சம்பந்தன்" - சுந்தரர் தேவாரம் - திருக் கோலக்கா (8).

2. சங்கத்தார் கலகந்தீர்த்த திருவிளையாடல்: 'முருகரும் தமிழும்' - என்னும் நூல் - பக்கம் 10. அங்கம் - எலும்பு.

4. "நெஞ்செனுங்கல்" — "நெஞ்சக் கனகல்", "திணியான மனோசிலை"—கந்தரநுபூதி - காப்பு, (6).

5, 25. குணக்கு - கிழக்கு. எயினச்சி - திருப்புகழ் 426. (பாரவித).

6, 19. முருகர் வண்டின் உருவம் கொண்டது - கச்சியானந்த ருத்திரேசர் வண்டுவிடுதூது - 363-4; முத்துக் குமாரசாமி பிள்ளைத் தமிழ் - செங்கீரை - ௧௦.

7, 81. முரட்டுக்கவிஞன் - பொய்யாமொழிப் புலவர் . திருப்புகழ் 1171 (பத்தித்தராள)

8. கோர + கம்—கம் - தலை; தாரகன் இருவர் - சுப்ரமண்ய பராக்ரமம் (சரிதங்கள் 3, 49.)

9. சகல கலா வல்லப மூர்த்தி - சகலகலைகளும் வல்ல மூர்த்தி எனது குமரன் முருகனே எனத் தேவி உரைத்ததும், முருகரும் 'ஆம் நானே' என ஏற்றுக் கொண்டதும் - சுப்ரமண்ய பராக்ரமம் - 65 ஆவது சரிதம்; திருப்புகழ் - 320 - 'அல்லசலடைந்த'. மார்தட்டுதல் - "வேதத்தின் பொருளோனே நான் என்று மார்தட்டும் பெருமாள்" - திருப்புகழ் 1295 - 'நீலங்கொள்'.

10. கந்தரலங்காரம் - 'விழிக்குத் துணை' —70.

11. முருகம்மையார் சரிதம்-'முருக' என்னும் திருநாமத்தை ஓதி முருகம்மையார் அறுபட்ட கை சரிவரப் பெற்ற சரிதம் - சுப்ரமண்ய பராக்ரமம் - 58-ஆவது சரிதம்.

11, 12, 42. நக்கீரர் சரிதம் - திருப்பரங்குன்றப் புராணமும், 'முருகரும் தமிழும்' என்னும் நூலில் பக்கம் - 13-ம் பார்க்க.

13. இடும்பன் சரிதம - சிவகிரி, சத்திகிரி எனப்படும் குன்றுகளை இடும்பன் காவடியாக அகத்தியருக்காகக் கொண்டு வர அவை முருகன் திருவிளையாடலால் பழநித்தலத்தில் தங்கிவிட்ட சரிதம் - [பழநித்தல புராணம், சுப்ரமண்ய பராக்ரமம் - 35-ஆவது சரிதம்]. ககம் - பறவை : மயில் - வாகனமும், கொடியும் : "பல்பொறி மஞ்ஞை வெல்கொடி யகவ" — திருமுருகாற்றுப்படை.

14. ஔவையொடு லீலை—'முருகரும் தமிழும்'—பக்கம் 20.

15. மாடு மேய்ப்போனாய் வந்த லீலை - ஷை - பக்கம் 46; மால் - அன்பு. நந்தும் - பெருகும்.

16. எந்தை - திருப்புகழ் வெளியிட்ட எனது அருமைத் தந்தையார் - வ. த. சுப்பிரமணிய பிள்ளை (1846-1909).

17. 'ஏழிசையாய் இசைப்பயனாய்'—சுந்தரர் தேவாரம் - ஆரூர்.

21. 'மட்டுலா மலர்கொண் டடியிணை வணங்கும்' - ஷை - திருமுல்லைவாயில்.

22, 31. திருப்புகழ் - 5 (உளைத்தினம்).

23. நாவலர் - நம்பியாண்டார் நம்பி—"ஞாலத் தணிபுகழ் ஞானசம் பந்தனை நற்றமிழே போலப் பலபுன் கவிகொண்டு சேவடி போற்றுவனே"—ஆளுடைய பிள்ளை கலம்பகம். (3).

25. குணக்கெழுவோன் - சூரியன்.

32. வேந்தன்—உக்கிர பாண்டியன்—"குமரவேள் வழுதி உக்கிரன் எனப்பேர் கொண்டதும் தண்டமிழ் மதுரம் கூட்டுணா எழுந்த வேட்கையால்"—மதுரைக் கலம்பகம்.

37. பின்னையங்கேள்வன் - திருமால்.

37, 5?, 105. தணிகையிற் பூசித்துப் பேறுபெற்றோர் · [தணிகைப் புராணத்திற் பார்க்க.]

42. நக்கீரருக்கு அடி எடுத்துக் கொடுத்தது—"முருகரும் தமிழும்" என்னும் நூல்—பக்கம் 17.

47. புலவர் இருவர்-கச்சியப்பமுனிவர் (தணிகைப் புராணம்), கந்தப்பதேசிகர் (தணிகாசல புராணம்).

49. பெரியவர்- அப்பர். "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"—திருத்தாண்டகம், கோயில் - 1 ஈற்றடி—"இறக்கின்று நும்மை மறக்கினும் என்னைக் குறிக்கொண்மினே"—அப்பர் திரு விருத்தம், வீழிமிழலை.

51. "நான் துஞ்சும் போழ்துநின் நாமத்திரு எழுத்து அஞ்சுந் தோன்ற அருளும் ஐயாறரே"—அப்பர் - குறுந்தொகை, ஐயாறு.

52. "ஆணவத்தோ டத்துவித மானபடி மெய்ஞ்ஞானத், தாணுவினோ டத்துவிதஞ் சாருநா ளெந்நாளோ!"—தாயுமானவர்.

53. "கோளுநாளுந் தீயவேனும் நன்காங் குறிக்கொண் மினே"—சம்பந்தர் - திருநாகேச்சுரம்.

55. "உரு எண்ணி ஓதல்"—உருப்போட்டுப் படித்தல் - "மாலை உரு எணத் தவமாமே"—சம்பந்தர் - திருப்பருப்பதம்.

58. "அர்ச்சனை பாட்டே யாகும்"—பெரியபுராணம் - தடுத் தாட்கொண்ட புராணம் - (70)

61. சூரனுக்கு அரணாக வந்த எழுகிரியை முருகர் சாய்த்தது. "எழுமலை கொல்லும் அசனி"—தக்க யாகப் பரணி - பக்கம் 70, 259. திருப்புகழ் - 548, 990, 1257. "கடல்பரவு", "விரகற", "நாகாங்க"]

62. "வள்ளி சன்மார்க்கம்"—என்பது யானென்பது அற்று இறைவனையே நாடி நிற்றல் - அத்தகைய குணப்பெரி யோரை இறைவனே நாடிச் சென்று அருள்புரிவான் - இதன் விவரம் திருப்புகழ் 317 - 'கள்ளக் குவாற்பை' என்னும் பாடலி லும் - திருப்புகழ் அமிர்தம் - சித்ரபானு மார்கழி இதழிலும் பார்க்க.

63. அடியன் - சுந்தரமூர்த்தி சுவாமி. "யாம் இரப்பவை, பொருளும் பொன்னும் போகமும் அல்ல நின்பால், அருளும் அன்பும் அறனும் மூன்றும்" பரிபாடல், (ரு)—79 - 81.

64. உத்தமப் புலவர்—அருணகிரி நாதர்-[கந்தரலங்காரம்-22]

65. சம்பந்தர், தேவி தந்த ஞானப்பால் உண்டது; 'கண்மலைசந் தேங்கலும்'—நம்பி. ஆளுடை. அந்தாதி - 73) 'அழுதழுதழைத் தனன்'—முத்து. பிள்ளைத்தமிழ். அம்புலி. (கO).

66. கூன்பாண்டியனுக்கு முன்னும் பின்னும் இருந்த இரண்டு கூனையும் சம்பந்தர் நீக்கிய சரிதம்—"முன்பின்... அங்கம் திருத்திய"—கந்தரந்தாதி 56. "திருக்கை, வைத்தலுமே இரு கூனும் நிமிர்ந்தன"—தக்கயாகப் பரணி - 216. 'யானும் பரவித் தீர்க்கின்றேன் ஏழு பிறப்பின் முடங்கு கூன்'—பெரிய புராணம் - கூற்றுவ நாயனார் (க).

67 மிகப்பெரியார் - சேக்கிழார். பனை - சிவத்தொடு கூடினது - "பிள்ளையார்தந் திருவாக்கிற் பிறத்தலால் அத்தாலமும் ......சிவமே கூடின"—பெரிய புராணம் - சம்பந்தர் 983. வன்பன் - கடின குணத்தன். (அன்பன் எனவும் பிரிக்கலாம்.)

68. தேம் பாவை - இனிய பாடலை.

69. திருமாலைச் சிவமாகக் குறுகச் செய்தது. கந்தபுராணம்-திருக்குற்றாலப்படலம். வாமனன் (மால்), வாமன் (சிவன்) எனச் சொற்கள் அளவினுங்கூடக் குறுக்கம். 'சிவமாக்கி யெனை யாண்ட'—திருவாசகம். 51 (க).

70. சம்பந்தர் - திருமாலுக்குச் சிவசாருபம் அளித்தது. "புகலு கொண்டற்குச் சித்தியளிக்கும் பெருமாளே"—திருப்புகழ் 458 "செறிதரும்"; "முத்தமிழ் விரகர் பாட்டலங்கலாற் பரஞ்சுடர் திருவுருப் பெற்றான்"—"முருகப் புத்தேள் அருள்விழிப் பார்வை தன்னால்......முருந்த னோர் இலிங்கமானான் - காஞ்சிப் புராணம் - திருமேற்றளிப்படலம் (11), அந்தருவேதிப்படலம் (35). முக்கணக்கன் - முக்கண் + நக்கன் (அககன்) - சிவன்.

71. தக்ஷிண கயிலையாகிய காளத்தியும் கயிலையே என (முருகா) நக்கீரருக்கு உரைத்தது - காளத்திப் புராணம் - நக்கீரச் சருக்கம் (125). பேயனேற்கு + அயிலை (வேலாயுதத்தை).

72. கல்லடி தந்தவர்—சாக்கிய நாயனார் - (பெரிய புராணம்)

73,74. கந்தபுராணம் - தகரேறு படலம். யானம் - வாகனம். ஏழகம் - ஆடு. 'புலராக் காழகம் புலர உடீஇ' - திருமுருகாற்றுப் படை 184. "வாழகந் தேடுதல் - "மாசிலடியார்கள் வாழ்கின்ற ஊர் சென்று தேடி விளையாடியே யங்ஙனே நின்று வாழு மயில் வீரனே" திருப்புகழ் 93. "மூளும் வினை"

75. மாவினை - மாமரத்தை (சூரனை); மா வினை - பெரிய வினையை.

76. கந்தபுராணம் - மூவாயிரர் வதைப்படலம் 75 - 83. விஜயன் - பூதகணத் தலைவன். "ஓர ஒட்டார்" - கந்தர் அலங் காரம் 4.

77. கந்தபுராணம் மூன்றும் நாள் பானுகோபன் யுத்தப் படலம் - 185, 186, 208.

78. கந்தபுராணம் - சூரபன்மன் வதைப்படலம் - 348, 349.

79. 'ஐவரை ஆசறுத் தாளும்' - சம்பந்தர் - கலிக்காமூர் (2)

80. கச்சியப்ப சிவாசாரியர் - ("முருகரும் தமிழும்" பக்கம் 39)

81, 7. பொய்யா மொழிப்புலவர் சரித்திரம்—ஷை பக்கம் 29.

82. 'குமரகுருபர சுவாமிகள்' சரித்திரம் - முருகரும் தமிழும், பக்கம் 43. பா - மன் = பாவினுக் கரசு. தா - மன்ன = அரசே! கொடு.

83. முருகபிரானை வழிபட்டுச் சாதவாகனன் என்னும் அரச னுக்கு ஆறு மாதத்திற் சகல கலைகளும் வரச் செய்த மந்திரி சர்வ வர்மா—பெருங்கதை, II - பதிப்பு, பக்கம் - XLIX.; 'அறிவும் அறிதத்துவமும் அபரிமித வித்தைகளும் அறியென இமைப் பொழுதில் வாழ்வித்த வேதியனும்"—வேடிச்சி காவலன் வகுப்பு 13-ஆவது அடி.

84. "சும்மா இரு சொல்லற"—சும்மா இருக்கும் நிலை- கந்தரநுபூதி - 12.

85. முருகபிரான் வராகத்தை அடக்கியது. கந்த புராணம்- இரணியன் யுத்தப் படலம் - 26. மூன்றும் நாள் பானுகோபன் யுத்தப் படலம் - 63. திருப்புகழ் 503 "காவிப்பூவை". தத்து = ஆபத்து.

93. "தூவிநற் பீலி மாமயி லூருஞ் சுப்பிரமணியன்"—திரு விசைப்பா - திருவிடைக் கழி. (3)

94. எலுமிச்சம் பழக் கதை திறம் - 'முருகரும் தமிழும்'— பக்கம் 50.

95. மூவர் (சேர சோழ பாண்டியர்) வணங்கும் பரங்குன்று (சுந்தரர் - கோத்திட்டை); மூவர் (அரன், அரி, அயன்) வணங்கும் முதல்வன்.

97. பாவலர் - அருணகிரிநாதர்— "அவுணன் தெறித்து மங்க சிவமஞ் செழுத்தை முந்த விடுவோனே"—திருப்புகழ் - 606 "பிருவம் பணைத்து"

98. நீலகண்டம் - மயில் - திருப்பூவணநாதர் உலா (131).

99. ஞான சூரியனைச் சேவல் கூவி அழைப்பது—தணிகைச் சந்நிதி முறை . சேவல் பத்து - 3-ஆம் பாட்டு. "சேவற்பாட்டு"- என்னும் நூலில் 5-ஆம் பாட்டு. மா அல் - பேரிருள் (அஞ்ஞானம்).

101. "உள்ளம் அடங்குறின் அல்லால்...சிவஞானம் சிவணுது; செருத் தணியை நள்ளுவையேல் உளம் அடங்கும். ஞானமும் எய்துவை"—தணிகைப் புராணம் - இராமனருள் பெறு படலம். (42) "சொல்லியவே சொல்லி யேத்துகப் பானை"- சுந்தரர் - வலிவலம்.

102. தணிகைப்புராணம், புராணவரலாற்றுப் படலம்-58-60.

103. உதக்கு - வடக்கு.

105. புண்ணிய வசத்தால் தணிகைத் தரிசனம் கிடைப்பது:- "தணிகை யித்தலத்தை நீ செய் புண்ணிய மிகுதியாற்குற் போந் தனை"—தணிகைப் புராணம் - அகத்தியனருள் பெறு படலம்-140.

II. ஆலன் - சிவபிரான். "ஆலன் கண்டத்தமர் நீலன்"- அப்பர் - திருநீலக்குடி.

V. புத்தன் - புதியவன்—'முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"—திருவாசகம்.

IX. ஊர்தி - மயில், யானை, ஆடு. புகழ் நூல் - திருப்புகழ்.

# பாட்டு முதற் குறிப்பகராதி

[ எண் - பாட்டின் எண் ]


| | |
|---|---|
| அகத்திய | 13 |
| அடியனேன் | 26 |
| அடைக்கலம் | IV |
| அண்டரோ | 56 |
| அத்தனே | V |
| அந்தண | 94 |
| அரவொலி | 24 |
| அற்புதம் | 84 |
| அற்புதன் | 58 |
| அன்பொழு | 87 |
| அன்று | 42 |
| அன்றொரு | 73 |
| அன்னை | 86 |
| ஆணவ | 52 |
| ஆய்ந்த | 29 |
| ஆரமு | 55 |
| ஆலங் | 59 |
| ஆறுமாத | 83 |
| இந்திர ஞால | 78 |
| இந்திர தீர்த்தம் | 104 |
| ஈசனே | 30 |
| உள்ளதே | 19 |
| உற்பல | 102 |
| உன்னிரு | 80 |
| உன்னையே | 62 |
| உனைத்தினம் | 22 |
| ஊமனை | 82 |
| எங்கள | 18 |
| எங்களா | 35 |
| எத்துணைப் பிழை | 20 |
| எத்துணையிடர் | 60 |
| என்ன தான் | 37 |
| என்ன வேலை | 36 |
| என்னை | 89 |
| ஏழுகம் | 74 |
| ஏழிசை | 17 |
| ஏறு | 51 |
| ஏனந்த | 15 |
| ஐயகோ | 38 |
| ஐயனே எனது | 10 |
| ஐயனே யுனது வாக்கினிற் | 67 |
| ஐயனே யுனது வாகனமாகும் | 100 |
| ஒப்பிலி | 106 |
| ஒன்றை | 70 |
| கடலலை | 40 |
| கடன் மடை | 16 |
| கண் பிசை | 65 |
| கணக்கிலை | 5 |
| கந்தனே | 92 |
| கருவினில் | 28 |
| கலலடி | 72 |
| கவிசொலேன் | 81 |
| காண்டகு | 98 |
| காணுதற | 71 |
| காததிரு | 44 |
| காயிலா | 90 |
| காவடி | 95 |
| கிருத்திகை | 107 |
| குன்று | 4 |
| கொடுபழம் | 14 |
| கோனென | 9 |
| சகந்தனில் | 101 |
| சங்கத்து | 2 |
| சங்கரன் | 41 |
| சத்தி வேல் | 45 |
| சரணம | III |
| சிறப்பினை | 66 |
| சூரகம் | 8 |
| சூரனுக் | 61 |
| செப்பிடேன் | 27 |
| சேவலுக் | 99 |
| சைவர்கள் | 79 |
| தண்ணறும் | 69 |
| தணிகை | 46 |
| தம்பியர் | 77 |
| தலமெலாம் | 88 |
| தாயினு | 48 |
| திருப்பரங் | 3 |
| திருவணு | 54 |
| திருவளர் | காப்பு |
| திரைகுலாம் | 47 |
| தினத் தினம் | 31 |
| தூண்டிடா | 33 |
| தூவி | 93 |
| தேனிலை | 32 |
| தோளின் | 53 |
| நநதி | 103 |
| நமோநம | VI |
| நன்கவிப் புலவர் | 108 |
| நன்கவி பாடி | 23 |
| நினைவிலன் | 50 |
| பணியுமா | 34 |
| பத்த | 8 |
| பன்னகா | 5 |
| பாருளார் | 6 |
| பாவலன் | 1 |
| பிறந்த | 4 |
| பிறர் | [illegible] |
| பின்வரு | [illegible] |
| பூவினை | [illegible] |
| மங்களம் | V[illegible] |
| மட்டுலா | [illegible] |
| மண்ணை | [illegible] |
| முத்தமிழாலே | [illegible] |
| முருக என் | [illegible] |
| முருகனே | [illegible] |
| வண்டின | [illegible] |
| வணக்கமோடு | 2[illegible] |
| வரத்தினர் | 7[illegible] |
| வாணுதல் | [illegible] |
| வாழி | I[illegible] |
| வான்பெற | 9[illegible] |
| விண்டு | 10[illegible] |
| விரிபொழில் | 96 |
| வேத | 1 |
| வேலதே | 97 |
| வேலினுக் | II |
| ஜேஜெய | VIII |


The Liberty Press, Madras

ஸ்ரீ

# பரிணய பஞ்சகம்

(படங்களுடன்).

ஜயம் அண்டு கம்பனி
35, ஹைரோட்; எழும்பூர்,
சென்னை.

1924.

பதிவு செய்தது] [விலை 6 அணா.

40327

# நூல் அடக்கம்

பக்கம்.


1. ருக்மிணீ பரிணயம் :—

1. விதர்ப்பன் விருப்பம் ... ... 5
2. ருக்மிணியின் ஏக்கம் ... ... 8
3. வேதியர் கிருஷ்ணனைத் தரிசித்தல் ... 10
4. ருக்மிணி மகிழ்தல் ... ... 13
5. கிருஷ்ணன் ருக்மிணியைக் கவர்தல் ... 16

2. சத்தியபாமா பரிணயம் :—

1. சாம்பன் ஒளிமணி கவர்ந்தது ... ... 23
2. கிருஷ்ணனும் சாம்பனும் ... ... 25
3. கிருஷ்ணன் சத்தியபாமையை மணத்தல் ... 28

3. பாஞ்சாலீ பரிணயம் : —

1. துரோணாசாரியரும் துருபதனும் ... ... 33
2. துருபதன் கொண்ட விருதம் ... ... 35
3. பாஞ்சாலியின் சுயம்வரம ... ... 37
4. பாஞ்சாலியின் திருமணம ... ... 42

4. சுபத்திரா பரிணயம் :—


1. கிருஷ்ணனும் அருச்சுன சன்னியாசியும் ... 47
2. கிருஷ்ணன் புரிந்த தந்திரம் ... ... 50
3. சுபத்திரை சன்னியாசியை அறிதல் ... 53
4. திருமணம் ... ... 58
5. கிருஷ்ணன் சமாதானம் கூறுதல்... ... 60

5. உத்தரா பரிணயம் :—

1. பாண்டவர்கள் அஜ்ஞாத வாசம் ... ...67
2. நிரை மீட்சி ... ... 69
3. திருமணம் ... ... 72

குறிப்புரை ... ... 77

# ருக்மிணீ பரிணயம்



கிருஷ்ணன் ருக்மிணியைக் கவர்தல்

# ருக்மிணீ பரிணயம்.

## 1. விதர்ப்பன் விருப்பம்.

நிலமகள் திலகமென எழில் வாய்ந்து விளங்கும் வட மதுரை எனும் பதி, முத்திதரும் நகரம் ஏழனுள் ஒன்று. இந்நகரில் பலராமனும் கிருஷ்ணனும், வசுதேவர்க்குக் குமாரர் களாய்த் தோன்றி விளங்கினார்கள். அவர்கள் குழவிப்பருவத் தில் ஆயர்பாடி அடைந்து, நந்தகோபரது மாளிகையில் வளர்ந்து, பிறகு ஆயர்கள் பலருடன் பிருந்தாவனம் குடி புகுந்து, அங்குப் பல திருவிளையாடல்கள் புரிந்து, மண்ண வரையும் விண்ணவரையும் மகிழ்வித்தனர். அவ் விருவருள், கிருஷ்ணனது பெருமையும் திறமையும் மிக வியக்கத்தக்கவை. பூதனையை வீழ்த்தியதும், சகட முதைத்ததும், மருதம் சாய்த் ததும், பவளவாய் திறந்து பிரபஞ்சம் காட்டியதும், கிருஷ் ணனேயாம். பகனைக் கிழித்ததும், அகனை வீழ்த்தியதும், அரவின்மேல் ஆடியதும், கோவர்த்தன மேந்தியதும் அப் பெருமானேயாம்.

பலராம கிருஷ்ணர்கள் சிறுபிராயந் தொடங்கி இணைபிரி யாதிருந்து, பல கொடிய அரக்கர்களைக் கொன்று வீழ்த்திப் புகழ் மிகுந்து இருந்தனர். சின்னாள் சென்றதும் இவர்கள் மேற்கடலிடைத் தீவு சேர்ந்து, துவாரகை எனும் அழகிய நக ரம் ஏற்படுத்திக் கொண்டு, அங்கு யாதவர் பல்லாயிரவருடன் வதிந்து, சகல வைபவத்துடன் அரசாட்சி புரிந்து வந்தனர்.

அப்பொழுது துவாரகையைக் கண்டு களிக்காதாரில்லை; கிருஷ்ணனைக் கண்டு அவரது திருமேனி அழகில் ஈடுபடாதாருமில்லை. கிருஷ்ணனது பேரும் புகழும் எங்கும் விரைவில் எளிதில் பரவலாயின. இங்ஙன மிருக்கையில் மூத்த நம்பியாகிய பலராமன், ரேவதனது புத்திரியாகிய ரேவதியை மணந்து இனிது இருந்தனன்.

துவாரகையில் இவர்கள் சிறப்புடன் வாழ்கையில் விதர்ப்பதேசத்தரசனது மகளாகிய ருக்மிணி என்பாள், கிருஷ்ணனுடைய அழகும் புகழும் கேட்டு வியந்து, அவர் மீது பேரன்பு பூண்டு, அவரையே மணம்புரிய உறுதியாக எண்ணங் கொண்டிருந்தனள். கண்ணனையே கருத்திற் கொண்ட ருக்மிணி, ஊணும் வேண்டாள்; உறக்கங் கொள்ளாள்; ஏக்கங் கொண்டாள்; உடலும் மெலிந்தாள். அவள் தனது அரிய விருப்பத்தைத் தன் உயிர்த் தோழிகளுக்குக் கூறி மனம வெதும்பிப் பெரு மூச்சுவிட்டு அயர்ந்திருப்பள். அப்பொழுது தோழியர்கள், அவளுக்குப் பல நன்னிமித்தங்கள் காட்டித் தேறுதல் கூறிப் பலவாறு உபசரிப்பார்கள். அவ் வுபசரணையால் அவள் ஒருவாறு சிறிது தெளிந்திருப்பள்.

இங்ஙனம் சில நாட்கள் செல்ல, விதர்ப்ப மன்னனும் அவனது தேவியும, தமது மகளுக்கு உற்ற கவற்சி இன்னதென்று தோழியர்கள் சொல்லக் கேட்டு, அவளைக் கிருஷ்ணனுக்கு மணம் புரிவிக்கத் தீர்மானித்தார்கள். இச் செய்தி அறிந்து விதர்ப்பநாடு முழுமையும் மகிழ்ந்திருந்தது. விவாகத்திற்குரிய நலங்கள் யாவையும் தகுதியானபடி செய்ய எண்ணின விதர்ப்பன், தனது உறவினரோடும் அரிய நண்பர்களோடும் ஆலோசிக்கலாயினன். அப்பொழுது அங்கிருந்த

அவனது மூத்த குமாரனாகிய ருக்மி என்பான், தந்தையின் கருத்தறிந்து சினந்து எழுந்து, "ஆ! என் இவ்வெண்ணம்! கிருஷ்ணனுடைய பெருமையை நீங்கள் அறியீரோ! கோபாலரோடோ பூபாலர் உறவு கொள்வது! அது தகாது. எனது நண்பனாய்ச் சேதிநாட்டு மன்னனாய் வீரம் மிகுந்து விளங்கும் சிசுபாலனுக்கே ருக்மிணியை மணம் புரிவிக்கவேண்டும்," என்று கடுமையாகக் கூறிப் பிடிவாதங் கொண்டான்.

விதர்ப்ப வள நாடனே வருத்தம் மிகுந்து திகைத்திருந்தான். மைந்தனது மூர்க்க குணத்தை உரியபடி அறிந்த அம் மன்னன், எதிர்மொழி ஒன்றும் கூறாது, சிறிது போது சிந்தித்து, மாதவனை மனத்தில் உன்னிப் பின்பு தனயனை நோக்கி, "குமார ஏறே! என் செய்வது! நீ விரும்பியபடியே செய்; விதியின்படியே யாவும் நடக்கும்; உன்னைப் பழிப்பதில் யாது பயன்?" என்று மொழிந்து மைந்தன் கருத்திற்கு இசைந்திருந்தனன்.

ருக்மியின் துர்க்குணத்தை அறியாதிரில்லை. அவன் என்றும் பெற்றோர்க்கு அடங்கான்; நன்மை தீமை யறியான்; பெரியோர்சொற் கேளான்; உண்மை யறியான்; அன்றியும் மூர்க்கன்; இவனை அடக்கி நல்வழிப்படுத்தப் பலவாறு முயன்றும் பாழாயினமையின், பெற்றோரும் பிறரும் இவனிடத்தில் வெறுப்புக் கொண்டிருந்தனர்.

ருக்மியோ மனம் உவந்து, தங்கையின் திருமணத்தைச் சிறக்க நடப்பிக்கக் கருதி, எத்தகைய ஏற்பாடுகளையும் தானே முன்னின்று செய்யத் தலைப்பட்டான். அவன், செருக்கு மிகுந்து, தன் திறமையை அனைவர்க்கும் எடுத்துரைத்து, விவாகத்திற்குரிய நனனாளையும் குறிப்பிட்டு, நாடெங்

கும் தூது போக்கிச் செய்தி அறிவித்து மகிழ்ந்திருந்தனன். ருக்மிணியை மணம் புரியலாமெனும் பெருங்களிப்பால் சிசுபாலன், உடல் பூரித்து நாளை எண்ணியிருந்தான்.

இவை யாவும் அறிந்த விதர்ப்பதேச மாந்தர், மகிழ்ச்சி குலைந்து, தம்முள் பலவாறு பேசுவாராயினர். 'ருக்மிணிக்கு ஏற்ற மணாளன் கிருஷ்ணனே,' என்றார் சிலர். 'சிசுபாலனைக் காணவும் அவள் சகியாள்,' என்றார் சிலர். 'பெற்றோர்க்கடங்காப் பிள்ளை ஏன்?' என்றார் வேறு சிலர். 'விதியை அறிவார் யார்?' என்றார் மற்றும் சிலர். 'இவை யாவும் அம் மாயவன் அறிவன்,' என்றார் இன்னம் சிலர். 'ஆம்! ஆம்! அவன் அறிவன்,' என்று புன்முறுவல் கொண்டார் பலர். இங்ஙனம் அந் நகரமாந்தர் பேசுபவராய்க் கொடிய சிசுபாலனை நினைந்து அஞ்சி உள்ளம் குழம்பி ஏங்கி இருந்தனர்.

---

## 2. ருக்மிணியின் ஏக்கம்.

கிருஷ்ணனையே கருத்திற் கொண்டிருந்த ருக்மிணியோ உற்ற செய்தி அனைத்தையும் அறிந்தாள்; தீய சிசுபாலனுக்கு வாழ்க்கைப்படவேண்டுமே என்று அவள், வருத்த மிகுந்து, உய்யும் வழி அறியாளாய்க் கண்ணன் கழலிணையே எண்ணி, என்பும் உருக அன்பு கொண்டு கண்ணீர் வார உள்ளமுருகியிருந்தாள். அத்தகைய நிலைமையில் அவட்கு ஓர் உபாயம் மனத்தில் உதித்தது.

நான்மறை பயின்ற நல்லந்தணர் ஒருவர், நாடோறும் விதர்ப்பராசனது அரண்மனைக்கு வந்து பிக்ஷை வாங்கிச் செல்வது வழக்கம். அங்ஙனம் வருகையில் அவர் கிருஷ்ண

னையே துதித்துப் பாடுவர்; அன்றியும் அவர், அவ் வரண்மனையில் ருக்மிணியின் கையாலன்றி வேறு எவர் கையிலும் பிக்ஷை பெறுவதில்லை; மற்று எங்கும் அவர் பிக்ஷைக்குச் செல்வதுமில்லை. ருக்மிணி இடும் பிக்ஷையில் விசேஷம உண்டு என்பதை அம் மகான் நன்கு அறிந்தார்போலும். ருக்மிணி அவரிடத்தில் அன்பு மிகுந்து, கிருஷ்ண கானம் கேட்டு மகிழ்ந்து, ஒவ்வொருநாளும் அவ் வேதியரை உபசரித்து வரலாயினள். அவரும் ருக்மிணியை ஆசீர்வதித்துச் செல்வர்.

இத்தகைய நிலைமையில் ருக்மிணி, அம் முதுவேதியரை அழைத்து, "அந்தணர் பெரும! என்செய்வேன்! எனக்கு நேர்ந்துள்ள துன்பத்தை யாரிடம் எடுத்துரைப்பேன்! தாய் தந்தையரது கருத்திற்கும் எனது விருப்பத்திற்கும் எதிராக யாவும் நேர்ந்துள. சிசுபாலனையோ நான் வரிப்பது? இத் துயரை யான் எங்ஙனம் சகிப்பேன்? துவாரகாதிபதியாகிய அப் பெருமானே என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டனர். அவரே என் உயிர்க் காதலராவர். உற்ற துன்பத்தினின்று என்னைக் கரை ஏற்றுபவர் அவரே ஆவர். எனக்கு இவ்வேளை நீவிரே உற்ற உதவி புரிந்தருளவேண்டும். ஆதலால் தேவரீர் துவாரகைக்குச் சென்று நம் பிரானுக்கு என் மொழி கூறி, என்னைக் காக்க வேண்டுவீராக. மன்றல் நடைபெறும் நன்னாளில் நான், குடும்பமுறைப்படி காளிகோயிலைத் தொழக் கால்நடையாய்ப் பலர் புடைசூழச் செல்வேன். யான் காளிதேவியைப் பூசித்து வெளி வருகையில், துவாரகாதிபதியாகிய அவ் வண்ணல் அக்கோயிலை நண்ணி என்னைக் காத்து அருள்புரியுமாறு வேண்டுவீராக. யான் தரும்

நிருபமும் கொண்டு சென்று அவர் கையில் அளிப்பீராக. இதுவே எனது பிரார்த்தனை. நீர் இவ்வுதவி புரிவீரேல், என் உயிர் தந்தீர் ஆவீர்; காற்றினும் கடுகச் சென்று, நீல மால்வரையை நேரிற் கண்டு, செய்தி கூறி நல்லுரை கொண்டு விரைந்து மீள்வீராக,'' என மொழிந்து, பூந்தடங் கண்ணீர் உகுத்து ஏங்கினள். மறையவர் ருக்மிணியின் எளிய இனிய நிலைமைக்கு இரங்கித் தூதுக்கு உடன்பட்டு நிருபம் பெற்றுத் துவாரகைக்குச் செல்வாராயினர்.

மறையவர் ஏகியபின் ருக்மிணி, தனியே ஓரிடத்தில் இருந்து, ஆழ்ந்த கருத்தினளாய், "என் செய்வேன்! தூது விடுத்தது பிழையாகுமோ? என் மொழி அனைத்தையும் வேதியா கூறுவாரோ? அல்லது ஏதேனும் மறப்பாரோ? ஒருகால் துவாரகையைக் கண்டு மயங்கி அங்கேயே இருந்துவிடுவரோ? துவாரகாதிபதியாகிய அப்பெருமான், என்னை வேண்டாது வெறுப்பரேல் ஆ! என் கதி யாதாகும்? வேதியர் வர நாளாகுமோ? புயல் பார்க்கும் சாதகப் புள் போன்றேன்! மனோரதமோ சமீபித்தது. என்செய்வேன்!'' என்று பலவாறு உன்னி உன்னி உள்ளம் உருகி நைந்தாள்.

---

## 3. வேதியர் கிருஷ்ணனைத் தரிசித்தல்.

தூது சென்ற அந்தணர் விரைந்து வழி நடந்து, குன்றும், காடும், கடலும் கடந்து, துவரை யம்பதி நண்ணினர். அந் நகரைச் சூழ்ந்த அழகிய பொழில்களும், இனிய பறவைகளின் தீங்குரலும், நீர் நிறைந்த வாவிகளும், செழித்த வயல்களும், அகன்ற வீதிகளும், உயர்ந்த மாளிகைகளும், குறையின்றி மகிழ்ந்திருக்கும் குடிகளின் தோற்றமும் வேதியரது

உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. அவர், துவரையின் அழகு கண்டு உள்ளம் பூரித்து, ஆனந்தக் கண்ணீர் சிந்திய வண்ணமே பல விசித்திர வீதிகளையும் அரிதிற் கடந்து கண்ணனது அரண்மனை வாயிலை நண்ணிப் பரமனைக் காணப் பேரவா மிகுந்து, தன் வரவைக் கண்ணனுக்கு அறிவிக்குமாறு காவலரை வேண்டினர். அன்னோர் விரைந்து சென்று ஸ்ரீ வாசுதேவனை வணங்கி, "அண்ணலே! விதர்ப்பநாட்டினின்று வேதியர் ஒருவர் நும்மை நேரிற்காண விரும்புகின்றனர்," என்றனர்.

அம்மொழி கேட்டதும் மாயோன், "அவரை வரவிடுமின்," எனப் பணித்தனர். காவலர் வெளிவந்து அந்தணரை இறைஞ்சி கோயிற்குட் செல்ல வேண்டினர். மறையவர், மகிழ்ச்சி மிகுந்து, அரண்மனைக்குட் சென்று, கண்ணனைக் கண்ணிற் கண்டார். காணலும் அம்முது வேதியர், அப்பெருமானது திருமேனி அழகில் ஈடுபட்டு ஆனந்த பரவசராய்த் திகைத்து நின்றார்; பின் சிறிது தெளிந்து, "என்னே! யாம் கொணர்ந்த தூதினை இவரிடம் எங்ஙனம் எடுத்துச் சொல்வது? ருக்மிணியை வரிக்க இசைவரோ? அல்லது தகாத மொழி கூறினமென்று நம்மை ஒருகால் தண்டிப்பரோ?" எனப் பல் வேறுவகையில் எண்ணமிட்டு, மனம் குழம்பி, பேசவும் நா எழாமல் தயங்கி நின்றனர். ருக்மிணிக்கு உற்ற கவற்சியினும், இவ் வெளிய மறையவர்க்குத் தோன்றிய கவலையே பெரிதாயிற்று. என்னே அப் பரமனது பெருமை!

எள்ளினுள் எண்ணெய்போல் எங்கும் உறைந்து யாவும் அறியும் அமலனாகிய கண்ணபிரான், ருக்மிணியின் விருப்பம்

அறிந்து, அவளைக் காத்தருளக் கருதியிருந்தனர். அங்ஙனம் கருதிய பெருமான், அம் மறையவரை நோக்கி, "அந்தணர் பெரும! விதர்ப்ப மன்னன் முதலானோர் இனிது வாழ்கின்றனரோ? நீவிர் இங்குவர விசேடம் ஏதேனும் உண்டோ?" என்று சேமம் உசாவினர்.

இங்ஙனம் முகில்வண்ணன் வினவலும், வேதியர் உள்ளம் தெளிந்து தைரியங்கொண்டு, "பெரும! அனைவரும் இனிதே வாழ்கின்றனர். வேந்தனது மடமகளாகிய ருக்மிணி தந்த இந் நிருபத்தைக் கருணையோடு காண்பீராக," என்று கூறித் திருமுகம் ஈந்து உவந்தனர்.

ஸ்ரீ கிருஷ்ணன், முறுவல்பூத்த திருமுகத்தோடு அந்நிருபத்தைத் தம் கரத்தில் வாங்கி உற்று நோக்கினர்; நோக்கலும் அதன்மீது சில விசித்திரக் குறிப்புக்கள் இருக்கக் கண்டனர். ருக்மிணி கண்ணீர்வார வரைந்த நிருபமென்றும், அவளது அழகிய மைத்தடங் கண்ணினின்றும் சிந்திய நீர்த்துளிகள் அதன் இடையே தோய்ந்து படிந்தமையால் அத்தகைய அடையாளம் உண்டாயின வென்றும், கிருஷ்ணன் குறிப்பாக அறிந்து அதிசயித்துப் பின்பு நிருபம் முற்றும் கண்டு களித்தார்.

களிப்பு முதிர்ந்த கமலக்கண்ணன் அவ்வேதியரை நோக்கி, "மறைவல்லீர்! விதர்ப்பனது மகள் உரைத்த மொழி ஏதேனும் உண்டோ?" என்று வினவினர். வினவலும், அந்தணர், "தெய்வநாயக! அப் பெருமன்னன், ருக்மிணியின் விருப்பம் அறிந்து, அவளை நுமக்கே அளிக்க எண்ணங் கொண்டான். அவனது மைந்தன் ருக்மி என்பான், தந்தையைத் தகைந்து, அவளைச் சிசுபாலனுக்குத் தந்து

மணமுடிக்க மூர்க்கங் கொண்டுள்ளான்; மைந்தன் மொழியைக் கடக்க இயலாது, மன்னனும் அதற்கு இசைந்தான். • மணம் நிகழும் நாளோ நெருங்கிற்று. ருக்மிணிக்குக் கவற்சியே மேலிட்டது. இந்நிருபம் தந்து என்னை நும்மிடம் தூது விடுத்தனள். மணநாளின் முன்னாள், முறைப்படி அவள் ஈசுவரியைப் பூஜை செய்ய ஆலயம் செல்வள்; சென்று வெளி வருகையில் தேவரீர் அங்கு வந்து அவளைக் காக்காவிடின், அவள் நும்மையே நினைந்து, அழலிடை புகுந்து அவிந்து, மீண்டும் பிறந்து, நும்மையே சேர்வதாகக் கூறினள்," என்றனர்.

எனலும், கிருஷ்ணன் கருணை மிகுந்து, "மன்னர் எல்லோரும் கண்டு வியக்க நான், விதர்ப்பனது மகளைக் கவர்ந்து வருகின்றேன், காணுதிர்," என்று மறையவர்க்கு இயம்பி, அக்கணமே காவலரை விளித்துத் தமது தேரினைக் கொணரப் பணித்தனர். அன்னோர் விரைந்து சென்று, நற்பரி பூட்டிய மணிநெடுந் தேரினைக் கொண்டு நிறுத்தக் கிருஷ்ணன் அவ் விதர்ப்ப வேதியருடன் அதன்மீது அமர்ந்து ஏகலுற்றார்.

கிருஷ்ணன் கொண்ட உள்ளக் கருத்தும், அவர் ஏகும் காரணமும் அறிந்த பலராமர், அம் மன்றலை முட்டின்றி முடிக்க உன்னித் தாம் அலாயுதம் ஏந்திப் பெருஞ் சேனையோடு எழுந்து பின் சென்றார்.

---

## 4. ருக்மிணி மகிழ்தல்.

குண்டினபுரத்திலிருந்த விதர்ப்ப வேந்தனே, மைந்தன் கட்டுரையைக கடக்க வாற்றுனாய், மகளைச் சிசுபாலனுக்குத்

தாரத் துணிந்து, ஊரெங்கும் மணி முரசு அறைவித்து, நகரை அலங்காரம் செய்வித்தான்; உயர் மாளிகை யாவும் மகர தோரணங்கள் கட்டப் பெற்றன; கதலியும் கமுகும் வீதிகள் தோறும் நாட்டப்பட்டன. வீதிகள் எங்கும் பனி நீர் தெளிக்கப்பெற்று, விசித்திர கோலம் புனைந்தன. பொது விடமெங்கும் புதுமணல் பரப்பலாயின. முத்துப் பந்தரும், மணி விளக்கும், பூரண கும்பமும் எல்லாவிடங்களிலும் விளங்கின. கண் கவர் அழகினாலும், அங்குத் திருமகள் வளர்தலாலும், அந்நகரம் ஓர் அழகிய தாமரை மலர்போல் தோன்றிற்று.

இங்ஙனம் அரிய கோலம் கொண்ட அந்நகரில் பலர் காண ருக்மிணியை மணங்கொள்ள எண்ணிச் சிசுபாலன், கிரீடம், கங்கணம், ஆரம், குண்டலம் முதலிய அணிகலன்கள் புனைந்து, வெண்பட்டுடுத்து, வீரர் பலர் சூழ நாற்படையும் உடன்கொண்டு, அங்கு வந்து சேர்ந்து காத்திருந்தான். கொண்டல்வண்ணனால் ஏதேனும் இடையூறு நேருமென அஞ்சி, சராசந்தனாதி அரசர்கள் சிசுபாலனுக்குத் துணையாக எழுந்து அந்நகரில் வந்து கூடினர்.

அழகிய கமலம்போல் விளங்கும் குண்டினபுரியில் திருமகளெனத் திகழும் ருக்மிணி, கவற்சி மிகுந்து, "என்னே எனது நிலைமை! துவாரகைக்கு விடுத்த தூதுவர் இன்னம் வந்திலரே! யான் உய்யும் நன்மொழி ஏதேனும் கொணர்வரோ? குறித்த மணநாளோ கிட்டிற்று; என் செய்வேன்! விதியின் வலியை அறிவார் யார்?" என்று பலவாறு சிந்தித்து வழிமேல் விழிவைத்துக் கமலக்கண்ணன்மீது கருத்து வைத்து, முதுவேதியர் வரவை நாடி உள்ளம் உருகி உருகி நைவாளாயினள்.

அவள் இங்ஙனம் இருக்க, உலகெலாம் அளிக்கும் அமல நாதனாகிய செங்கமலக்கண்ணன், மறையவரை முன்னம் விடுத்தனர். அவர் விரைந்து ஓடோடியும் வந்து, முகமலர்ந்து, ருக்மிணியின் எதிரே தோன்றினர். அவ் வந்தணரின் முறுவல் வாண் முகம் முழுமதிபோல் திகழ, ருக்மிணி அவரது வாய் மொழியை நாடி, கண்ணீர் வார நிலைத்திருந்தனள்.

வேதியர் அவளது செவி குளிர, உள்ளம் களிக்க, "வந்தனர் வந்தனர் கண்ணபிரான்," என்றார். ஆ! அப்பொழுது அவட்கு உற்ற மகிழ்ச்சியை என்னென்று இயம்பலாம்! வெயிலால் வாட்டமுற்ற மெல்லிய தளிர்ப் பசுங்கொடி, மழைத்துளி விழப்பெற்று அதனால் செழித்து அழகுடன் விளங்குவதுபோல், ருக்மிணி, கிருஷ்ணன் வருகை கேட்டு உள்ளம் பொங்கி உடல் பூரித்துப் பொன்மேனி பெறலாயினள்.

துவாரகாதிபதியாகிய ஸ்ரீவாசுதேவன், சக்ரபாணி, பத்மநாபன், கார்வண்ணன், கமலக்கண்ணன் கருணைகூர்ந்து, பரிவாரம் புடைசூழ அணிநகர் அணைதலும், விதர்ப்ப மன்னன் முறைப்படி அவரை எதிர்கொண்டு அழைக்கலாயினன். அரவணைமீது பள்ளிகொள்ளும் பரந்தாமனாகிய அப்பெருமான் குண்டினபுரம் புகலும், அந்நகர மாந்தர் அவரைத் தொழுது போற்றி மகிழ்ந்து பலவகையில் அதிசயிக்கலாயினர். 'கண்ணனைக் காணக் கண்ணாயிரம் வேண்டும்,' என்று அகம் கனிந்து உருகி நிற்பார் சிலர்; 'வலம்புரித் தடக்கையான் வாழி,' என்பார் சிலர்; 'ஆழியந்தேரில் தோன்றும் இவ்வரசிளங் குமரன் ஆழியானே,' என்பார் மற்றும் சிலர். 'வனப்பு மிகுந்த ருக்மிணியை இக்காளை கவரும்,' என மாதர் பலர்

நவில்வர்; 'விதர்ப்பன் மகள் இவனுக்கே உரியவள்; அவ் வணங்குக்கு இவனே உரியன்' எனப் பகர்வார் பின்னும் சிலர்.

இவ்வாறு நெஞ்சம் உருகப் பலர் அதிசயித்து நிற்க, ஸ்ரீகிருஷ்ணன், ஆங்கு ஒரு மணிக்கோயிலில் இழிந்து உறை விடங்கொண்டு இனிது இருந்தனர். இங்ஙனம் இருக்கையில் திருமணம் தொடங்கும் நன்னாளும் நண்ணிற்று. நாரணனது நற்செய்கைகளைக் காண விரும்பினன்போல், தினகரனும் கீழ்த்திசையில் எழுந்தனன். நகரெங்கும் மங்கலவொலி எழுந்தன.

## 5. கிருஷ்ணன் ருக்மிணியைக் கவர்தல்.

மங்கல நாள் வரலும், பொற்பிற் சிறந்த பாவையொத்த உத்தமப் பெண்கள் பலர், விதர்ப்பன் மகளைப் புனித நீரால் நானமாட்டித் தூய பட்டு உடுத்தி, நறுமலர் சூட்டி அலங் கரிப்பாராயினர். முளரி அன்ன மூழுநகை முகம் வாய்ந்த ருக்மிணியின் காதில் மணிக்குழை புனைந்தாள் ஒருத்தி; கொழுங் கயற்கண்ணிற்கு அஞ்சனம் எழுதி, பிறைநுதல் நெற்றிக்குத் திலகம் தீட்டினள் வேறொருத்தி; ஒண்மணி யாரம், பசும்பொன் மேகலை, ஒலிச் சிலம்பு முதலிய உயர் அணிகலன்களைத் தரிப்பித்தாள் மற்றொருத்தி.

ருக்மிணி, இத்தகைய அலங்காரம் கொண்டு, கமலக் கண்ணனுக்கே உரியள் என உரைப்பரும் பொற்போடும் பொலிவோடும் விளங்கினள். கமலச் செல்வியே போன்ற அவள், ஈசுவரியைப் பூசிக்க ஆர்வம் மிகுந்து, பாங்கியர் பல் லோர் புடைசூழ ஆன்றோர் ஆசி கூறப் பல்லியம் பல ஒலிப்

பப் புறப்பட்டுக் கோயில் சார்ந்து, தேவியைத் தொழுது எதிரில் நின்று துதித்தனள்.

"கன்னிநன் னகரினெய்திக் கள்ளயா வுயிர்க்குமந்தண்
கன்னியந் துளவுஞூடுங் கண்ணனே கணவனுகக்
கன்னிநீ யருள்செய்கென்னுக் கண்ணுதல் வேட்குங்கார்குழற்
கன்னியை யுலகமீன்ற கன்னியாங் கேத்தினளால்"

(பாகவதம்.)

இங்ஙனம் துதித்துப் பின்பு ருக்மிணி, கண்ணனையே உள்ளத்திற்கொண்டு, சில்லரிச் சிலம்பு பாட, கிங்கிணி சிலம்ப, காஞ்சி ஒல்லென வொலிக்க நடந்து, வல்லியை வலங்கொண்டு வணங்கி வெளிவந்து, திண் தேர் ஏற எண்ணி நின்றாள். அச் செல்வி ஆர்வம் மிகுந்து தன் ஆருயிர் காக்கும் காளமேகச் செம்மலை அங்குக் காணக் கருத்து மிகுந்து, கண்மலர் பரப்பி நாற்புறமும் நோக்கினள். ஆ! அப்பொழுது ஸ்ரீகிருஷ்ணன் நெடுந்தேர் தூண்டி அரசர் பலர் காண ஆங்குத் திடீரென்று தோன்றினர். தோன்றிய கார்முகிலைக் காணலும், ருக்மிணி கண்ணிணை குளிர்ந்து, உள்ளம் களித்து, உடல் புளகித்து, உவகை மிகுந்து, கண்ணீர் வார மெய்ம்மறந்து நிலைத்து நின்றனள்.

ஆ! அத் தருணத்தில் கமலக்கண்ணன் விரைந்து தேரினின்று இழிந்து, அத்திருமகளைக் கவர்ந்து தேரிற்கொண்டு, தமது வலம்புரிச் சங்கினை முழக்கி அனைவரையும் வியப்பித்து, மின்னலும் இடியும் வாய்ந்த நீலமேகம்போல் துலங்கி ஏகுவாராயினர். காலமும், செயலும், கருத்தும் அறிந்து உலகனைத்தையும் காக்கும் அப்பெருமானுக்கு இதுவும் ஒரு வகை மகிழ்ச்சிபோலும்! என்னே அம்மாயோன் ஆற்றல்!

அப்பொழுது சராசந்தனாதி வேந்தர் பலர், சினந்து படையுடன் எழுந்து விரைந்து சென்று, ஸ்ரீகிருஷ்ணனைச் சூழ்ந்து தகைந்து எதிர்ப்பாராயினர். மாயோன் முறுவலித்து அவர்களோடு போர்தொடங்கிப் படைக்கடல் கலக்கத் தலைப் படலும், பலராமர் இவ் வர்த்தமானம் அறிந்து ஆண் சிங்கம போல் சென்று சராசந்தனைத் தாக்கினர். ஸ்ரீகிருஷ்ணன், ருக்மிணீ சமேதராய்த தேரினை ஊர்ந்து ஏகினர்.

வலிமிக்க சராசந்தனும், அவனது துணைவர்களான பிற வேந்தரும், பலராமரோடு போர்புரிய இயலாதவர்களாகித தோல்வி யடைந்து, நாற்றிசையும ஓடிச்சென்று உயிர்தப்பி னர். சிசுபாலன் மனவாட்டத்துடன ஊக்கம் குன்றி உருக் குலைந்து ஓரிடத்திலிருந்தனன்.

சராசந்தனாதியோர் அலைந்து திரிந்து, எளிய சிசுபால னைத் தேடிக் கண்டு இரங்கி, "அன்ப! என் செய்வது! இன் பமும் துன்பமும் கலந்திருத்தல் இவ்வுலகத்தின் இயற்கை; நீ வருந்தற்க; ருக்மிணியைவிட ஆயிரமடங்கு அழகு வாய்ந்த ஆயிரம் பெண்கள் உன்னை மணக்கக் காத்திருக்கின் றனர். புகழ் மிகுந்த உன் வாழ்வுக்குக் குறையுண்டோ?" என்று தேற்றினர்.

இன்னோர் கதி இவ்வாறாக, விதர்ப்பனது மைந்தனோ விளையாத சீற்றம் விளைவுற்றுப் பொங்கி எழுந்து, "என் தங்கையை வலியக் கவர்ந்து ஏகிய இவ்விடையனை யான் விடுவதில்லை; இவன் சிறு பிராயந்தொடங்கியே திருடன்; அடி நாளில் வெண்ணெய் திருடி, ஆயர்பாடியில் அடியுண் டான்; வெண்ணெய் திருடிய இக்கள்ளன், இப்பொழுது பெண்ணைத் திருடவும் தலைப்பட்டான். நான் இவனோடு

பொருது வென்று நங்கையை மீட்டு வருகின்றேன் ; தவறுவ னேல், இம்முடி மன்னர் முன்னில் ஈண்டு இந் நகர்க்கு வருவ தில்லை,'' என்று சபதமொழி கூறி வெகுண்டு, திரண்ட சேனை கள் உடன்வரத் தேரில் ஏறிச்சென்று, வில் வளைத்து வாளி தொடுத்துக் கிருஷ்ணனோடு போர் தொடங்கினான். தொடங்கலும், அவனைத் தகுதியானபடி தண்டிக்கவேண்டு மென்று கண்ணபிரான் தமது மணிநெடுந் தேரினைச் சிறிது போது நிறுத்தித் தாமும் சிலை குனித்துப் பரந்த மழைபோலப் பகழி சிந்திக் கடும்போர் கொள்ளத்தலைப்பட் டனர்.

இத்தகைய நிலைமையில் ருக்மிணி, மணிவண்ணனை நோக்கி, "அண்ணலே! என் அண்ணனைக் கொல்லற்க," என்று வேண்டினள். அதன்பின் கிருஷ்ணன், அவ்விளைஞனை இறுகப் பிடித்துக் கொணர்ந்து, தேர்க்காலில் சேர்த்துக் கட் டிக் குடுமி கொய்து, மானங் கெடத் தண்டித்தார்.

இதற்குள் பலராமர், மன்னர் அனைவரையும் வென்று கிருஷ்ணனிருக்குமிடம் வந்து சேர்ந்தார். கிருஷ்ணனுடைய தேரில் விதர்ப்ப குமரன் கட்டுண்டு கிடப்பதையும், அவன் அவமானமடைந்து வருந்துவதையும் பலராமர் கண்டனர். அவர் அவ் வறியான்மீது இரக்கங்கொண்டு, கட்டு அழித்து, அவனை விட்டு ஓட்டினர். செருக்கு மிகுந்த அக்குமரன், சிகை இழந்து, மானம் குலைந்து, எவர் கண்ணிலும் தோன் றாது ஓடி மறைந்தான். அங்ஙனம் சென்றவன், தனது நகர்க்குள் புகாமல் போஜகடம் எனும் பட்டணத்திலிருந்து அரசாண்டான்.

" உருப்பிணி நங்கையைத் தேரேற்றிக் கொண்டு
விருப்புற் றங்கே விரைந்தெதிர் வந்த
செருக்குற்றான் வீரஞ் சிதையத் தலையைச் [பாடிப்பற
சிரைத்திட்டான் வன்மையைப் பாடிப்பற தேவகி சிங்கத்தைப்

(பெரியாழ்வார் திருமொழி.)

ஸ்ரீகிருஷ்ணன், ருக்மிணீ சமேதராய் துவாரகை போய்ச் சேர்ந்து, அனைவரையும் மகிழ்வித்து, மன்னர் பலர் போற்ற வானவர் வாழ்த்தப் பல்லியங்கள் ஆர்ப்ப, அச் செல்வியை நன் முகூர்த்தத்தில் மணந்து இனிது இருந்தனர்.

" இங்கதை யிசைக்குந ரிசைப்பது விருப்பால்
புக்கினிது கேட்குநர்கள் பொன்னிதழ் விரிக்கும்
செக்கர் கமலத்தவ டிருந்தருள் வழங்க
மக்களொடு மிப்புவி மகிழ்ந்துறைவர் மாதோ."

(பாகவதம்.)

# சத்தியபாமா பரிணயம்

# சத்தியபாமா பரிணயம்.

## 1. சாம்பன் ஒளிமணி கவர்ந்தது.

முத்திதரும் நகர் ஏழனுள் ஒன்றெனப் பல்லோர் போற்றும் துவாரகாபுரிக்கு அருகில் சத்திராசித்து எனும் அரசன் ஒருவன் இருந்தான். அம் மன்னன் சூரிய பகவானைக் குறித்து நெடுநாள் தவம் செய்து, அத்தேவன் அருளால் சமந்தகம் எனும் ஓர் அரிய இரத்தினம் பெற்றான். அம் மணி மிக்க ஒளி வாய்ந்து இள ஞாயிறுபோல் விளங்கும். அன்றியும் அது நாடோறும் நூற்றறுபது துலாம் பொன் ஈனும். கொடிய நோயைப் போக்கும் அருங்குணமும் அதற்கு உண்டு.

சத்திராசித்து வேந்தன் ஒருநாள் அவ் வுத்தம மணியைத் தன் கழுத்தினிற் புனைந்து துவாரகைக்குச் சென்றான். அவன் வருதலைக் கண்டு அந் நகர மாந்தர் அனைவரும் அதிசயித்தனர். ஸ்ரீவாசுதேவன் சத்திராசித்து வள்ளலை நோக்கி, "மன்ன! யான் உன்னிடம் ஒன்று வேண்டுகிறேன். எரி கதிர் சொரியும் இத் தவமணியை நீ எனக்குத் தருக," என்று தன் பவளவாய் திறந்து கேட்டனர்.

கேட்டதும் அம் மன்னன் களித்து, "அண்ணலே! யான் திவாகரனைப் பன்னாள் தொழுது அருந் தவம் புரிந்து இம் மணியைப் பெற்றேன்; இஃது தினந்தோறும் மிக்க பசும் பொன் உதவுகின்றது; இதனை யான் உதவேன்," என்று

மறுத்துவிட்டான். கிருஷ்ணன் அவன்மீது யாதொரு வெறுப்புங் கொள்ளாது, க்ஷேமம் கேட்டு அன்புடன் அளவளாவி அவனை மகிழ்வித்தனர்.

சின்னாள் சென்றதும், சத்திராசித்து வேந்தனது தம்பி பிரசேனன் என்பான் அம் மணியை அணிந்து மலைச்சாரல் நண்ணி வேட்டையாடுவானாயினன். அவன் அங்கு வேட்டையாடுகையில், கொடிய சிங்கமொன்று அவன்மீது பாய்ந்து, தன் வள்ளுகிரால் அவனைக் கிழித்துக் கொன்று, அவன் அணிந்திருந்த சமந்தக மணியைக் கவர்ந்து சென்றது. அங்ஙனம் சென்ற அரிமா, தன் குகையை யடைந்து, அவ்வொளி மணியை எதிரில் வைத்து அழகு பார்த்து, வியந்து மகிழ்ந்து பின்பு துஞ்சியிருந்தது.

இங்ஙனம் இருக்கையில் சாம்பவன் எனும் கரடி இராஜன் அம் மலைச்சாரலுக்கு வந்து சேர்ந்தனன். அவன் அவ்விசித்திர இடத்தைக் கண்டு மகிழ்ந்து, அங்குத் தனக்குக் கிடைக்கக்கூடிய அரிய உணவைத் தேடியுண்டு திரிகையில், அத்தாழ்வரையின்கண் உள்ள ஒரு குகை வாயிலில் மிக்க ஒளி வீசுதலைக் கண்ணுற்று அதனருகே வந்து சேர்ந்தான். பின்பு அவ் வேந்தன் அக் குகைக்குள் புகுந்து நோக்கலும், ஆங்கு உயர் சிய மொன்று உறங்கிக் கிடப்பதையும், அதன் எதிரில் ஒளிமணி ஒன்று திகழ்வதையும் கண்டான். காண்டலும் அவன் அம் முழுமணியை வலிய எடுத்துச் செல்லத் துணிந்து, துஞ்சும் அரிமாவைத் தன் மணிக்கையால் தாக்கிக் கொன்று வீழ்த்தி, அத் தவமணியைக் கையிற் கொண்டு, பாதலம புகுந்து தான் வதியும் பிலத்தை நண்ணினன். உறைவிடம நண்ணியதும் சாம்பன், அச் சுடரொளி மணியைத் தன் மனைவிக்கும் பிறர்க்கும் காட்டி, அனைவரையும் வியப்பித்துப்

பின்பு அதனைத் தன் குழவி விளையாடும் தொட்டிலின்மேற் கட்டித் தூக்கினன். அது அங்குப் பகலவன்போல் பல் கதிர் பரப்பி அவ் விளமகவை மகிழ்விக்கும் ஓர் அரிய பொருளாகி விளங்கிற்று.

---

## 2. கிருஷ்ணனும் சாம்பனும்.

வேட்டைக்குச் சென்ற பிரசேனன் மீண்டு வாராமை யால், சத்திராசித்து நாற்புறமும் அலைந்து திரிந்து தம்பியைத் தேடினான். எம்பியை எங்கும் காணாமையால், மூத்தோன் மனம் வெம்பி, "இக்கொடுமை என்னே! யான் பூண்ட சுடர் மணியை முன்பு அம் மணிவண்ணன் கேட்டானன்றோ? யான் அது தர மறுத்தேன்; வேழ மருப் பொசித்த அக்கார் வண்ணன் என் இளைஞனைக் கொன்று மணியைக் கவர்ந் திருக்கவேண்டும். அக் கள்வனன்றி வேறு யாரும் இது செய்யார்," என்று பலவாறு பேசி, ஸ்ரீ வாசுதேவன் மீது வீண் செறிபழி சுமத்தி, ஊரெங்கும் தூற்றத் தலைப் பட்டான்.

சத்திராசித்து எடுத்தெடுத்துரைக்கும் அம்மொழி கேட்டலும், துவாரகையிலுள்ளோர் அக் கொண்டல் வண் ணன்மீது சந்தேகங் கொண்டனர். "வெண்ணெய் திருடிப் பழ கியவன் இது செய்துமிருப்பான்!" என்றார் சிலர். "சகட முதைத்து, மருதிடை தவழ்ந்து, அரவின்மேல் ஆடி, குன்ற மேந்தி மாமாயம் புரிந்த முகில் வண்ணன் எதுதான் செய் யான்!" என்றார் மற்றும் சிலர். "விதர்ப்ப நாடு சென்று நண் பகலிற் பெண்மணியைக் கவர்ந்த கமலக்கண்ணன், சுடர் மணி திருடானோ?" என்றார் பின்னும் சிலர். பழியோரிடம்

பாவ மோரிடம் எனும் முதுமொழிக்கு இணங்கக் கிருஷ்ணன்மீது வீண் அபவாதம் ஏற்பட்டது.

யாவும் அறிந்த மாயோன், உற்ற செய்தி முற்றும் உணர்ந்து, பழியைப் போக்கிக் கொள்ள உன்னி, நெடும் படையுடன் புறப்பட்டு அத் தடங்கிரிச் சூழலை யடைந்தார்; பிரசேனன் அங்கு மாண்டு கிடந்ததையும், அவனை மாய்த்த சீயம் சென்ற வழிநடையையும், அது பிலத்தில் துஞ்சிக் கிடந்ததும், அங்குக் கரடி யொன்று நண்ணியதையும் குறிப்பாக அறிந்தார். பிறகு அவர், கரடி சென்ற காற் சுவட்டினைப் பின்பற்றி நடத்தலும் அவ்வழி ஓர் இருட் பிலவாயிலில் கொண்டு விடுத்தது.

கிருஷ்ணன் அப் பிலவாயிலில் தன் சேனையை இருத்தித் தான் தனியே அக் குகைக்குள் புகுந்து நெடுந்தூரம் சென்று நோக்கலும், அங்குக் குழவியின் விளையாட்டாக அவ் வெழில் மணி திகழ்வதைக் கண்ணுற்று வியந்து, அதனை வலிதில் கைபிற் கொண்டார். அப்பொழுது அருகிருந்த அக்குழவியின் தாய் திடுக்கிட்டு அழுது அலறினள்; உற்ற துன்பம் தீர்க்கத் துணை வருமாறு ஆண்டிருந்தோரைக் கூவிக் கூவி அழைத்துப் புலம்பினள். அவ் வழுகுரலைக் கேட்டுச் சாம்பன் சீற்றம் மிகுந்து விரைந்து ஓடிவந்து கிருஷ்ணனுடன் மற்போர் புரியத் தலைப்பட்டான். அவ்விருவரும் ஒன்பது நாள் இடைவிடாது கடும்போர் புரிந்தனர். இறுதியில் சாம்பன் கிருஷ்ணனது வன்மையையும் பெருமையையும் அறிந்தான். முன்பு தசரதனுக்கு மைந்தனாய் இராமாவதாரம் செய்த அப் பெருமானுக்குப் படைத்துணை புரிந்த சாம்பன் இவனே. அந்நாள் தொடங்கி நெடுங் காலம் வாழ்ந்து வரும் சாம்பன், வலி குன்றி ஓய்ந்து எதிரில் கைகூப்பி




ஸ்ரீகிருஷ்ணனும் சாம்பனும்.

நின்று, "அண்ணலே! மாரி காத்த மணிவண்ணா! கொற்ற வில்லால் முன்பு இலங்கை செற்ற வீரன் அல்லவோ நீ! உன் பெருமையை யார் அறிவார்? அறியாமையால் யான் உன்னுடன் மலைந்தேன். என் பிழை பொறுத்தருள்," என்று நயந்து வேண்டினன்.

கிருஷ்ணன், சாம்பனுக்கு நன்மொழி கூறிப் பிறகு சமந்தக மணியின் விருத்தாந்தம் யாவும் எடுத்துரைத்து, அது பெற விரும்பினர். முகில்வண்ணன் மணி இதழ் விண்டு கேட்டதும், செங்கதிரன்ன அம் மணியைச் சாம்பன் உவகையோடு அளித்தான். கிருஷ்ணன் மகிழ்ந்து கண்கவர் மணியுடன் மீண்டு வரலாயினர்.

பாயிருள் பிலத்தின் கடைவாயிலில் படைவீரர்கள் பன்னிருநாள் காத்திருந்தும் கிருஷ்ணன் மீண்டு வாராமையால், அன்னோர் தம் நகர் திரும்பிச் சென்றனர். துவாரகையில் கிருஷ்ணன் இல்லாமையால், பலராமன், ருக்மிணி முதலானோரும் பிறரும் ஏங்கிக் கிடந்தனர். இங்ஙனம் இருக்கச் சின்னாள் கடந்ததும் கிருஷ்ணன் புன்முறுவல் பூத்து மாநகரம் மகிழ வந்து சேர்ந்தனர்.

---

## 3. கிருஷ்ணன் சத்தியபாமையை மணத்தல்

இந்திரநீல வெற்புபோல் மாமாயன், விரிசுடர் மணியுடன் நண்ணியதைக் கண்ட துவரை மாந்தரும் பிறரும் அவரைச் சூழ்ந்து களித்தனர். கடல் கடைந்து வானவர்க்கு அமுத மளித்த அமலன், சத்திராசித்து வேந்தை அவைக்களத்து அழைப்பித்து உபசரித்து, "அன்ப! உனது தம்பி

யாண்டது விதியின் செயலாகும். வேட்டைக்குச் சென்ற அவனை அரிமா ஒன்று அறைந்து கொன்றது. அன்றியும் அவ் விலங்கு, அவனிடமிருந்த மணியைக் கவர்ந்து, தன் குகையை அடைந்து துஞ்சிக் கிடந்தது. அந் நிலைமையில் ஆங்குச் சாம்பன் எனும் எண்கின் வேந்து சென்று, கோளரியைக் கொன்று வீழ்த்தி, அம் மணியையும் கைக்கொண்டு பாதலம் புகுந்து, உறைவிடம் சேர்ந்து, தன் மகவின் தொட்டிலின்மீது உனது மணியைத் தொங்க விட்டிருந்தது. உண்மை அறியாமையால் நீ வீணே என்னைப் பழித்தனை. பழியைத் தாங்க இயலாது, யான் வலியச் சென்று அலைந்து திரிந்து மணியைக் கண்டேன். சாம்பனோடு மல்லுக்கு நின்றேன்; அவனை வென்றேன்; மணியையும் கொணர்ந்தேன். இப் பெருநிதியைப் பெற்று இனி நீ மகிழ்ந்து வாழ்க," என்று நேர்ந்தவை முழுதும் கூறி, நன் மணியையும் நல்கினார்.

விளைதிறம் யாவும் கேட்ட சத்திராசித்து மன்னன் வெட்கி, "அண்ணலே! என் பிழை பொறுத்தருள்க. மதி மயங்கி வீணே நும்மைத் தூற்றினேன். பிழைத்த அப் பிழையை யான் தீர்க்க வேண்டுமன்றோ? திருமகள் நிகர்த்த எனது மகள் சத்தியபாமையை நீர் மணம் புரிவீராக; இத் தவமணியும் நுமக்கே உரியது," என்று மனமார மகிழ்ந்துரைத்துத் தான் தரும் தவமணி, பெண்மணி ஆகிய இரண்டு இரத்தினங்களையும் அன்புடன் அளித்து ஏற்றுக் கொள்ள வேண்டினன்.

கிருஷ்ணனை அடைய வேண்டுமென்று நெடுங் காலமாக நீள்விரதங் கொண்டிருந்த சத்தியபாமை, அம்மொழி கேட்டு அகம் பூரித்து, உடல் புளகம் போர்க்க உவகை மிகுந்து, கண்ணீர் சொரிய அப் பெருமான் எதிரில் வந்து நின்றனள். மாரி

காத்த நிமலன் அவ் வணங்கை அருளுடன் நோக்கி மணம் புரிய இசைந்தனர்.

சத்திராசித்து வேந்தன் பல்வகை இசைக் கலன்களுடன் கிருஷ்ணனைத் தன் மாளிகைக்கு அழைத்துச் சென்று நன் முகூர்த்தத்தில் திருமணம் செய்வித்துக் களித்தான். ஸ்ரீ வாசுதேவன் சத்தியபாமையை மணந்து, சமந்தக மணியை மீண்டும் அவ் வேந்தனுக்கே தந்தருளினர். பாற்கடலிற் பள்ளி கொள்ளும் பரந்தாமன் திருமகளோடும் நிலமகளோடும் தோன்றியதுபோல், கிருஷ்ணன் துவாரகையில் ருக்மிணீ சத்தியபாமையுடன் நலம் மிகுந்து, நெடுநாள் வதிந்து, மண்ணவரையும் விண்ணவரையும் மகிழ்வித்தனர்.

# பாஞ்சாலி பரிணயம்



அருச்சுனன் இலக்கு எய்தல்.

# பாஞ்சாலி பரிணயம்

## 1. துரோணாசாரியரும் துருபதனும்.

வேத சாஸ்திரங்கள் வல்ல பாரத்துவாஜ முனிவரது குமாரரான துரோணாசாரியரும், பாஞ்சால தேசத்து அரசனது குமாரனான துருபதனும், ஆதிநாளையில் கல்வி கற்கையில் இனிய நண்பினர் ஆயினர். இவர்கள் இருவரும் அக்னிகோத்திர முனிவரது மலர்ப் பாதம் பணிந்து அவரிடம் படைத்தொழில் கற்று வந்தனர். அந்நாளில் துருபதன், துரோணரிடம் மிக்க அன்பும் நட்புங் கொண்டு, இரவும் பகலும் அவரை விட்டுப் பிரியாமல் உடன் கூடியிருந்து, தன்னுயிரைப்போல் அவரைப் பாவித்து வந்தான்.

இவ் விருவரும் படைகள் கற்று ஆசிரியரிடம் விடைபெற்றுப் பிரியும் நாளில் துருபதன், துரோணரை நோக்கி, "சுவாமி! என் தந்தை விண்ணுலகமெய்தி யானே அரசாளும் நாளில் நீர் என்னிடம் வருவீரேல், நான் உமக்கு எனது இராச்சியத்தில் பாதி தந்து உம்மை அரசாளச் செய்வேன்," என்று உருக்கமாகக் கூறினன்.

அம்மொழி கேட்டுத் துரோணர், "அன்ப! அந்தணர்க்கு அரசு ஏன்? யான் வேண்டுவது ஏதேனும் உண்டாயின் அதனை உன்னிடமே பெறுவேன். நட்பிற்கு நீ இனியன்," என்று உரைத்தனர். பிறகு இருவரும் தங்கள் தங்கள் கருமம நோக்கிச் செல்பவராய்ப் பிரிந்தனர்.

துரோணாசாரியர், வனம் சென்று இயன்ற தவத்தி லிருக்கு நாளில், அவர் கிருபாசாரியரது தங்கையாகிய கிருபி என்பவளை மணந்தார். கற்பிற் சிறந்த கிருபியிடம் தெய்விக மான ஆண்குழந்தை யொன்று பிறந்தது. அது அசுவத்தாமன் எனும் பெயர் பெற்று வளர்ந்து வந்தது. வறுமையின் கொடு மையால் அக் குழவி, தக்க ஊட்டமின்றி நாளுக்கு நாள் இளைத்துவர, கிருபி மனம் தளர்ந்து தன் கொழுநனை அண்மி, "நாத! நம் மகன் மாவின் பாலேயன்றி ஆவின்பால் கண்டறி யான்; அவனுடைய நன்மையைக் கருதி நீர், கறவை யொன்று தேடிக் கொணர்வீரோ?" என்று வேண்டினள்.

துரோணர் அவள் வேண்டுகோட்கு இசைந்து, தமது நண்பன் துருபதன் அரசாளும் செய்தி அறிந்து, அவன் கூறி யுள்ள உறுதி மொழியை நினைவிற்கொண்டு, அவன்பால் ஏகி, நயமொழி நவின்று, கறவையொன்று உதவ வேண்டினர். துரு பதன் அவரை அவமதித்து, "நீர் யார்? உம்மை யான் அறி யேன்?" என்று செருக்கு மிகுந்து இருந்தனன். அம்மொழி கேட்டுத் துரோணர் வருந்தி, "அன்ப! நான் உன் நண்பன். ஆதிநாளில் நாம் இருவரும் அக்கினிகோத்திர முனிவரிடத் தில் மாணாக்கரா யிருந்தபோது நீ கூறிய சொல்லை மறந் தனையோ?" என்றனர்.

அரசன் அவரைப் பரிகசித்து நகைத்து, "ஆ! நன்று! யானோ மன்னன்; நீரோ முனிவர்; உமக்கும் எனக் கும் என்ன நட்பு?" என்று இகழ்ச்சி பேசினன். அவன் இங்ஙனம் பேசவே துரோணர், "நீ முன்பு எனக்குப் புகன்ற படி, நீ ஆளும் புவியில் பாதியை யான் கொள்வேன்; அன்றி யும் உன்னைச் சமரில் வென்று, பலர் அறிய உன்னைத் தேர்க் காலில் கட்டிக்கொணரக் காண்பேன். சொன்ன வாய்மை

நீயே சோர்ந்தாய்; யானோ சோரேன்,'' என்று அரசர் பலர் கேட்கச் சபதம் செய்து மீண்டனர்.

---

## 2. துருபதன் கொண்ட விரதம்.

அக் காலத்தில் அத்திநபுரியில் சந்திர குலத்துத் தோன்றி மிக்க புகழுடன் விளங்கிய பீஷ்மர், தமது பேரப் பிள்ளைகளாகிய துரியோதனாதியர் நூற்றுவர்க்கும், பாண்டவர் ஐவர்க்கும் தக்க ஆசிரியரிடத்தில் படைபயிற்சி செய்விக்கக் கருதியிருந்தனர். அவர், துரோணரது பெருமையும் திறமையும் அறிந்து வியந்து, அவரை வருவித்து வணங்கி, அவரது குறை கேட்டுப் பின் தம் கருத்தையும் வெளியிட்டுப் பிள்ளைகளை அவரிடம் ஒப்புவித்தார். அன்றுமுதலாக அப் பிள்ளைகள் நூற்றைவரும் துரோணரிடம் படை பயின்று வருபவராய்ச் சின்னாளில் கல்வி நிரம்பினர். அன்னோர் அனைவரிலும், அருச்சுனன் மிக்க திறமை வாய்ந்து பலர் அதிசயிக்க விளங்கினன்.

அத்தகைய நிலைமையில் துரோணர், தமது மாணாக்கர்களை அருகு அழைத்து, “ குருகுல மைந்தர்களே ! பாஞ்சால தேயத்து அரசனாகிய துருபதன் எனது பகைவனாகின்றான். நீங்கள் அவனுடன் பொருது வென்று அவனைத் தேடிப் பிடித்துத் தேருடன் பிணித்து வருத்தி இவ்விடம் கொண்டுவாருங்கள். நீங்கள் எனக்குத் தரநின்ற தக்கிணையைப் பின்பு பெறுகிறேன்,'' என்று பணித்தனர்.

குருகுலக் குமாரர்கள், ஆசிரியர் பதம் பணிந்து, அவர் சொல்லைச் சிரமேற் கொண்டு, நாற்படையுடன் புறப்பட்டுப் பாஞ்சால தேயத்தை அடைந்து துருபதனோடு போர்தொடங்கினர். இருதிறத்தவர்க்கும் கடும்போர் நிகழலும், அப்

போரில் துரியோதனனுதியர் நூற்றுவரும் எதிர் நிற்க முடியாமல் அஞ்சித் தங்கள் நகரத்திற்கு ஓடிச்சென்றார்கள். அருச்சுனன் வெகு திறமையோடு எதிர்நின்று துருபதனுடன் போர்புரிந்து, அவனை வாளி வலையினால் பிடித்து, வில்லின் நாணினால் தேர் மிசை பிணித்து, விசையுடன் குருவின்முன் கொணர்ந்து சேர்த்தான்.

ஆசிரியர், துருபதனைநோக்கி முறுவல் கொண்டு, "மன்ன! யான் எனது சபதத்தை முடித்தேன்; யான் குற்ற மற்ற ஓர் அந்தணன்; நீயோ ஓர் அரசன்; அருச்சுனனால் கட்டுண்டது உனக்கு என்ன பெருமையோ! வீரனே! முன்னம் நீ எனக்குத் தந்த பாதி இராச்சியத்தையும் நான் இப்பொழுது உனக்குத் தந்தேன்; அன்றியும் உனக்கு உயிரும் வாழ்வும் மகிழ்ந்து தந்தேன்; இனி உன்னிடம் போய்ச் சேர்," என்று கூறி அவனை விடுவித்தார். துருபதன், துரோணாசாரியரது வீர மொழியையும், விசயனது வெற்றியையும் அறிந்து வெட்கித் தலைகுனிந்து நின்றான்; அன்றியும் பிறர் கண்முன் தான் அகப்பட்டு வருந்தும் செயலையும் நினைந்து நினைந்து உள்ளக் கொதிப்புடன் மறைந்து மறைந்து ஊர் போய்ச் சேர்ந்தான்.

அங்ஙனம் சென்றவன், துரோணாசாரியரது முடியைத் துணிக்கும் திறமை வாய்ந்த ஒரு புதல்வனையும், தனஞ்சயனுக்குத்தர ஒரு பூங்கன்னிகையையும் பெற விரும்பி, உபயாசன், யாசன் எனும் முனிவர்களைக் கொண்டு, புத்திர காமேஷ்டி புரியலாயினன். அதன் முடிவில் வேள்வித் தீயினின்று ஒரு ஆண் மகவும், ஒரு பெண் மகவும் தோன்றின.

அப்பொழுது யாகசாலையி லுள்ளவர்கள் எவரும் கேட்க ஆகாயத்தில், "அரக்கர் குலம் மாளும் பொருட்டு முன்னம் சீதை எனபவள் பூமியினின்றும் பிறந்தாள். அரசர் குலம்

மாள, இவள் இன்று தீயினின்றும் தோன்றினள், " என்று ஓர் அசரீரிவாக்கு எழுந்தது. பாஞ்சாலன், அம்மொழி கேட்டு வியந்து மகிழ்ந்து, வேள்வி முடித்த மாமுனிவர்களை வணங்கிப் பெரும பேறு பெற்றான். கனலினின்று தோன்றிய அக் குமாரன் திட்டத்துய்மன் எனவும், அவ் வழகிய பெண் திரௌபதி எனவும் பெயரிடப்பட்டு வளர்ந்து வருவாராயினர். பாஞ்சால மன்னனுக்குக் குமாரத்தியாயினமையால், அப் பெண்ணைப் பாஞ்சாலி எனவும் சொல்வதுண்டு. இவள் நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து விவாக தசையும் அடைந்தாள்.

அருச்சுனனுடைய புகழையும் அழகையும் பலமுறை பல்லோரிடம் கேட்டிருந்த பாஞ்சாலி, ஊழின் செயலால் அவன் மீது அன்பு பூண்டு அவனையே மணம்புரியத் துணிந்திருந்தனள். திட்டத்துய்மன் பல கலைகளையும் பயின்று, பின்பு துரோணரை அடுத்து, தனக்குத் தநுநூல் கற்பிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தான். யாவும் அறிந்த அவ் வுத்தம ஆசிரியர் அவனிடம் வெறுப்பு இன்றி மகிழ்ந்து யாவும் கற்பித்தார். தம்மை அடுத்தவர் பகைவரேயாயினும் அவர்களுக்கு உண்மையான முறையில் உபதேசித்தல் பெரியோர் மாண்பே யாம்.

---

## 3. பாஞ்சாலியின் சுயம்வரம்.

நூற்றுவர் கொண்ட தாயாதிப் பகையால் பாண்டவர்கள் ஐவரும, பல துன்பங்கள் அனுபவித்துத் தப்பிப் பின் தங்கள் தாய் குந்திதேவியை உடன்கொண்டு, பிராமணவேடம் புனைந்து, இன்னென்று எவரும அறியாதபடி வேத்திரகிய

நகரம் வந்து சேர்ந்தனர். அவ்வூரில் அந்தணன் ஒருவன் இவர்களை அழைத்துப்போய்த் தன் இல்லத்தில் இருக்கச் செய்து, உண்டி முதலியன உதவி ஆதரித்து வந்தான். ஐவரும் அவர்கள் அன்னையும் வேத்திரகீயத்தில் வதிகையில், பாஞ்சால தேசத்திலுள்ள துருபதன், தனது மகளுக்குச் சுயம்வரம் நிச்சயித்து, எங்கும் ஓலையும் தூதும் போக்கி, அந்நன்னாளை எதிர்பார்த்திருந்தான்.

வேத்திரகீயப் பிராமணர்கள் அச்செய்தி கேட்டுப் பாஞ்சாலியின் திருமணம் காண அவா மிகுந்து பிரயாணப் பட்டனர். அதனை அறிந்து ஐவரும் குந்தியும் அவ் வந்தணர்களுடன் புறப்பட்டு, இடைவழியில் பல நற்சகுனங்கள் கண்டு களித்து, விரைவில் வழிநடந்து பாஞ்சால நகரம் நண்ணி, அங்கு ஒரு குலாலன் வீட்டில் இழிந்து இனிது இருந்தனர். அந் நகரில் பலராமன், கிருஷ்ணன், துரியோதனன், கர்ணன், சகுனி முதலான பல அரசர்களும் வந்து, வெவ்வேறு உறைவிடம் கொண்டு சுயம்வரநாளை எண்ணியிருந்தனர்.

நூற்றுவர் புரிந்த வஞ்சகத்தால் பாண்டவர் அரக்கு மாளிகையில் எரிந்து இறந்தனரென்று ஒரு பொய்க் கதை எங்கும் பரவி யிருந்தமையால், பாஞ்சாலன் கவலை மிகுந்து தனது விருதம் பொய்யாகுமோ வென்று அச்சம் மிகுந்து ஏங்கியிருந்தான். ஆயினும் அவன் பாண்டவர்களது வீரமும் தோள் வலியும் நினைந்து, அவர்கள் அழியாது இருப்பரென்று சிறிது தைரியம் வாய்ந்து, இறைவனை துதித்துக் காத்திருந்தனன்.

பலநாளாக அருச்சுனன்மீது பேரன்பு கொண்டிருந்த திரௌபதி, அவனை யன்றிப் பிறரை மணம் செய்வதில்லை யென்றும், அவன் சுயம்வர சபை வந்து உரியபடி தன்னை

மணம் புரியாவிடில் தான் மீண்டும் எரியிற் புகுந்து உயிர் துறப்பதாகவும், மனவுறுதி கொண்டு ஏங்கியிருந்தாள். அவள் மன நிலையை யறிந்து, தாதியரும் தோழியரும் அவளை அன்புடன் நோக்கி, "அம்ம! விதியும் பொய்யாகுமோ? அரக்கு மாளிகையில் ஐவர் இறந்திலர் என்று யாம் கேட்ட சோதிடந்தான் பொய்யாகுமோ?" என்று கூறித் தேற்ற, அவளும் ஒருவாறு தேறியிருப்பாள்.

இங்ஙனம் இருக்கச் சுயம்வர நாள் நண்ணிற்று; ஊரெங்கும் மங்கல ஒலி மிகுந்து எழுந்தது. அந் நாள் தோழியர், திரௌபதியைப் புண்ணிய தீர்த்தத்தில் ஸ்நாநம் செய்வித்து, நற்பட்டு உடுத்தி, நறுமலர் சூட்டி, பூண்புனை இசையப் பூட்டி அலங்காரம் செய்தனர்.

விவாக மண்டபத்தில் வேந்தர் யாவரும் ஆர்வம் மிகுந்து சிறப்புடன் வந்து வீற்றிருந்தனர். குறித்த வேளையில் தாதியர் திரௌபதியைச் சுயம்வர மண்டபம் அழைத்து வந்தனர். அதன் பின் திட்டத்துய்மன் அரசவை நோக்கி, "வீரம் வாய்ந்த வீரர்களே! இவ் வில்லை வளைத்து நிழலை நோக்கிக் குறி பார்த்துக் கணை தொடுத்து உயரத்தில் சுழலும் யந்திரத் திகிரியின்மீதுள்ள இலக்கைத் தவறாது வீழ்த்துவோர் எவரோ, அவரே என் தங்கைக்கு மணாளர் ஆவர்," என்றான்.

துருபதனது குமாரன் இங்ஙனம் கூறலும், வேந்தர் பலர் திடுக்கிட்டு அஞ்சி, அந்த இலக்கை எய்யும் கருத்திலராய்க் கலங்கினர். ஆசை வெட்க மறியாதாதலால் அவர்களிற் சிலர் அக் குறியை எய்ய முயல்வாராயினர். திட்டத்துய்மன், திரௌபதிக்கு முறையே அம் மன்னர்களைச் சுட்டிக் காட்டி, அவரவர்களுடைய குலம், பெயர், வீரம் முதலியவற்றை எடுத்துக் கூறினன். அதன் பின் அவன், தன்

தங்கையை நோக்கி, "அனற் கொழுந்தே! இவ் வரசிளங் குமரரில் எவன் ஒருவன் வில்லில் நாண் ஏற்றி அம்பினால் இலக்கை எய்கின்றானோ அவனே உனக்கு உரியன்," என்று கூறி முடித்தான்.

பூபாரம் தீர்க்கப் பூமியில் தோன்றிய கண்ணபிரான், அப்பொழுது பாண்டவர்களின் நிலையை அறிந்து, அவர்களுக்கு உதவி புரியத் திருவுள்ளம் கொண்டனர். வில்லையெடுத்து நாண் பூட்ட எண்ணி உற்சாகத்துடன் எழுந்த தம் குலத்தவரை அப் பெருமான் குறிப்பாகத் தடுத்து, அந்தணர்கள் இடையில் பாண்டு மைந்தர் உரு மாறி யிருப்பதைப் பலராமருக்கும் தெரிவித்தார். ஸ்ரீ வாசுதேவன் கொண்ட கருத்திற்கு இசைந்து பஞ்சவர்கள் அடங்கியிருக்கையில், அச் சபையிலிருந்த அரசர் பலர் செருக்கு மிகுந்து எழுந்து வில்லின் அருகே சென்றார்கள். அங்ஙனம் சென்றவர்களிற் சிலர், அப் பெருஞ் சிலையின் நிலையைப் பார்த்து அஞ்சித் தலை குனிந்து திரும்பினார்கள். 'ஒருகையிற் பிடிக்க அடங்காத வில்' என்று சிலர் மனம் உளைந்து ஏகினர். சிலர் அவ் வில்லை அசைக்கமாட்டாதவர்களாகித் தோள்கள் நோவ அடர்ந்து நின்றார்கள்; சிலர் அத் தநுவை எடுத்து அதனை வளைத்து நாண் பூட்ட இயலாதவர்களாகி அதன் வலிமையையும் பெருமையையும் பேசிக்கொண்டே தங்கள் முயற்சியைக் கைவிட்டனர்.

புயவலி மிகுந்த சல்லியன், சிங்கம்போல் நடந்து அவ் வில்லை இருகையாலும் வாரி எடுத்து எதிர் நிறுத்தினான்; அதன் பிறகு அவன் நாணேற்ற முடியாமல் தவித்து அத் தநுவுடன் உடல் நெருங்கக் கீழே வீழ்ந்தான். வில்வியரில் முன் எண்ணத்தக்க பகதத்தன் என்போன், அவ் வில்லை எடுத்து ஊன்றி மற்றைக் கையால் நாணை எடுத்தான்; அவ்

வளவில் அவன் தோள் சோர்ந்து வில்லை வைத்து விட்டான். சராசந்தன் என்பவன், வில்லையெடுத்து நிறுத்தி வரி நாணை மார்பளவும் போக்கி அதற்குமேல் இயலாதவனாயினன்; நீலன் என்னும் அரசன், நாணியை இழுத்து அவ் வில்லின் முனைக்கு ஒருசாண் தூரமளவே வலிமையோடு போக்கினான். துரியோதனன், அத் தநுவை வளைத்து நாணியை நால் விரற்கடை தூரமளவு கிட்டப் போக்கினான்; கர்ணன் அதிக திறமையோடு வில்லையெடுத்து வருத்தமின்றி நாணியைக் கோடிக்கு ஒரு மயிரிழை தூரத்தவ்வளவு கொண்டு போகவும், வளைந்த வில்லின் முனை அவன் முடியைத் தாக்க அவன் கீழே விழுந்தான். இவ் வண்ணம் வேந்தர் பலர், முயன்று அவமான மடைந்து உள்ளம் சோர்ந்து வேறு செயலின்றி வாடியிருந்தனர்.

இங்ஙனம் இருக்கையில், அந்தணர்களுக்கு நடுவில் மாற்றுருவத்துடன் இருந்த அருச்சுனன், கம்பீரமாக எழுந்து ஆங்கிருந்த திட்டத்துய்மனை நோக்கி, "அரசே! வேந்தர்க்கு அன்றி, வேதியரில் எவரேனும் இக்குறி யெய்யின் அவர்க்குப் பாஞ்சாலி மாலை சூட்டுவளோ?" என்று வினவினன். அதற்குத் திட்டத்துய்மன், "விவாகத்திற்கு அது குறைவாகுமோ? அது பெருமையன்றோ!" என்றான். எனலும் அருச்சுனன், முன் வந்து நின்று சிறந்த அவ் வில்லை விரைவில் கையில் ஏந்தி, நாண் பூட்டிக் கணை தொடுத்து, உழலும் திகிரியிற் சுழல்கின்ற இலக்கை எளிதில் எய்து வீழ்த்தினன். அது கண்டு அந்தணர் மகிழ்ந்து ஆர்த்தனர்; வானவர் தூமலர் தூவினர். பாஞ்சாலி அருச்சுனனைக் கண்குளிரப் பரிந்து நோக்கி, உள்ளம் பூரித்து, மணமாலையை அவன் தோளில் சேர்த்தனள்.

## 4. பாஞ்சாலியின் திருமணம்

வளைத்த சிலையைக் கையில் ஏந்தியபடியே பார்த்தன் பாஞ்சாலியுடன் அவ்விடத்தினின்று வெளி ஏகப் புறப்பட்டான். வெட்கமும், பொறாமையும் மிகுந்த துரியோதனாதி வேந்தர் அப்பொழுது போர்க்கு எழுந்தனர். பீமார்ச்சுனர் அது கண்டு அவ் வேந்தர்கள் அனைவரையும் எதிர்த்து வென்றனர்; அதன் பின் பாண்டவர்கள் திரௌபதியை உடன் அழைத்துக்கொண்டு அந்திப் போதில் குலாலன் மனை வாயிலை எய்தி, " அன்னையே ! யாங்கள் இன்றைத் தினத்தில் ஒரு நற்கனி பெற்றேம் ; இதனை என் செய்வது ?" என்றார்கள்.

மனைக்குள் இருந்த குந்தி, மைந்தர் உரைத்த நன் மொழி கேட்டு, " மக்காள் ! நீங்கள் சேர அதனை உண்ணுங்கள்," என்று கூறி வெளி வந்து பாஞ்சாலியைக் கண்டு, " ஆ! ஆ ! என்ன நினைத்தேன் ! என்ன சொன்னேன் ! என்ன செய்தேன் !" என்று மனம் தளர்ந்தனள். அப்பொழுது தருமன் அன்னையை வணங்கி, " தாயே ! நின் மொழி வேத மொழியாகும். எங்கள் நெஞ்சிலும் நினைவு உண்டு," என்றான்.

விற்திறமும் கைவன்மையும் காட்டி வென்ற வீரனும், அவனுடனிருந்தோரும் பாண்டவர்களெனப் பாஞ்சாலன் ஊகித்து ஐயம் கொண்டான். அவன் அந் நாள் இரவில் ஒற்றரை விடுத்து, அவ் வீரர்களின் வாய்மொழியை அறிந்து, ஐயம் விலகி உவகை மிகுந்து இனிது இருந்தான். மறுநாள் துருபதன் பாண்டவர்களை அன்புடன் அழைப்பித்து உபசரித்துத் தன் மகளை அருச்சுனனுக்கு மணம் செய்விக்கத் தொடங்

கினன். அன்னை மொழியை வேதமொழி யெனக் கருதும் ஐவர், பாஞ்சாலியை ஒருங்கு மணம் புரிய விரும்பினர்.

துருபதன் அதற்கு இசையாது தயங்கி யிருக்கையில், வியாஸ மகரிஷி அங்குத் திடீரென்று தோன்றித் துருபதனை நோக்கி, "வேந்தே! குந்திதேவி உரைத்த நல்லுரை பிழையாதபடி பாண்டவர்கள் ஐவரும் பாஞ்சாலியை மணம் புரிவார்களாக. இவள் ஐவரை மணக்க விதியும் உண்டு. முற்பிறப்பில் இவள் நளாயணி எனும் பெயர்கொண்டு மௌற்கல்லிய முனிவனுக்கு வாழ்க்கைப்பட்டாள். அதன்பிறகு இவள இந்திரசேனையாய்ப் பிறந்து அம் முனிவனையே அடைந்து இல்லறம் மேற்கொண்டிருந்தனள். இங்ஙனம் இருக்கையில் கணவன் இவளைவிட்டுப பிரிநது தவம் புரியச் சென்றான். இந்திரசேனை அதன் பின் சிவபெருமானைக் குறித்துத் தவம் செய்து, கணவன் வேண்டுமென்று ஐநது தரம் வேண்டினள். அப்பிரான் தனக்குரிய ஐந்து முகங்களுடன் இவள் எதிரில் தோன்றி, ஐந்து கொழுநரைப் பெறும்படி ஐந்து தரம் அனுக்கிரகித்தனன். அன்றியும், பாண்டவர்கள் முன்னம் ஒருகால் இநதிரர்களாய் இருந்தவர்கள். சாபத்தால் அவர்கள் இங்குப் பூமியில் பிறநதனர். ஆதலால் இப் பாஞ்சாலியை அவர்கள் வேட்டல் தகுதியே ஆகும். உத்தம பதிவிரதை யென்று இவளை உலகம் போற்றித் துதிக்கும்," என்று கூறி மறைந்தனர்.

வியாஸ முனிவர் உரைத்தவை யாவும் கேட்டுத் துருபதன் வியப்பு மிகுந்து மகிழ்ந்து, ஆன்றோர் குறித்த நன்முகூர்த்தத்தில் மகளைப் பாண்டவர்களுக்கு விவாகம் செய்விப்பானாயினன். வேத சாஸ்திரங்களில் வல்ல தௌமிய மாமுனிவர், வேள்விக்கு வேண்டிய யாவும் விதிப்படி ஈட்டி, அக்

கினி சாட்சியாகப் பாஞ்சாலியை ஐவர்க்குத் திருமணம் செய்வித்தார். துருபதன், மருமகளுக்குத் தேர், பரி, களிறு, திரள்சேனை ஆகிய நாற்படையும், பரந்த பூமியும், மிகுந்த தனமும், விசித்திர வரிசைகளும் உவந்து அளித்தான். பாண்டவர்கள் சிறிது காலம் பாஞ்சால நகரில் சிறப்புடன் மகிழ்ந்திருந்தனர்.

"முந்து போரின் முதுகிடுமே வேந்தரால்
விந்தை தன்னையு மேதக வேட்டபின்
அந்த மாநக ரைவரு மாமனும்
வந்த கண்ணனு மன்புடன் வைகினர்."

(பாரதம்.)

# சுபத்திரா பரிணயம்




சுபத்திரை அருச்சுனனை உபசரித்தல்

# சுபத்திரா பரிணயம்

## 1. கிருஷ்ணனும் அருச்சுன சன்னியாசியும்.

துவாரகாதிபதியாகிய ஸ்ரீ வாசுதேவனுக்குத் தங்கை, ஒருத்தி இருந்தனள். அவள், சுபத்திரை எனும் பெயருடன் பேரழகும், உயர் குணமும் வாய்ந்து ஒப்புயர்வற்று விளங்கினள். சுபத்திரை உரிய பருவமடைந்ததும், அவளுடைய தாய் தந்தையர், அவளை யார்க்கு விவாகம் செய்விக்கலா மென்று உறவினரோடு கலந்து ஆலோசிக்கலாயினர். வசுதேவராதியோரும், கண்ணபிரானும் சுபத்திரையை அருச்சுனனுக்கு மணம்புரிவிக்கக் கருத்துக்கொண்டிருந்தனர்.

வசுதேவரது மூத்த குமாரராகிய பலராமர் அவர்கள் கருத்துக்கு மாறாகத் தமது தங்கையைத் துரியோதனனுக்குக் கடிமணம் செய்விக்கத் துணிந்து தமது அபிப்பிராயத்தை அனைவர்க்கும் உறுதியாகக் கூறினர். பலராமருடைய தீர்மானத்தை மாற்ற எவராலும் இயலவில்லை. துரியோதனன் அவரிடத்தில் ஆயுத சிக்ஷை பயின்றுவந்தலால், சீடன் எனும் அபிமானத்தால் அவன்மீது அவர் அன்பு கொண்டார் போலும்.

மாயோனாகிய கண்ணபிரான் அம்மன்றலைத் தமது திருவுள்ளத்தின்படி தந்திரமாக முடிக்க நினைந்து, பலராமருடைய மொழிக்கு எதிர்மொழி யாதும் உரையாமல் அவர் கருத்திற்குத் தாமும் இசைந்தவர்போல் மௌனமா யிருந்தனர். வசுதேவராதியோர் அதன் பிறகு சுபத்திரையைத் துரியோதனனுக்கே கொடுக்கத் தீர்மானித்திருந்தனர்.

அருச்சுனனது வில்வன்மையையும், தோள்வன்மையையும், குணாதிசயங்களையும் சுபத்திரை பலரிடம் பன்முறை கேட்டறிந்தவளாகையால் அவள் உள்ளம் அவனைக் குடிகொண்டது. ஆதலால் அவள் அவனையே நினைத்திருந்தனள். இங்ஙனம் இருக்கையில் பலராமரோ அவளுடைய விருப்பத்திற்கு விரோதமாகத் நிர்மானித்தார். கொடிய துரியோதனனுக்கு வாழ்க்கைப்பட அவள் விருப்பம் கொள்ளாது, அவனை முற்றும் வெறுத்து அருச்சுனனையே நினைந்து நினைந்து உள்ளம் உருகினள். என் செய்வாள் பாவம்! ஆனால் தனது எண்ணத்தைப் பூர்த்தி செய்யக்கூடியவர் கிருஷ்ணன் ஒருவரே எனும் கருத்துமட்டும் அவட்கு இருந்தது.

துவாரகையில் சுபத்திரை இவ்வாறு இருக்கையில், இந்திரப்பிரஸ்த நகரத்தில் வாழும் பாண்டவர்களில் ஒருவனாகிய அருச்சுனன், திரௌபதியின் நிமித்தமாகத் தனக்கு நேர்ந்த பாவத்தைத் தீர்க்க எண்ணித் தீர்த்த யாத்திரை புறப்பட்டான். அங்ஙனம் யாத்திரை புறப்பட்ட அவ்வீரன், தவசிகள் வேடம் தரித்துப் பல தலங்களுக்குச் சென்று புண்ணிய நீராடினன். இடைவழியில் ஆங்காங்குப் பல உத்தம மாதர்களை மணந்து பல சற்புத்திரர்களையும் பெற்றுப் பின் கடைசியாக அவன் கோகர்ணம் எனும் பதியை அடைந்து, தன்னுடன் வந்த முனிவர்களை அங்கு இருக்கச் செய்து, தான்மட்டும் தனியே பிரிந்து சுபத்திரையை நினைவிற்கொண்டு துவாரகைக்குச் சமீபத்தில் வந்து சேர்ந்தான்.

"கன்னியுயர் பொன்னியொரு கங்கை முதலாகப்
பன்னிய நதித்துறை படிந்து கடல்வண்ணன்
மன்னிய செழுந்துவரை மாநகர் மருங்கோர்
பொன்னெழுகு சாரல்வரை போயினிது புக்கான்."—(பாகவதம்.)

துவாரகையை நண்ணியதும், அருச்சுனன் ஒரு சூழ்ச்சியை மேற்கொண்டு சன்னியாசி வேடம் புனைந்தான். அப்பொழுது சூரியனும் அத்தமித்தான். இருள் எங்கும் மூடியது. அன்றியும் அவ்விரவு இடியும் மின்னலும் மிகுந்து கடுமழையும் பெய்யத் தலைப்பட்டது. இந்திரன் அர்ச்சுனனுக்குத் தந்தையன்றோ? தன்னுடைய சிறந்த குமாரனாகிய அருச்சுனன், சுபத்திரையை மணம்புரிய விரும்பித் துவாரகைக்கு வந்திருக்கிறானென்று இந்திரன், ஆகாயத்தை நீல நிறமான பட்டினால் விதானம் அமைத்து அலங்கரித்து, இடிகளாகிற முரச வாத்தியங்களை ஒலிப்பித்து, மின்னல்களாகிற விளக்குகளையும் ஏந்தி, தாரை தாரையாகப் பொழியும மழைத் துளிகளால் முழுப் பொரிகளையும் சிந்தினன் போலும்.

அப்பொழுது அருச்சுனன் அம் மழைக்குப் பயந்து, அருகிலிருந்த 'ரைவதகம்' என்னும் மலையை அடைந்து, உயர்ந்த ஓர் ஆலமரத்தின் அடியிற் போய்ச் சேர்ந்தான். அங்ஙனம் சேர்ந்தவன் தனக்குத் துணையின்மையால் கண்ணபிரானைத் தியானித்தான். நீங்குதற்கு அரிய நண்பன் நெடுநாள் நீங்கி இருந்து இப்பொழுது தம்மிடம் வந்து துணைவேண்டுகிறான் என்பதை யறிந்த கண்ணபிரான் அக்கணமே, 'தாருகன்' என்னும் தமது தேர்ப்பாகனோடு புறப்பட்டு அருச்சுனன் எதிரில் வந்து தோன்றினர்.

இல்லறத்தை மேற்கொண்டவர்கள், துறவிகளை வணங்க வேண்டியது விதி யாதலால், கண்ணபிரான் தமது நிலைமைக்கு ஏற்ப அருச்சுனனைப் பரிவுடன் இறைஞ்சினர். அப்பொழுது அச் சன்னியாசி, சிறந்த வேத வாக்கியங்களை நவின்று, ஸ்ரீ வாசுதேவனை வாழ்த்தி, அப் பெருமானை மார்புடன் தழுவி மகிழ்ந்து, தான் கொண்ட கருத்தை வெளியிட்டு, அருள

புரிய வேண்டினன். கிருஷ்ணன், புன்முறுவல் பூத்த முகத்தினராய், அவ்வுரை கேட்டு வியந்து, தாம் மறுநாட் காலையில் வருவதாக நவின்று, அவ்விடம் விட்டு அகன்று இமைப்பொழுதில் தம் கோயில் நண்ணினர்.

## 2. கிருஷ்ணன் புரிந்த தந்திரம்.

மழைக் கடவுளாகிய இந்திரனைக் குறித்து யாதவர்கள் வருடந்தோறும் திருவிழாக் கொண்டாடுவது வழக்கம். அந்திருவிழாவை ரைவதமலைச் சாரலில் நடத்தவேண்டுமென்று கிருஷ்ணன் அனைவர்க்கும் அறிவித்தனர். மறுநாள் உதயத்தில் யாதவர்களெல்லோரும் பல்வகைய அலங்காரத்துடன் தங்கள் தங்கள் குடும்ப சமேதராய் இசைக்கலன்கள் முழங்கப் பல அரிய பொருள்களைக் கையில் ஏந்தி ரைவதகிரிக்கு வந்து சேர்ந்தார்கள். கிருஷ்ணனுடைய தமையனான பலராமர் தமது பத்தினியாகிய ரேவதீ தேவியுடன் அங்கு வந்திருந்தனர். கண்ணன் தங்கையான சுபத்திரையும், தன் தோழியரை உடன் கொண்டு தமையன்மார்களைப் பின் தொடர்ந்து ஆங்கு வந்து சேர்ந்தனள்.

திரிதண்டம், கமண்டலம், காஷாயம், முந்நூல், சிகை ஆகிய பஞ்ச முத்திரைகளும் பொருந்தி, உத்தம சன்னியாசியாக விளங்கும் அப் பெரியோரை, பலராமர் முதலானோர் தரிசித்து வணங்கி அவரது அநுக்கிரகம் பெற்று விலகினர். அங்ஙனம் சென்றவர்கள் மதுபானம் செய்து, இந்திரவிழாவில் உற்சாகம் கொண்டு, ஆடல் பாடல்களுடன் அம் மலைச்சாரலில் உலாவியிருந்தனர்.

இவர்கள் எல்லோரும் அச் சன்னியாசியைத் தொழுது சென்ற பின்பு கண்ணபிரான், அருச்சுனனிடம் வந்து தாமும்

வணங்கினர். அப்பொழுது அருச்சுனன் அப் பெருமானை வணங்கலும், கிருஷ்ணனுக்கு அவனிடம் அருள மிகுந்தது. அதன்பின் அவ்விருவரும் மனம் ஒருமைப்பட்டு ஏகாந்தமாகச் சம்பாஷித்திருக்குங்கால், அம் மலைச்சாரலில் ஓரிடத்தில் உலாவிக்கொண்டிருந்த சுபத்திரை, அர்ச்சுனன் கண்ணுக்கு இலக்காயினள். அவளது அழகிய தோற்றம் அத் துறவியின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டது. அத் துறவியோ உடல் முழுதும் மிகுதியாக மயிர்ச்சிலிர்ப்புக் கொள்ளப் பெற்று, அவளைப் பார்த்த கண்கள் இமை கொட்டாவண்ணம் திகைத்து உள்ளம் சோர்ந்து மதி மயங்கி இருந்தான்.

அருகிலிருந்த கண்ணபிரான் அக் குறிப்புக்களை அறிந்து புன்சிரிப்புக் கொண்டு, "பெரியீர்! ஏன் இவ் விகாரம்? உமது சன்னியாசம் நன்று! நன்று!! இந்தப் பெண்ணைக் கண்டு இவ்வாறு ஆனீர் போலும். எனது தங்கை சுபத்திரை என்பாள் இவளே. உத்தம சன்னியாசி யாகிய நீரோ, எனது அத்தையின் குமாரர் ஆகின்றீர். சுபத்திரையை மணம்புரிய உமக்கு விருப்பமுண்டு என்பதை நான் எனது தந்தைக்கு அறிவித்து, அதன்பின் செய்வன அனைத்தையும் செய்வேன்," என்று பரிகசித்தனர்.

இவ் வார்த்தைகளைக் கேட்ட அருச்சுனன் உடல் வேர்த்து, "ஏன் நீரும் என்னை இங்ஙனம் வருத்துகின்றீர்! பரிகாசம் ஏன்! யான் இங்கு வந்திருக்கும் காரணத்தை நீர் முற்றும் அறிவீர். இங்ஙனம் இருக்க, நீர் இவ் வண்ணம் பரிகசித்தல் என்னே? என்மீது கருணை கூர்ந்து உமது தங்கையை எனக்கு விவாகம் செய்விப்பீராக," என்று நயந்து வேண்டினன்.

அதன்பின் கிருஷ்ணன் அருச்சுனனை நோக்கி, 'அன்ப! உன் உள்ளக் கருத்தை எம்மவர்கள் அறிவரேல்

வீண் வம்பாய் முடியும். பலராமரோ, சுபத்திரையை துரியோதனனுக்கு மணம் செய்விக்கக் கருத்துக் கொண்டுள்ளார். என் செய்வது! யான் ஓர் உபாயம் சொல்கிறேன்; அவ்வண்ணம் செய்; எவரும் அறியாதபடி இரகசியமாகச் சுபத்திரையை விவாகம் செய்துகொண்டு அவளை உடன் அழைத்துச் செல்; இங்ஙனம் செய்வது அரசர்க்கு நீதிமுறையேயாகும். அதற்குத் தக்க சமயமும் யான் சொல்வேன். சில நாள் பொறுத்திரு,'' என்று மனமகிழக் கூறினர்.

இங்ஙனம் கூறியவுடன் அம்மாயோன், சுபத்திரையை அருகு அழைத்து, "அணங்கே! இவ் வுத்தம சன்னியாசிக்கு நீ கொஞ்சகாலம் அன்புடன் குற்றேவல் புரிவாயாக. உனக்கு நலம் உண்டு. சாதாரணமாய்த் துறவிகள் ஒரு நாளைக்கு மேல் ஓர் ஊரில் வசிக்கமாட்டார்கள்; மழைக் காலமாகிய நான்கு மாதங்களில் மட்டும் அவர்கள் ஒரே இடத்தில் வசிக்கலாமென்பது நூல்களின் கொள்கையாதலால், இம முனிவர் மாரிநாள் முழுமையும் இவ் வூரில் இருப்பர். உரியபடி நீ அவர்க்குப் பணிவிடை புரிந்து அவரை மகிழ்விப்பையேல், உனக்கு மங்களம் உண்டாகும்,'' என்று கட்டளையிட்டார். சுபத்திரை அங்ஙனமே செய்யச் சம்மதித்து வணங்கி விடைபெற்றுச் சென்றாள்.

பிறகு கிருஷ்ணன் பலராமரைக் குறுகி, "அண்ணா! மழைக்காலம் நீங்கும்வரையில் இச் சன்னியாசியை நமது பட்டணத்தில் ஒரு விடுதியில் இருக்கச் செய்து ஆதரிக்கலாமென்று நினைக்கிறேன். நமது சுபத்திரை அவர்க்குப் பணிவிடை புரிந்து அவரது அநுக்கிரகம் பெறுதல் சாலச் சிறக்குமன்றோ? நமது யது குலத்தில் தோன்றிய குந்திதேவியும், கன்னிப் பருவத்தில் துர்வாச முனிவர்க்குப் பணிவிடை

புரிந்து சிறந்த அருள் பெற்றாள் என்பதை நீரும் அறிவீரன்றோ? ஆதலால் இவரை எவ்விடத்தில் இருக்கச் செய்யலாம்?" என்று தந்திரமாக வினவினர்.

அம் மொழி கேட்டுப் பலராமர், "கிருஷ்ணா! நீ சொல்வது உசிதமே; நமது அரண்மனைத் தோட்டத்திலுள்ள பூங்கொடி மண்டபத்தில் இம் முனிவர் இருக்கட்டும். அதன் அருகே கன்னி மாடத்தில் வசிக்கும் நமது சுபத்திரை பிக்ஷையிட்டு இவரை உபசரிக்கட்டும். சாதுக்களைப் பூசிப்பதால் நன்மையே," விளையும் என்றார்.

இங்ஙனம் பலராமரது அனுமதியைத் தந்திரமாகப் பெற்றதும், கண்ணபிரான் வெகு விரைவாக அருச்சுன சன்னியாசியிடம் வந்து வணங்கி, உடன்வரப் பிரார்த்தித்து அழைத்துச் சென்று, குறித்த இடத்தில் அவரை இருக்கச் செய்தனர். சுபத்திரை அந்தச் சன்னியாசியை அர்ச்சுனனென்று அறிய இயலாதவளாகிக் கண்ணபிரான் கூறியபடியே அம் முனியை நன்கு உபசரித்து வந்தனள். சுபத்திரையை நாள்தோறும் பலமுறை காணக்கிடைத்த பாக்கியத்திற்காக அருச்சுனன் மிகவும் மனம் உவந்து, அவளிடத்து நாட்கு நாள் அதிக அன்பு பூண்டு மயங்கி யிருந்தான்.

## 3. சுபத்திரை சன்னியாசியை அறிதல்.

அருச்சுன சன்னியாசியின் விருத்தாந்தத்தைக் கண்ணபிரான், ருக்மிணி சத்தியபாமை ஆகிய தமது தேவியர்கள் இருவர்க்கும் தெரிவித்திருந்தனர். ஒருநாள் கிருஷ்ணன், ருக்மிணீ சத்தியபாமா சமேதராய் அருச்சுன சன்னியாசியிடம் வந்து அருகிலுள்ள தேவியர்களை நோக்கி, "இம முனி

வரை வணங்குமின் ; இவர் ஒரு விசித்திர சன்னியாசி ; உடுத்திருக்கும் காஷாயத்திற்கு ஏற்றபடி இருக்கும் இவர் மனமும்; இவர் சமயத்துக்குத் தக்கபடி இருப்பர்; கபடம் என்பது இவரிடத்தில் சிறிதும் காணக்கிடையாது. இவர் ஒரு மகான்!" என்று கூறிப் புன்முறுவல் கொண்டனர்.

இம் மொழிகளைக் கேட்டதும் ருக்மிணி, 'இவர் ஓர் அபூர்வ சன்னியாசி என்பது உண்மையே. இவரைப் போன்ற ஸாதுக்களை இனிக் காண்பது அரிதே; நமது சுபத்திரை மிக்க நலம் வாய்ந்தவள்; இவ் வுத்தம சன்னியாசியின் அனுக்கிரகம் பெறுவாள்; அவட்கு இனியும் குறை யுண்டோ? விரைவில் விவாகமும் நடைபெறும்,'' என்று புன்முறுவலுடன் பரிகசித்தனள்.

இவ் வார்த்தைகளைக் கேட்டிருந்த சத்தியபாமை, "ருக்மிணீ! நீ சொல்லுவன யாவும் உண்மையே. பெண் வேண்டுமென்றால் இவர் பல வேஷம் போடுவர்; முன்னம் ஒருதரம் பிராமண வேஷம் புனைந்தார்; திரௌபதியை மணந்தார்; பின்பு தவசியாகக் கோலம் பூண்டு தீர்த்தயாத்திரை புறப்பட்டார்; பல கன்னிகைகளை மணந்தார். இப்பொழுது சன்னியாசி வேடம் தரித்திருக்கிறார்; சுபத்திரை கிடைத்தாள் நமது சுபத்திரையின் மணாளர் ஆதலால், இவர் நம இல்லத்திற்கு மருமகர் ஆகின்றார். நாம இவர்க்கு நல் விருந்தளிக்கவேண்டு மன்றோ?" என்று சாந்தமாகக் கூறி இளநகை கொண்டனள்.

இன்னோர் கூறிய மொழிகளைக் கேட்டிருந்த அருச்சுனன் ஏங்கிய மனத்தனாய், "கிருஷ்ண! ஏன் என்னை இவ்வாறு வருத்துகின்றீர்? எனது எண்ணத்தை நீர் அறிவீர்;

என்னைப் பரிகசித்தது போதும். கருணையோடு என்னைக் காப்பீராக,'' என்று தாழ்ந்து வேண்டினன். கிருஷ்ணன், அருச்சுனன்மீது அருள்கூர்ந்து அவனுடைய எண்ணத்தைப் பூர்த்தி செய்வதாக வாக்களித்துத் தேவியர் இருவரையும் உடன்கொண்டு அந்தப்புரம் ஏகினர்.

அருச்சுனனுடைய பராக்கிரமத்தையும் அழகையும் குறித்து விசிதமாகக் கேட்டிருந்த சுபத்திரை, அவனையே கணவனாகக் கொள்ளக் கருதி உள்ளம் கரைந்து இந்திரபிரஸ்தத்திலிருந்து வருகிறவர்களிடத்தில அடிக்கடி அவனுடைய க்ஷேமத்தை விசாரித்து வரலாயினள். அன்றியும் தனது எண்ணம் நிறைவேறுமோ என்று சோதிடம் வல்லாரைக் கேட்டு, அவர்கள் கூறிய நன்மொழியை நினைந்து சிறிது தைரியமும் கொண்டிருந்தனள். அல்லும் பகலும் அனவரதமும் அருச்சுனனையே மனத்தில் தியானித்திருக்கும சுபத்திரை, அவனை யடைய எப்பொழுது சமயம் வாய்க்குமோ எனக் கலங்கி யிருந்தனளே யன்றி, தினந்தோறும் தான் உபசரித்து வரும் அச் சன்னியாசியை இன்னனென்று அறிந்தாளில்லை.

இங்ஙனம் சில நாட்கள் செல்ல, காலக்கிரமத்தில் அவள் அச் சன்னியாசியிடம் சில விசித்திரக் குறிப்புகளைக் காணலாயினள். தான் விரும்பிக் கேட்டுள்ள அருச்சுனனது அழகும், தான் உபசரிக்கும சன்னியாசியின் பொலிவும் பல விதத்தில் ஒத்திருந்தமையாலும், அன்றியும் அச் சன்னியாசி கையில் வில்லின் தழும்பு இருக்கக் கண்டமையாலும், சுபத்திரை அச் சன்னியாசியைச் சிறிது சந்தேகித்தாள்.

ஒருநாள் காலை சுபத்திரை அத் துறவியின் திருவடிகளை வணங்கி, "சுவாமி! புண்ணிய தீர்த்தங்களில் ஸ்நாநம் செய்வதென்று பல இடங்களிலும் யாத்திரை செய்தீராயினும்,

உமது உறைவிடம் எது ?" என்று வணக்கமாகக் கேட்டாள். அதன்பிறகு அக் கபட சன்னியாசி மனமுவந்து அவளுடன் விஸ்தாரமாகப் பேசுவானாயினன்:—

சன்னியாசி:—"யாம் இருப்பது இந்திரப்பிரஸ்தம் எனும் சிறந்த நகரம்."

சுபத்திரை:—"அவ்விடத்தில் எங்கள் அத்தை குந்திதேவியைக் கண்டீரோ? அவளும் அவள் குமாரர்களும் இனிது வாழ்கின்றார்களோ ?"

சன்:—"அவர்கள் எல்லோரும் சௌக்கியமே; அருச்சுனன் தீர்த்தயாத்திரை சென்றிருக்கிறான் என்பதை யாவரும் அறிவர். நீயும் அறிவையன்றோ ?"

சுப:—"ஆம்; அறிவேன்; அவர் இப்பொழுது எங்கே இருக்கிறார்? உமது யாத்திரையில் நீர் அவரை எங்கேனும் கண்டீரோ ?"

சன்:—"அருச்சுனன் பல திசைகளிலும் சென்று தீர்த்த யாத்திரையை முடித்தான். ஆனால் அவன் இன்னம் இந்திரப் பிரஸ்தம் போய்ச் சேரவில்லை.

சுப:—"அவர் இருக்குமிடம் உமக்குத் தெரியுமோ ?"

சன்:—"ஒருவாறு தெரியும். அருச்சுனா! என்னே உன் கோலம்! உன் விதி இவ்வாறு ஆயிற்றே!"

சுப:—"அவர் விதியை நினைந்து, நீர் நொந்து பேசுவதேன்? அவர்க்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்ததோ? தெளிய உரைப்பீராக."

சன்:—"சுபத்திரா! வினையின் செயலால் அவன் கவலை குடி கொண்டு உரு மாறி இருக்கின்றான். அவனைக் காண உனக்கு விருப்ப முண்டோ?"

சுப:—"ஆம்! யான் அவரை எங்குக் காணலாம்?"

சன்:—"அவன் வெகு தூரத்தில் இல்லை; அருகிலேயே இருக்கின்றான்."

சுப:—"எங்கு? எங்கு?"

சன்:—"பொற்கொடியே! நீ தினந்தோறும் அவனைப் பார்த்துக் கொண்டிருந்தும் அவனை நீ அறியாமலிருக்கிறாய்."

இவ்வார்த்தைகளைக் கேட்டதும் சுபத்திரை, திடுக்கிட்டுப் பெருமூச் செறிந்து தலை குனிந்து நின்றாள். அப்பொழுது அக் கபட சன்னியாசி, "பெண்ணே! என் ஆருயிரே! அருச்சுனன் என்பவன் யானே; நீ என்மீது கொண்டுள்ள அன்பினும், பதின் மடங்கு அதிகமாக யான் உன்மீது கொண்டுள்ளேன்; நாம் இருவரும் மணம் புரிந்து இனிது வாழ்வோமாக," என்று கூறிய வண்ணமே அவளது அழகிய கரத்தைப் பிடித்தான்.

இங்ஙனம் நிகழலும், அருகிலிருந்த தோழியர், அச் சன்னியாசியை விலக்கி, நியாய மொழி பல கூறிச் சுபத்திரையை விடுவித்து உடன் கொண்டு மாளிகைக்குள் சென்று, நிகழ்ந்தவை யாவும் தேவகிக்குத் தெரிவித்தனர். இச் செய்தியைத் தாய் தேவகியும், தோழியரும் அறிந்தனரே யன்றி பிறர் எவரும் அறிந்திலர். சுபத்திரையோ, ஊணும் உறக்கமு மின்றி உடல் சோர்ந்து உளம் நைந்து வருந்தலாயினள்.

## 4. திருமணம்.

உயிர்க்குயிராய் உலகெங்கும் உறையும் நீமலனை கண்ணபிரான், நிகழ்ந்த செய்தி யாவும் நன்கு அறிந்து, சுபத்திரையை அருச்சுனனுக்கு மணம் புரிவிக்கத் திருவுள்ளங் கொண்டு, அரிய உபாயம் ஒன்று புரிவாராயினர். சுபத்திரைக்கு ஏதோ நோய் கண்டதென்றும், அந்நோய் தணியும் பொருட்டுச் சிவபெருமானுக்குத் திருவிழா ஒன்று சிறக்கச் செய்ய வேண்டுமென்றும், கிருஷ்ணன் தந்திரமாகப் பலராமர் முதலிய யாதவர்க்கு எடுத்துரைத்தார். அதன்பின் அம் மாயோன், அவர்கள் சம்மதம் பெற்றுத் துவாரகையிலுள்ள யாதவர் அனைவரையும் அழைத்துக்கொண்டு 'மகாத்வீபம்' என்ற இடம் போய்ச் சேர்ந்தனர். பலராமர், உத்தவர், அக்குரூரர், வசுதேவராதி பெரியோர் துவாரகையினின்று புறப்பட்டுக் கடலிடையே யுள்ள அத் தீவை அடைந்தார்கள். அங்குச் சிவ விழா சிறந்து நடைபெற, அனைவரும் மகிழ்ந்திருந்தனர். சுபத்திரையும் அருச்சுன சன்னியாசியும் துவாரகையிலேயே இருந்தனர்.

அந் நாள் இரவில் அருச்சுனன், விவாகத்தை முறைப்படி முடித்துக் கொள்ள எண்ணித் தன் துணைவரான கிருஷ்ணனையும் தன் தந்தையாகிய இந்திரனையும் தியானித்தான். தன் எண்ணம் கைகூடவேண்டு மென்று சுபத்திரையும் கிருஷ்ணனை நினைத்தாள். கிருஷ்ணன் அவ்விருவர் விருப்பத்தையும் பூர்த்தி செய்யத் திருவுள்ளம் இசைந்து, அக்குரூரர், வசுதேவர், தேவகி, ருக்மிணி, சத்தியபாமை முதலானோரை அழைத்துக்கொண்டு பலராமர், உத்தவர் முதலானோர் தூங்கும் சமயம் பார்த்துத் துவாரகை வந்தனர்.

தேவேந்திரன் இந்திராணியை உடன் கொண்டு சகல தேவர்களோடும் பல முனிவர்களோடும் புறப்பட்டு அருச்சுனன் இருக்குமிடம் வந்து சேர்ந்தான். கண்ணபிரான் தேவேந்திரனை எதிர்கொண்டு நல்வரவு கூறி உபசரித்து, அவ்விரவே சுபத்திரைக்குத் திருமணம் நடத்த வேண்டினர்.

தேவேந்திரனும் இந்திராணியும் தங்கள் அணிகலன்களால், அருச்சுனனையும் சுபத்திரையையும் பொருத்தமாக அலங்கரித்தார்கள். இயற்கை அழகோடு செயற்கை அழகும் புனைந்த அவ் விருவரும் ஒப்புயர்வற்று விளங்கினர். உடனே கண்ணபிரான் அருளினால் வஸிஷ்டாதி முனிபுங்கவர்கள் அங்குக் கூட்டமாக வந்து வைதிக விதிப்படி விவாகத்தை நடப்பிக்கலாயினர்.

இந்திரனுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம் அங்கு வந்திருந்து மண மக்கட்கு மந்திரக் கோடி யுடுத்தி ஆசீர்வதித்து மகிழ்ந்தனர். முரசு ஒலிக்க மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றாத, முத்துடைத் தாமம் நிரை தாழ்ந்த பந்தற்கீழ் அருச்சுனன் சுபத்திரையைப் பாணிக்கிரகணம் செய்து காப்பு நாண் கட்டினன். வேதியர் மறையோதிச் செந்தீ வளர்த்த பின் தம்பதிகள் இலாஜ ஹோமம் முதலிய வைதிகச் சடங்குகளை முட்டின்றி முடித்துத் தீ வலமும் செய்து ஆண்டிருந்த பெரியோர்களை வணங்கி ஆசீர்வாதம் பெற்றார்கள். இந்திராதி தேவர்களும், வஸிஷ்டாதி முனிவர்களும் கிருஷ்ணனிடம் விடை பெற்றுத் தங்கள் தங்கள் உறைவிடம் ஏகினர்.

அதன்பின் கண்ணபிரான், திருவுள்ளம் உவந்து அருச்சுனனைத் தழுவிக்கொண்டு, "அருச்சுன! அழகிய மகளிரை

மணக்க விரும்பி நீ இன்னம் என்னென்ன மாதவம் கொள்ளுகிறியோ! நீ சுபத்திரையை அழைத்துக் கொண்டு நமது தேரின்மீது ஏறி இந்திரப்பிரஸ்தம் போய்ச் சேர்வாயாக. பலராமர் முதலியோர் விழித்து எழுந்திருப்பதற்கு முன் நாங்கள் அங்குப் போய்ச் சேர்கிறோம்," என்று உபாயம் கூறி, உடன் வந்தார் அனைவரையும் அழைத்துக்கொண்டு மகாத்வீபம் போய் ஆங்கிருந்தாருடன் முன்போல் கூடியிருந்து பள்ளி அமர்ந்து பொய் யுறக்கம் கொள்வாராயினர். என்னே அவரது மாயம்! என்னே அவரது விசித்திர செய்கை!

அருச்சுனன் சுபத்திரையுடன் துவாரகையில் சில நாட்கள் இனிது இருந்து, மகாத்வீபத்தில் சிவ விழா முடியு முன், சுபத்திரையுடன் இந்திரப்பிரஸ்தம் போகப் பிரயாணப் பட்டுத் தேரேறி விரைந்து செல்வானாயினன். அப்பொழுது சுபத்திரை, கிருஷ்ணனுடைய கட்டளையை எடுத்துரைத்து, அருச்சுனனது உத்தரவு பெற்றுத் தன் திறமை விளங்கத் தேர் செலுத்தினள்.

---

## 5. கிருஷ்ணன் சமாதானம் கூறுதல்.

கிருஷ்ணன் கூறியவண்ணம் அருச்சுனன் தேரேறி இந்திரப்பிரஸ்தம் நோக்கிச் சென்றனன். தேர் வெகு வேகமாய்ச் சென்றது. துவாரை நகர்க் காவலர் தேரோசை கேட்டு வெளியே ஓடிவந்து பார்த்து, "ஆ! ஆ! சுபத்திரையை எவனோ ஒருவன் வலியத் தூக்கிக் கொண்டு போகிறான்," என்று கூக்குரலிட்டு ஆயுதங்களை ஏந்தி இரதத்தைத் தங்கந்

தனர். அருச்சுனன், அவர்களை எல்லாம் எதிர்த்து அச்சுறுத்தித் துரத்தினான். ரைவத பருவதத்தின் அருகில் காவல் காத்திருந்த 'விப்புருது' என்னும் படைத்தலைவன் தேரின் இரைச்சலையும் பிற ஆரவாரங்களையும் கேட்டுச் சங்கிதப் படை கூட்டிப் பின்தொடர்ந்து வந்து அம்பு தொடுத்து அருச்சுனனை எதிர்த்தான். சுபத்திரை அப்பொழுது அருச்சுனனை நோக்கி, "நாதா! நீர் போர் புரிகையில் உமக்குச் சாரத்தியம் செய்யவேண்டுமென்று வெகு நாளாய் எண்ணங் கொண்டிருந்தேன்; அவ்வெண்ணம் பூர்த்தி பெறத் தக்க சமயம் எனக்கு இன்றைக்கு வாய்த்தது," என்றாள். அருச்சுனன், அம்மொழி கேட்டு மகிழ்ந்து, காதலியைக் கண்குளிர நோக்கி, "சுபத்திர! இரதத்தைக் கொஞ்சம் மெதுவாக ஓட்டு," என்று கூறி விப்புருதுவையும் அவன் சேனைகளையும் சின்னாபின்னப்படுத்தித் துரத்தினன்.

இங்ஙனம் அபசயப்பட்டு ஓடிய வீரர்கள், அரண்மனை வாயிலை நண்ணி, அங்கிருந்த இரண பேரிகையை அடித்து ஒலி எழுப்பி, உற்ற தீங்கை வெளியுள்ளார்க்குக் குறிப்பித்தனர். மகாத்வீபத்திலிருந்த பலராமர் முதலானோர்க்கு அவ்வொலி கேட்டது. போர் நேரும் காலத்தில் முழக்கக்கூடிய இரண பேரிகையின் சத்தம் திடீரென்று உண்டானதால், துவாரகையில் ஏதோ விபரீதம் நேர்ந்ததென்று பலராமர் விரைந்து எழுந்து அனைவரையும் சேர்த்து உடன் கொண்டு நகர்க்கு வந்து செய்தி விசாரித்தனர். அருச்சுனன், சன்னியாசி உருவம் தரித்துத் துவாரகை வந்து சிலநாள் இருந்து, சுபத்திரையைக் கைப்பற்றினன் எனும் விருத்தாந்தம், கிருஷ்ணன் மூலமாகச் சிறிது வெளியாயிற்று.

பலராமர் சினம் மிகுந்து, அலாயுதம் தாங்கி நால் வகைச் சேனையோடு போர்க்குப் புறப்பட்டு அருச்சுனனைச் சூழ்ந்து எதிர்த்தனர். அப்பொழுது சுபத்திரை, தன் காதலனை நோக்கி, "என் ஆருயிர்த்தலைவ! என் நிமித்தம் யாதவ வீரர்கள் மாண்டார்கள் எனும் பழி வேண்டாம். அன்னோர் உயிரைக் காப்பீராக," என்று பணிந்து வேண்டினள்.

அம்மொழி கேட்ட அருச்சுனன், "பெண் நாயகமே! நீ அஞ்சேல்; போரில் உன் சுற்றத்தாரைக் கொல்லேன்," என்று தேறுதல் கூறி, இரதத்தைத் துரிதமாகச் செலுத்தப் பணித்தான். விரைவிலும் பரப்பிலும் மேகத்தையொத்த அத்தேரினைச் சுபத்திரை செலுத்த, அருச்சுனன் தன் திறமை முற்றும் செலுத்தி யாதவசேனை முற்றும் புறந் தந்திட வென்று வேகமாகத் தேரின்மீது சென்றான்.

"அஞ்சே லமரினுமர் தம்மையு மாவிகொள்ளேன்
செஞ்சே லனையவிழியா யெனத் தேற்றியந்த
மஞ்சே யனைய தடந்தே ரவனூரவந்த
வெஞ் சேனைமுற்றும் புறந்தந்திட வென்றுபோனான்"

(பாரதம்.)

நிகழ்ந்தவை அனைத்தையும் மௌனத்துடன் பார்த்திருந்த அக் கள்வன், அதன்பின் பலராமரிடம் வந்து, "அண்ணா! அந்தக் கபட சன்னியாசியைக் குறித்து நான் ஆதியிலேயே சந்தேகித்தேன். நான் நினைத்தபடியே ஆயிற்று! இனி என் செய்வது! கெடுதி ஒன்றுமில்லை. சுபத்திரையோ அருச்சுனனுக்கு அம்மான் பெண் ஆகின்றாள். அவ்விருவரும் விவாகம் செய்துகொள்ளுதல் முறையே யாகும். அருச்சுனன் போரில் வல்லவன் என்பதை நீர் நன்கு அறிவீர்.

திறமை மிகுந்த அவ்வீரன், நமது சுபத்திரைக்கு மணாளனானது மிகச் சிறந்ததேயாகும். தகுதியான இடம் தங்கைக்குக் கிடைத்ததென்று நாம் இனி மகிழ்ந்திருத்தலே நலமாகும்," என்று கூறலும், பலராமர் ஒருவாறு சினம் தணிந்து இவை அனைத்திற்கும் கிருஷ்ணனே காரணமாயிருக்கவேண்டுமெனத் தேர்ந்து, அரண்மனைக்கு மீண்டு சென்றார்.

இந்திரப்பிரஸ்தம் நோக்கிச் செல்லும் அருச்சுனன், இடைவழியில் ஆங்காங்கு உள்ள நகரங்களையும், நதிகளையும் சுபத்திரைக்குத் தெரியவுரைத்துப் பல விநோதங்கள் கண்டு மகிழ்ந்து தன்னூர் நண்ணினன். தருமபுத்திரர், தம்பியர் மூவருடன் அன்பினால் மனமுருகி, அருச்சுனனை எதிர்கொண்டு அழைத்துச்சென்று செய்தி அறிந்து வியந்து மகிழ்ந்தனர்.

சுபத்திரை மாளிகை புகுந்து, முதலில் குந்தியைத் தேடி நமஸ்கரித்து அவளது ஆசீர்வாதம் பெற்றுப் பின்பு திரௌபதியை வணங்கி, "அம்ம! நான் உன்னுடைய பணிப்பெண்; என்னை அன்புடன் காக்கவேண்டும்," என்றாள். திரௌபதி, அம்மொழி கேட்டு உள்ளம் பூரித்து, "பொற்கொடியே! நீ என்னிடம் விரோதமின்றி வாழ்வாயாக; நன்மக்களையும் பெறுவாயாக," என்று ஆசீர்வதித்தாள்.

விவாகத்திற்கு அன்போடு கொடுக்கக்கூடிய சீதனங்களை மிகுதியாகச் சேர்த்து எடுத்துக்கொண்டு பலராமர், கிருஷ்ணனுடன் துவாரகையிலிருந்து புறப்பட்டு, இந்திரப்பிரஸ்தம் அடைந்து அருச்சுனனை நேரிற் கண்டு பல இனிய மொழிகள் கூறிச் சமாதானம் செய்து, கொணர்ந்த பரிசுகளையெல்லாம் தந்து களித்தனர்.

அந் நாள் தருமபுத்திரர், பலராமருக்கும் கிருஷ்ணனுக்கும், அவர்களோடு வந்த யாதவ வீரர்கட்கும் நல் விருந்தளித்து உபசரித்தனர். மறுநாட் காலை பலராமர், தமது பரிசனங்களுடன் துவாரகைக்குச் சென்றனர். பாண்டவர்கள் வேண்டுகோட்கு இசைந்து, கிருஷ்ணன்மட்டும் இந்திரப் பிரஸ்தத்திலேயே சிலநாள் இருந்தனர். அருச்சுனன், கிருஷ்ணனைவிட்டுப் பிரியாமல், அவருடன் உரையாடிப் பெருமகிழ்ச்சியோடு இருந்தனன்.

இங்ஙனம் சில மாதங்கள் சென்றதும் சுபத்திரை, நன் முகூர்த்தத்தில் ஓர் அழகிய உத்தம புத்திரனைப் பெற்றாள். அவன் ‘ அபிமந்யு ’ என்று பெயரிடப்பட்டு, சிறு பிராயத்திலேயே மிக்க திறமை வாய்ந்து மகா வீரனாய்ப் புகழுடன் விளங்கினன்.

# உத்தரா பரிணயம்




உத்தரா பரிணயம்

# உத்தரா பரிணயம்.

## 1. பாண்டவர்கள் அஜ்ஞாதவாசம்.

பாண்டவர்கள், துரியோதனாதியர்களால் பலவகைத் துன்பங்கள் அடைந்து, நாடு நகரங்களையும் இழந்து, பன்னிரண்டு வருடம் வனவாசமும் ஒரு வருஷம் அஜ்ஞாதவாசமும் செய்ய உடன்பட்டுச் சென்றார்கள். அங்ஙனம் சென்றவர்கள் காமியவனம் முதலிய இடங்களில் வனவாசம முடித்தபின்னர் தங்களுடன் இருந்த தௌமிய முனிவரை வணங்கி, "சுவாமி! இவ் வடவியில் இவ்வளவு காலமும் போக்கி ஒழித்தோம்; முன்னம் குறித்தபடி இனி நாங்கள் அஜ்ஞாதவாசம் செய்ய வேண்டும். அதற்குத் தகுதியான இடம் விராட நகரமெனத் தேர்ந்தோம். ஆதலால் தேவரீர் எங்களுக்கு அனுமதி தர வேண்டும்," என்று பிரார்த்தித்தனர். தௌமியர், பாண்டவர்களையும் திரௌபதியையும் ஆசீர்வதித்து விடை யளித்து அனுப்பினர்,

பாண்டவர்கள், அவ்விடம் விட்டுப் பிரயாணம் மேற்கொண்டு வனங்களையும், நதிகளையும் மலைகளையும் கடந்து விராட நகரத்தைச் சமீபித்தார்கள். அங்கு அவர்கள் தங்கள் ஆயுதங்களையெல்லாம் ஒன்றாகச் சேர்த்துக் கட்டி அருகிலிருந்த மயானத்தில் ஒரு வன்னிமரத்தின்மீது மறைத்து வைத்துவிட்டு அதன்பின் கங்கைக் கரைக்கு வந்தார்கள்.

ஐவர் அப் புண்ணிய நதியில் நீராடித் தூய மனத்தின ராய்த் தங்கள் இஷ்ட தேவதையைப் பிரார்த்தித்து மாறு வேடம் பெற்று அவ்விடம் விட்டு அன்று புதிய பேர் புனைந்து வெவ்வேறு வழியாகத் தனித்தனியே விராடனது அரண் மனைக்குச் சென்றார்கள். முதல் முதலில் தருமபுத்திரர் சன்னியாசி உருவத்துடன் கங்காபட்டன் எனும் பெயரும் தரித்து விராடனைக் கண்டு, "மன்னர்பெரும! உனக்கு நலம் உண்டாகுக. நான் வேத சாஸ்திரங்களில் வல்லேன். இதுவரையில் நான் தருமபுத்திரரை அடுத்திருந்தேன்; அவர் அஜ்ஞாதவாசம் சென்றமையால் நான் உன்னிடம் வர லாயிற்று. அறநூல், மறைநூல், சோதிடம, கவறுடல் முதலியவற்றால் உன்னை மகிழ்விப்பேன். என்னை ஆதரிப்பா யாக," என்று வேண்டினர். மன்னன் உவகை மிகுந்து அங் ஙனமே செய்ய இசைந்து அவரை உபசரித்தான். அதன்பின் வீமன் அங்கு வந்து, "அரசர்பெரும! என் பெயர் பலாயனன். யான் இதுகாறும் தருமபுத்திரருக்குப் பாகனாய் இருந்தேன் அடு தொழிலில் வல்லேன்," என்று கூறி அவ் வரண்மனையில் மடைப்பள்ளியில் அமர்ந்து அடிசில் அட்டு, அனைவரையும் மகிழ்ந்து உண்பித்துத தானும் வயிறார உண்டு காலங்கழித்து வந்தான். அருச்சுனன், பேடி யுருவம் புனைந்து பிருகந்நளை எனும் பெயர்பெற்று அங்கு அந்தப்புர ஸ்திரீகளுக்கு, ஆடல், பாடல், அபிநயம் முதலிய பயிற்றும் பணியை ஏற்றான். நகுலன், தாமக்கிரந்தி எனும் பெயருடன் அங்கு அசுவ சாலைக்குத் தலைவனாய்ப் பரிகளைப் பாதுகாத்துப் பழக்கும வேலையில் அமர்ந்தான். சகதேவன், தந்திரபாலன் எனும் பெயர்கொண்டு ஆனிரை மேய்த்து, அவ் வரண்மனையிலுள்ள கறவைகள் மிகுந்து வளரச் செய்வானானன். பாஞ்சாலி,

சைரந்திரி நாமம் சூடி, விராடனது பட்டமகிஷியாகிய சுதேஷ்ணாதேவியை அணுகி, "தாயே! நான் இந் நாள்வரையில் திரௌபதிக்குப் பணிப்பெண்ணாய் இருந்து அவட்குத் தேகாலங்காரம் செய்து வந்தேன். பாண்டவர்களுடன் அவளும் அஜ்ஞாதவாசம் சென்றாள். உம்மிடம் அப் பணி செய்து பிழைக்கலாமென்று வந்தேன். என்னை ஆட்கொண்டு ஆதரிப்பீரேல் நலமுண்டு," என்று வேண்டினாள்.

இங்ஙனம் வேண்டலும் சுதேஷ்ணை அன்பு மிகுந்து உள்ளம் தெளிந்து சைரந்திரியைக் காத்து வந்தாள். இங்ஙனம் இருக்கையில் விராடனது மைத்துனனும் படைத் தலைவனுமாகிய கீசகன் தீய எண்ணத்துடன் பாஞ்சாலியைப் பிடிக்கத் தலைப்பட்டான். வீமன் அதனை அறிந்து நடு நிசியில் கீசகனைக் கொன்று ஒழித்தான்.

பாண்டவர்கள் மாறுவேடம் பூண்டு, விராட நகரத்தில் வாழ்கையில் அங்கு மாதம் மும்மாரி தவறாமல் பெய்யப் பஞ்சம் சிறிது மின்றிச் செழிப்பு மிகுந்து செல்வம் வளர்ந்தது. நீர் நிலைகள் எல்லாம் நிறைந்து வழிந்தன; செடி, கொடி, மரங்கள், யாவும் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்து இன்பம் தந்தன; பறவைகள் அந்நகரில் வந்து கூடிக் களித்தன. ஆனிரைகள் வயிறார மேய்ந்து குடம் பெருகக் கறந்தன. நல்லோர் உறைதலால் நாடு நலம் பெறுமீ என்பது பொய்யாகா தன்றோ?

---

## 2. நிரை மீட்சி.

பாண்டவர்கள் பன்னீராண்டு காடுறைந்து பின்பு விராட நகரத்தில் அஜ்ஞாதவாசம் செய்கையில் அவர்களைத் தேடியறியும்பொருட்டுத் துரியோதனன், எங்கும் தூது விடுத்திருந்

தான். அந் நாளில் அவர்களை இன்னாரென்று கண்டுபிடித்து விடின், மீண்டும் அவர்களை அடவிக்கு ஓட்டிவிடலா மென்பது அக் கொடியோன் எண்ணமாகும். விடுத்த தூதர், பலவிடங் களிலும் அலைந்து திரிந்து ஐவரைக் காணுமல் மீண்டு துரியோ தனனைக் கண்டு, "இராசாதி இராசனே! பாண்டவர்களை எங்கும் கண்டிலோம்; அடவியில் அவர்கள் இறந்தனர் போலும். இனி உமக்குக் கவலை யில்லை; நாடு முழுமையும் நீரே இனி ஆளலாம்," என்று கூறி வாழ்த்தினர்.

அம் மொழி கேட்டு அரவுயர்த்தோன் மகிழ்ந்திருக்கை யில் அத் தூதர்களில் ஒருவன், "வேந்தே! விராட இராசனது அரண்மனையில் வதியும் சைரந்திரி எனும் பணிப்பெண் ஒருத் தியைக் கீசகன் விரும்பினனும். அவன் ஒரு கந்தருவனால் கொலையுண்டனனும். இஃது ஓர் அற்புத விஷயம்," என்று கூறலும், துரியோதனன், "ஆ! ஆ! இது என்ன புதுமை! கீசகன், சராசந்தன், பகாசுரன், வீமன், நான் ஆகிய ஐவரும் தனித் தனியே பதினுயிரம் யானை பலம் கொண்டவர்கள். சம பலம் வாய்ந்த எங்களைக் கொல்வது எவர்க்கும் அரிதாகும். யாங்களே ஒருவரொடொருவர் மலைந்து மாள வேண்டும். முன்பு சராசந்தனையும், பகாசுரனையும் வீமனே கொன்றுன். ஆதலால் கீசகனைக் கொன்றவன் வீமனன்றி வேறு யாசா யிருக்கக்கூடும்! பாண்டவர்கள், விராட நகரத்தில் வதிகின் ருர் போலும்," என ஊகித்து அவர்களைக் கண்டு பிடிப்ப தெனத் துணிந்தான்.

அங்ஙனம் துணிந்தவன் படையுடன் சென்று விராட நகரத்தை இரு புறத்திலும் வளைத்து அங்குள்ள ஆனிரைக ளைக் கவர்ந்து செல்லத் தலைப்பட்டான். கங்கபட்டர், பலா

யனன், தந்திரபாலன், தாமக்கிரந்தி ஆகிய இந் நால்வரும் விராட ராசனுடன் சேர்ந்து தென் புறத்தில் துரியோதனன் விடுத்த படையுடன் பொருது வென்று பசுக் கூட்டங்களை மீட்கலாயினர்.

விராடனது புத்திரனான உத்தரன் என்பவன், பிருகந்நளையின் திறமை யறிந்து, அப் பேடியைத் தேரூரும் பாகனாகக் கொண்டு வடதிசை ஏகி, துரியோதனனுடைய திரண்ட சேனையைக் கண்டான். காணலும், உததரன் அங்குக் கணப் போதும் இருக்கச் சகியானாய் அஞ்சி நடுங்கித் தேரினின்று குதித்து ஓடினான். பிரகந்நளை, அப்பொழுது உத்தரனைப் பிடித்துக் கொணர்ந்து தேர்க்காலில் இறுகக் கட்டி, முன்னம் மயானத்தில் வன்னி மரத்தின்மீது வைத்த ஆயுதங்களை எடுத்து வந்து, துரியோதனாதியருடன் கடும் போர் தொடங்கி வென்று ஆனிரைகளை மீட்டலும், உத்தரன் மகிழ்ந்தான். அஜ்ஞாத வாசகாலம் அன்றோடு முடிவு பெற்றதால் அருச்சுனன், உண்மை உருவத்துடன் தோன்றி அனைவரையும் வியப்பித்து, உத்தர குமாரனுடன் அரண்மனை வந்து சேர்ந்தான். முன்னம் கூறித்தபடி பதின்மூன்று வருடமும் கடந்து விட்டதெனப் பாண்டவர்கள் வெளிப்பட்டாரென்று துரியோதனன் அறிந்து மனவருத்தத்துடன் நடுநிசியில் அத்திநபுரம் போய்ச் சேர்ந்தான்.

தென் திசையினின்று விராடன் மீண்டு நகரம் வந்து சேர்நதான். உத்தர குமாரன் தனது தந்தையை வணங்கி நிகழ்ந்த செய்தி யாவும் உரைத்தலும் விராடன், மைந்தனது வெற்றி கேட்டு மகிழ்ந்து இனிது இருநதான்.

மறுநாட் காலை பாண்டவர்கள், நீராடி தேகாலங்காரம் செய்து கொண்டு, பாஞ்சாலியுடன் விராடனது சபா மண்ட

பம் நண்ணித் தங்கள் வெளிப்பாடு கூறலும், அம் மன்னன் திடுக்கிட்டு " ஆ! ஆ! உங்களை இன்னாரென்று அறியாது உங்கட்கு இன்னல் புரிந்து ஆண்டேன். என்னை நீங்கள் மன்னிக்க," என்று பல வினயமொழி கூறி வணங்கித் திகைத்தான். ஆங்குச் சபையில் இருந்தோர் யாவரும் பாண்டவர்கள் வெளிப்பாடு கேட்டு வியந்து மகிழ்ந்திருந்தனர்.

---

## 3. திருமணம்

இங்ஙனம் இருக்கையில் உத்தரன், தந்தையை நோக்கி, " ஐயா! நமக்குப் பேருதவி புரிந்த அருச்சுனனுக்கு நமது கன்னிகையை விவாகம் செய்விப்போம். நாம் பாண்டவர்களைப் பூசித்து அவர்களை நமக்கு உறவினராகக் கொள்வோம். இவ்வாறு செய்யாவிடில் நமக்கு நன்மை யுண்டாகாது," என்றான்.

விராடன் அதற்கு இசைந்து, தன் மகள் உத்தரையை மங்கள ஸ்நானம் செய்வித்து, சர்வாலங்காரத்துடன் சபைக்கு வருவித்துப் பின் தருமபுத்திரரை நோக்கி, " அறக்கொழுந்தே! நீறு பூத்த நெருப்பைப்போல் மாறு வேடத்தால் மறைந்திருந்த உமக்கு நான் பல பிழைகள் செய்துவிட்டேன். என் பிழைகளை நீர் பொறுத்தருளும்; எனது அருமை மகளாகிய இவளை உமது தம்பி அருச்சுனனுக்குக் கொடுக்க விரும்புகிறேன்," என்றான். அம்மொழி கேட்டு யுதிஷ்டிரர் மகிழ்ந்து விராடனை நோக்கி, " வேந்தே! நீர் இது வரையில் எங்களைக் காப்பாற்றிக் கரைசேர்த்ததால் நாங்கள் உமது உதவியை மறவோம். இக் கன்னிகையை அருச்சுன

னுக்கு மணம் செய்விக்க நீர் கருத்துக்கொண்டது எனக்கு மிக்க ஆனந்தம் விளைக்கின்றது; இனி உமது அபிப்பிராயப் படியே நடப்போம்,'' என்று கூறினர்.

அவர் அங்ஙனம் கூறலும் அருச்சுனன் அக் குறிப்பு அறிந்து, விராடனை நோக்கி, "அண்ணலே! நீர் அன்பின் மிகுதியால் கூறுவது தகுதியே யாயினும் உமது மகள் விவாகத்தைக் குறித்து நான் சிறிது சொல்கிறேன்; கேளும்; சென்ற ஓர் ஆண்டளவாக இப்பெண் என்னைப் பிருகந்நளை யென்றே எண்ணி என்னிடம் பல இரகசியங்களை வெளியிட்டிருக்கிறாள்; அன்றியும் இவள் என்னிடத்தில் நாட்டிய வித்தை பயின்றாள். யான் இவட்குக் குருவாகின்றேன்; குரு, சிஷ்யையை மணக்கக்கூடாதெனச் சாஸ்திரம் இருப்பதால், நான் இவளை மணம்புரிவது முறையல்ல. ஆதலால் நீர் யான் சொல்கிறபடி செய்யும்; அபிமந்யு என்று எனக்கு ஒரு மகன் இருக்கின்றான். அவன் ஸ்ரீ வாசுதேவனது உடன்பிறந்தாளிடம் பிறந்தவன்; அவன், அழகும் திறமையும் வாய்ந்தவன். இக் கன்னிகையை அவனுக்கு விவாகம் செய்ய எண்ணுகிறேன். நீர் இதற்கு உடன்படவேண்டும்,'' என்று தன் கருத்தை வெளியிட்டான். விராடன் அம் மொழி கேட்டுப் பேரானந்தம் அடைந்து அங்ஙனமே செய்ய இசைந்தான்.

அதன்பின் விராடன், உத்தரையை அபிமந்யுவுக்கு விவாகம் செய்விக்கத் தீர்மானித்துத் திருமண நாளை குறிப்பிட்டுத் தூதர்களை எங்கும் போக்கி, உறவினரையும் நண்பர்களையும் வருவிக்கலாயினன். பாண்டவரும் தமது பந்துக்களுக்குத் தூது விடுத்துத் தங்கள் வெளிப்பாடும் திருமணச் செய்தியும் அறிவித்து, அனைவரையும் அழைப்பித்தனர்.

கிருஷ்ணன் பலராமன் முதலானோர், குடும்ப சமேதராய்ச் சகல பரிவாரங்கள் புடை சூழ, சுபத்திரையையும் அபிமந்யு வையும் அழைத்துக்கொண்டு துவாரகையிலிருந்து விராட நகரம் வந்து சேர்ந்தனர்.

பலராம கிருஷ்ணர்கள் வந்த செய்தி கேட்டுத் தரும புத்திரர் தம்பிமார்களோடும் விராடராசனோடும் பதினெண் வகை வாத்தியங்கள் முழங்க ஆனந்தக் கண்ணீர் பெருக எதிர்கொண்டு சென்று, நமஸ்கரித்துப் பின் கைந்நீரும் அடி நீரும் உண்ணீரும் தந்து, அன்னோரை உபசரித்துக் கை கூப்பி நின்றார். திரௌபதியும், விராடராசனது பட்ட மகிஷியாகிய சுதேஷ்ணை தேவியும், ஸ்ரீ ருக்மிணி முதலானோ ரைப் பூசித்து நல்வரவு கூறி மகிழ்ந்திருந்தனர்.

இவர்கள் இங்ஙனம் இருக்கையில் பாஞ்சாலி, ஸ்ரீ வாசு தேவன் அருகிற் சென்று தண்டம் சமர்ப்பித்துக் கண்ணீர் பெருக நின்றாள். கிருஷ்ணன், அவளை அருளுடன் நோக்கி, தமது திருக்கைகளால் அவள் கண்ணீரைத் துடைத்து, "அன லில் தோன்றிய அணங்கே! கற்பின் கொழுந்தே! நீ ஏன் வருந்துகின்றனை? உன் குறை இனி நீங்கும்; நான் அருச்சு னனுக்குச் சகாயமாயிருந்து துரியோதனாதியரை ஒழித்து உன் சபதத்தைப் பூர்த்தி செய்விப்பேன்; பாண்டவர்கள் நலம் பெறும் நாள் நண்ணிற்று. யான் உன் கருத்து முற்றும் அறிவேன்," என்று கூறித் தேற்றினர்.

பிறகு அனைவரும் ஒருங்கு சேர்ந்து நகரத்துள் பிர வேசித்தனர். இதற்குள், காசி ராசன், பாஞ்சால மன்னன், முதலிய பிற அரசர்களும் அங்கு வந்து கூடினர். நகர மெங்

கும் தேர்களும் யானைகளும் குதிரைகளும் வாகனங்களும் நிறைந்திருந்தன. விராடன் தனது நகரை அழகாய் அலங்கரித்து, நன்முகூர்த்தத்தில் உத்தரைக்குத் திருமணம் செய்விக்கத் தொடங்கினான்.

தருமபுத்திரர், வேதியரைக்கொண்டு அபிமந்யுவுக்குச் சாந்திகளை உரியபடி செய்வித்து, அவனைச் சிறந்த ஆடையாபரணங்களாலே அலங்கரித்து, விவாக மண்டபத்திற்கு அழைத்து வந்தனர். சுதேஷ்ணுதேவியும் மற்றுமுள்ள இராஜஸ்திரீகளும், மணமகளுக்கு இனிய கோலம் செய்து மங்களமாக அங்குக் கொண்டு விடுத்தனர். உத்தம வேதியர் சாஸ்திர விதிப்படி திருமணச்சடங்கை ஆரம்பித்தனர். விராட இராசன் இரத்தின கும்பத்தைக் கையில் எடுத்து, மணாளனை மணையில் வீற்றிருக்கச் செய்து, தாரை வார்த்துக் கன்னிகையைத் தானம் செய்தான்.

தௌமியமா முனிவர், மந்திர விதிப்படி ஓமம் செய்து பாணிக்கிரகணம், கங்கண தாரணம் முதலிய வைதிகங்களைச் செய்வித்து விவாகத்தைப் பூர்த்தி செய்தார். அந்தணர்கள் மணமக்களை ஆசீர்வதித்தார்கள். விராடன் மன மகிழ்ந்து வேதியர்க்குப் பலவித தானங்களைச் செய்து எல்லோரையும் பூசித்தான்.

பலராமர், கிருஷ்ணன், பாஞ்சாலன் முதலானோர் அரிய பரிசுகள் உதவி, மணமக்களை ஆசீர்வதித்து, விராடன் அளித்த நல்விருந்தினை உண்டு அக மகிழ்ந்திருந்தனர்.

# குறிப்புரை

# குறிப்புரை

பக்கம்.

5. எழில் - அழகு ; ஆயர்பாடி - இடையர் சேரி ; விண்ணவர் - தேவர் ; பூதனையை வீழ்த்தியது..........கோவர்த்தன மேந்தியது - கிருஷ்ணன் பால்யத்தில் செய்த திருவிளையாடல்கள் ; வதிந்து - வசித்து.

6. ஊணும் - உணவும் (பகுதி நீண்டது); வெதும்பி - புழுங்கி ; நன்னிமித்தங்கள் (நல்+நிமித்தங்கள்)-நற் சகுனங்கள் ; கவற்சி - கவலை.

7. பூபாலர் - அரசர் ; நன்னாளையும் - (நல்+நாளையும்).

8. மணாளன் - காதலன் ; முறுவல் - சிரிப்பு ; உய்யும் - பிழைக்கும் ; கழலிணை - இரண்டு பாதங்கள்.

9. மன்றல் - கல்யாணம் ; புடை - பக்கம்.

10. நிருபம் - கடிதம் ; நீலமால்வரை - நீல நிறங் கொண்ட பெரிய மலை (திருமால், கிருஷ்ணன்) ; மறையவர் - பிராமணர் ; தீங்குரல் (தீம்+குரல்) - இனிய குரல்.

11. பேரவா - பேராசை ; பணித்தனர் - கட்டளையிட்டனர்.

12. திருமுகம் - கடிதம் ; கரத்தில் - கையில் ; வரைந்த - எழுதிய.

13. அழலிடை - நெருப்பில் ; அலாயுதம் - கலப்பை.

14. கதலி - வாழை ; கமுகு - பாக்குமரம் ; கொண்டல் - மேகம் ; நைவாளாயினள் - வருந்தினள்.

15. முழுமதி - பூர்ண சந்திரன் ; அரவணை - சர்ப்ப சயனம் ; வலம்புரி - வலது பக்கமாகச் சுழி கொண்ட சங்கு.

பக்கம்.

16. தினகரன் - சூரியன் ; பொற்பு - அழகு ; பாவை - பதுமை ; முளரி - தாமரை ; கயற்கண்ணி - கயல் மீன் போன்ற கண்கள் கொண்டவள் ; அஞ்சனம் - மை ; பிறைநுதல்-பிறை போன்ற நெற்றி (உவமைத் தொகை) ; ஒண் மணி - ஒளி பொருந்திய மணி ; கமலச்செல்வி - இலக்ஷ்மி ; பாங்கியர் - தோழியர் ; பல்லியம் (பல்+இயம்) - பலவகை வாத்தியம்.

17. கண்ணுதல் - சிவபெருமான் (நெற்றிக் கண்ணன்); செம்மலை - பெருமாளை.

19. நங்கை - தங்கை ; குளித்து - வளைத்து ; வறியான் ; எளியவன்.

20. உருப்பிணி - ருக்மிணி ; செக்கர் - சிவந்த.

23. ஞாயிறு - சூரியன் ; ஈனும் - பெறும் ; வள்ளலை - அளவின்றி கொடுப்பவனை.

24. வள்ளுகிர் - வெண்மையான நகம் ; அரிமா - சிங்கம் ; சீயம் - சிங்கம் ; துஞ்சும் - தூங்கும்.

25. பகலவன் - சூரியன் ; மருப்பு - தந்தம் ; ஒசித்த - ஒடித்த.

26. அபராதம - பழி ; மற்போர் (மல்+போர்) - மல்ல யுத்தம்.

28. முகில் - மேகம் ; பிலம் - குகை ; வெற்பு - மலை.

29. எண்கின் வேந்து - காடி ராஜன் ; கோளரி - சிங்கம் ; புளகம் - மயிர்க்கூச் செறிதல்.

33. மலர்ப் பாதம் - மலர்போன்ற பாதம்.

34. அண்மி - சமீபித்து ; சமர் - போர்.

35. பொருது - சண்டைசெய்து ; சிரம் - தலை.

36. வாளி - அம்பு , புததிரகாமேஷ்டி - புததிரனை விரும்பிச் செய யும் யாகம் ; வேள்வி - யாகம்.

37. ஊழ் - விதி ; தநுநூல் - வில்வித்தை , மாண்பு - பெருமை.

பக்கம்.

38. குலாலன் - குயவன்.

39. அரசவை - இராஜசபை; கணை - அம்பு; திகிரி - சக்ரம்; இலக்கை - குறியை.

40. சிலை - வில்; வில்லியர் - வில்லைக் கையிலேந்திய வீரர்கள்.

42. பார்த்தன் - அருச்சுனன்; ஐயம் - சந்தேகம.

43. கொழுநரை - கணவரை; வேட்டல் - விவாகம் புரிதல் ('வேள்' பகுதி, 'தல்' தொழிற்பெயர் விகுதி).

44. பரி - குதிரை; களிறு - யானை.

47. ஆயுதசிக்ஷை - படைக்கலப் பயிற்சி.

49. விதானம் - நடைப்பந்தல்; ஏற்ப - தகுதியாக.

50. அநுக்கிரகம் - அருள்; மதுபானம் - கள் குடித்தல்.

52. குற்றேவல் (குறு+ஏவல்) - சிறு வேலை; சால - வெகு.

53. அனுமதி - உத்தரவு; விருத்தாந்தம் - செய்தி.

55. கருணை - தயை; விசிதமாக-விஸ்தாரமாக; பொலிவு - அழகு.

58. யாதவர் - இடையர்; விழா - உற்சவம்.

59. அணிகலன் - ஆபரணம்; புனைந்த - கொண்ட; கோடி - புது வஸ்திரம்; தாமம் - மாலை; பாணிக்கிரகணம் - கையைப் பிடித்தல்; தம்பதிகள் - மணமக்கள்; இலாஜ ஹோமம் - பொரியைக் கொண்டு ஹோமம செய்தல்.

61. ஆரவாரம் - பேரிரைச்சல்; சாரத்தியம - தேரோட்டுதல்.

63. தேர்ந்து - நிச்சயித்து; பணிப்பெண் - வேலைக்காரி; பரிசுகள் - வெகுமதிகள்.

67. அஜ்ஞாத வாசம் - (தெரியாமல்) ஒளிந்து வசித்தல்; அடவி - காடு.

பக்கம்.

68. தூய - பரிசுத்தமான ; மறைநூல் - வேதம் ; உவகை - சந்தோஷம் ; பணி - வேலை.

69. ஆனிரை (ஆன்+நிரை) - பசுக்கூட்டம் ; தேகாலங்காரம் (தேக+அலங்காரம்) சரீரத்தை அழகு செய்தல்.

70. அரவுயர்த்தோன் - சர்ப்பக் கொடியோன் (துரியோதனன்) மலைந்து - சண்டையிட்டு.

72. இன்னல் - துன்பம்.

74. கைந்நீரும் அடிநீரும் உண்ணீரும் - அர்க்கிய பாத்திய ஆசமனம் ; நண்ணிற்று - கிட்டியது.

75. கோலம் - அழகு ; கும்பம் - குடம்.

---

Printed at the Kesari Printing Works, G. T., Madras.

40327